உ

சிவமயம்.

ஸ்ரீமத்கூவலப்புரம்.

# அன்னதான மகத்துவபுராணம்.

இஃது.

பால்வனம் - வித்வான்

**பெரியசுப்பாரெட்டியார்**

இயற்றியது.

விருதுபட்டி

பொன்னம்பலதேசிகரவர்கள் மாணாக்கர்

ஸ்ரீமத். இராமலிங்கசுவாமிகளால்

சென்னை-இட்டா

**பார்த்தசாரதிநாயுடு**

அவர்களது

ஸ்ரீபத்மநாபவிலாச அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

1900.

நெ. 1 திருப்பள்ளிசந்து பெத்துநாய்க்கன் பேட்டை.

இதன்விலை ரூபா - 1.

கடவுள் துணை.

# சிறப்புப்பாயிரம்.

திரிசிரபுரம் வித்துவானும்

S. I. R. ஸ்டேஷன் மாஸ்டருமாகிய தி. ராஜ.

காத்தபெருமாள்பிள்ளை யவர்கள் இயற்றியது.

தனையேநிகர் திருக்கூவல புரமேவிய சதுரன்
றாள்பங்கயம பணியுந்சிவ தருமக்குண முடையான்
அனையேயெனப் பலவன்பர்க ளடியின்முடி சூட்ட
வருட்டங்கிய குருசுந்தர மூர்த்திதிருப பெயராற்
கனைபாற்கட லமுதோவென வுண்டோருளங் களிக்கக்
கட்டித்தயிர் பால்நெய்நறுங் கனிவர்க்கமுங் கலந்து
தினமேமொழி அனதானத்தின் செயல்தங்கிய கதையைச்
செய்தான்றர முரைக்கவெவர் திறமோபுல வீரே. (க)

(வேறு.)

கம்பரொட்டக் கூத்தர்புகழேந்தி யவ்வை
காரிதண்டி படிக்காசு காளமேகம்
உம்பர்புகழ் புலவர்சிகா மணிகளெல்லா
மொழிந்தனரென் றயர்ந்துமன மொடுங்குங்காலை
யெம்பெருமான் றிருவருளோ குமாரசாமி
யியற்றியநற் றவப்பயனோ விருநீர் சூழ்ந்த
அம்புவியோர் தமிழருமை யறியவென்றே
அவதரித்த கலைமகட்கோ ரரங்குதானே. (உ)

என்னபல கலைப்புலவ ரிறும்பூ தெய்த
வியலிசைநா டகத்தமிழ்க்கோ ரிறைவ னாகித்
தன்னிகரில் லாததவ மகிமை பூண்ட
சட்டிமுனி கட்டளையைத் தலைமேற் கொண்டு
மன்னவருஞ் சபாசெனவே யன்னதான
மகத்துவநற் புராணமதை வகுத்திட் டானாற்
சொன்னமொழி தவறாத கீர்த்தி வாய்ந்த
சுப்பய்யக் கவிராஜ சுகுணன் மாதோ. (ங)

பிரமகபாலம்

திருவருளானந்த வள்ளலாரவர்கள் மாணாக்கர்

திருநாகை வெளிப்பாளையம்

மயில்சுந்தரசுவாமிகளியற்றியது.

மதியையென்றவர்பானண்ணி மயங்குறுமதியைநாளு
மதிகமாயுற்றசீர்சா லரியசுந்தரரொண்டேனைக்
கதிபடைசெவிவாயுண்ணக் கருத்தெனும்வளையாலள்ளிச்
சுதைநிகர்கவியாற்பெய்தான் சுப்பையகவிஞன்மன்னே.

இராமநாதபுரம் சமஸ்தானத்தைச்சேர்ந்த

தாமோதரபுரம் மகாவித்துவான் - ம-ா-ா-ஸ்ரீ

சுப்பிரமணியபிள்ளையவர்க ளியற்றியது.

---

சொல்லைக்கன்னலைத்தருமாச் சூழ்கூவற்சுந்தரமூர்த்தியினற்றாய, வெல்லைச்சீருரையென்ன விளையிற்குணச்சட்டிமுனிமிசைப்பத்தொன் னூல், வில்லைக்கொண்டுள்ளிருளை விலக்கறிஞன் பால்வனமே விரும்பி வாழ்வோன், குல்லைத்தொங் கலின்மவுலி யனையான்சுப் பயக்கவிஞன் கூறினனே. (௧)

இதுவுமது - வேறு.

எண்ணர்க்கா மெழுத்தர்க்கா மறைவலோர்க்கா மிருமூன்று சாத்திரர்க்கா மிசைநூலோர்க்காங், கண்ணவர்க்காம் விரிஞ்சர்க்கா முக்கண்ணர்க்காங் கணபதிக்காங் கந்தர்க்காங் கலைவலோர்க்கா, மண்ணிற்பால் வனத்துறைசுப் பயவேள்கூவன் மாநகரின்மேவியசுந் தரரின் வாய்மை, பண்ணிற்கொண் டனதான மகத்துவத்தைப் பாலித்தநூறளையே பகரிஞ்மாதோ. (௨)

குழந்தாபுரிக்கிராமக்கணிகரும்

மகா வித்துவானுமாகிய ம-ள-ள-ஸ்ரீ,

## திருஞானசண்முகம்பிள்ளையவர்களியற்றியது.

—:*:—

பாணமகத்துவட்பண்ணும் படியமுதிற்சுப்பையப்பண் பாவலோன்மே
லானமகத்துவகைதரு மரும்பயனின்மிக்கொளு மடைவாலன்ன
தானமகத்துவமுயர்சுந் தரமூர்த்திசரிதை யுறத் தமிழ்யாப்பான்மெய்ஞ்
ஞானமகத்துவமையற நண்ணுசட்டிமுனியருள நன்கீந்தானால்.

குட்டிலொட்டி

ம-ள-ள-ஸ்ரீ, மதுரகவிதாசு

## அழகிரிசாமிரெட்டியாரவர்களியற்றியது.

—*—

கடலமுதனைய வினியவோதனமிக் காசினியாவையுமருந்தப், பட
ங்குயர்தருங் கூவலைப்புரப்பெருஞ்சீர்பாடினன்புலமையோர்மகிழக், குட
ங்கவிழ்மதுவாமெனத்துளிமலர்த்தேன் குடைந்தளியுணத்தருசோலை,
தடந்திகழ்கோவிற்பிடங்குபால் வனம்வாழ்தருவெனுஞ்சுப்பயமதனே.

விருதுபட்டி ம-ள-ள-ஸ்ரீ, டி. யன்.

## கந்தசாமிபிள்ளையவர்களியற்றியது.

—:*:—

நன்னலஞ்சேர் கூவனகர்ச்சுந்தரேசர் நல்லருளானிகழுமன தான
மேன்மை, தன்னைமதிநதியணிவோனருளினற்செந்தமிழிலனதானமக
த்துவநூலசொற்றான், மன்னவர்கள்புகழ்தென்பால்வனத்திலென்றும்
வாழ்வுறுசுப்பையாநாவலவனிப்பச், சொன்னலமாகியவமிர்தமுண்போர்
நாளுந் துகளில்செல்வம்பெற்றீற்றிற்சுவர்க்கந்துய்ப்பார்.

விருதுபட்டி ம-ள-ள-ஸ்ரீ
பொன்னம்பலதேசிகரவர்கள் மாணாக்கர்
ஸ்ரீமத். இராமலிங்க சுவாமிக ளியற்றியது.

தேமணக்குஞ் செழுங்கமலத் திருவளர்திண் புயத்தேவுஞ் சிரநான்கோனுங், காமணக்குங் கடவுணகர்க் காவல்செயா யிரங்கணனுங் காணற்கெட்டாப், பூமணக்குடபொற்பதத்தைப் பூசைபுரிசுந்தரர்பொற்புடனவாழ்வுற்றப், பாமணக்கும புலவர்பதி கூவன்மான் மியத்தை யருந் தமிழ்ப்பாவாலே. (௧)

செப்பமென ஞானமுயர் சட்டிமுனி யிசைப்பவெற்குச்சிறந்தநன்னூ, றப்பறவேயோதுவித்தோன் றமிழ்நூற் சலதிகரைகண்டவங்கமெப்புவியு மதிக்குமுயர் பாலுவனைப்பதிமேய வெங்கோன் செல்வச், சுப்பையநற் கவிஞனென்னதானமகந் துவமென்னச் சொன்னநூலே. (௨)

அரசருக்கு மனுநூலா மணிமாவா தியசித்தர்க் கான நூலாம்
பரநிலைதேர் ஞானியருக் குபநிடத வேதாந்தப் பண்பார் நூலாந்
தெருளுளசோ திடாதமக்குக் கணிதமதாம பூசுரர்க்குச் சிறந்தவேதங்
கருணிகருக்கெண்ணுகுங் கவிஞர்களுக்கிலக்கணமாங் கருதுங்காலே.( )

வாசுதேவநல்லூர் மகாவித்துவான் ம-ள-ள-ஸ்ரீ
பழனியாண்டிப்புலவ ரவர்களியற்றியது.

அன்னத்துவசன்விதித்தவுயிர்க் கன்னத்துவசாட்டியனங்
கன்னற்பாகுகனிதேன்பால் கலந்துகனிதெக்காலுமருள்
செந்நெற்பழனவளஞ்சேருந் தெய்வத்திருக்கூவலப்புரஞ்சீர்
மன்னத்தருமபுராணமென வரைந்தான்மகிழ்சுப்பையவேளே.

பால்வனம் ஸ்கூல் மாஸ்டர் ம-ள-ள-ஸ்ரீ
வாழவந்தபிள்ளை யவர்களியற்றியது.

செல்லினங்கள் பொழிலணவ மயில்களாடுஞ் செங்நெல் கன்னல்கதலி பலவேலிசூழுஞ், சொல்லரிய கூவன்மா நகரின்மேவுஞ் சுந்தரமூர்த்தியினன்மட பதியினருந, நல்லவன தானநிகழ் மகிமைதன்னை நன்குணர்வோர் செவிக்கமுது நல்கன்மானத், தொல்லுல கெலாம்புகழ் புராணமாகச் சுப்பையவேள செந்தமிழாற் சொற்றான்மாதோ.

சிறப்புப்பாயிர
முற்றிற்று.

சிவமயம்.

# பிழைதிருத்தம்.

| பக் | கவி | வரி | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|---|
| 10 | 13 | 2 | பனை | பணை |
| 33 | 51 | 4 | பொருவானவை | பொருளானவை |
| 36 | 18 | 4 | ப.றோழியர் | பஃறோழியர் |
| 3[illegible] | 19 | 3 | மெற்றார் | பெற்றார் |
| 38 | 27 | 2 | கொணடவரேனு | கொண்டவரெனினு |
| 38 | 27 | 3 | வரர்போ | வழிநூர்போ |
| 38 | 27 | 4 | இருப் திலென்ன | இருப்பரிதென்ன |
| 38 | 30 | 4 | பகர்வதிலென்ன | பகர்வரிதென்ன |
| 39 | 40 | 4 | தாற்பவன் | தார்பவன் |
| 41 | 50 | 3 | வானொன்று | வாறொன்று |
| 41 | 51 | 1 | களைமாற்றி | கலைமாற்றி |
| 41 | 56 | 2 | முனிவறபோ | முனிவர்ப்போ |
| 49 | 13 | 3 | னியறறும் | னியற்றும் |
| 52 | 40 | 3 | முயர் நிலை | முயர்விலை |
| 53 | 44 | 1 | அள்ப்பரு | அளப்பரு |
| 54 | 57 | 4 | ணந்தனவிலு | ணந்தர்நவிலு |
| 55 | 1 | 3 | தருமமிரத | தருமமிர்த |
| 58 | 26 | 4 | கலாயினையே | கலாணையே |
| 64 | 12 | 3 | சார்வர் | செய்வோர் |
| 67 | 34 | 4 | பறிநதிடாப் | பறிந்திடப் |
| 69 | 11 | 4 | மிரண்மிட்கல் | மிருண்முட்கல் |
| 69 | 13 | 1 | பாசத்துள்ள | பாசத்துள்ளே |
| 71 | 29 | 3 | றண்ணா நயிர் | றன்னாருயிர் |
| 76 | 33 | 3 | னிருபரையுங் | னிருமரபையுங் |
| 77 | 37 | 3 | நவஞ்செறி | நலஞ்செறி |
| 80 | 67 | 2 | புரித்தான் | புரிந்தான் |
| 89 | 61 | 2 | விசும்பில் | விளம்பில் |
| 91 | 72 | 4 | சுவசுந்த | சுவசந்த |
| 92 | 79 | 3 | சீதண | சீதள |
| 95 | 21 | 3 | குனனு | குணனு |
| 96 | 24 | 4 | கோவத் | கோலத் |
| 9[illegible] | 30 | 2 | பம்பு | நம்பு |
| 96 | 31 | 2 | துரிழைப்பது | துயரிழைப்பது |
| 97 | | | பிறனிநயவாமை | பிறனினயவாமை |
| 97 | 34 | 1 | பின்னருலோப | பின்னருமுலோப . |
| 97 | 34 | 1 | பெற்றிராற் | பெற்றியாற் |
| 97 | 38 | 4 | மண்ணாவரே | மன்னா[illegible] |

# பிழை திருத்தம்.

| பக் | கவி | வரி | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|---|
| 98 | 41 | 3 | எளளணவெனு | எள்ளளவெனு |
| 98 | 1 | 4 | மகிழ்சகி | மகிழ்ச்சி |
| 100 | 12 | 1 | கிளையரு | கிளைரு |
| 100 | 13 | 2 | வாஞு | வாஞு |
| 100 | 14 | 1 | னிசைத்தாடி | னிசைத்தபடி |
| 100 | 14 | 2 | காண் | கான் |
| 100 | 16 | 2 | செங்கமலர் | செங்கமலமலர் |
| 101 | 18 | 1 | மவளை | மவனை |
| 101 | 18 | 3 | மரமை | மரபை |
| 102 | 28 | 2 | விளங்கு | விலங்கு |
| 103 | 36 | 4 | னன்னிய | னன்னைய |
| 103 | 37 | 2 | ஞளே | ஞலே |
| 103 | 40 | 3 | ரிறவலர் | ரிரவலர் |
| 105 | 50 | 3 | நு,தஞசி | நுதஞசி |
| 106 | 58 | 2 | முகமுனி | மிகமுனி |
| 111 | 34 | 4 | சூன | சூழ் |
| 112 | 47 | 3 | னடைவி | ளடைவி |
| 113 | 2 | 1 | கழந்த | கழைந்க |
| 113 | 7 | 1 | மவைத்த | மமைத்த |
| 114 | 8 | 2 | வெண் | வென் |
| 116 | 29 | 1 | ஞேதண | ஞேதன |
| 122 | 25 | 1 | மென்றி | மின்றி |
| 126 | 11 | 1 | நீறள்னி | நீறள்ளி |
| 127 | 14 | 3 | கன்னிடர் | கன்னடர் |
| 130 | 35 | 1 | கண்டு | கணடு |
| 130 | 42 | 1 | பங்கரி | பாங்கரி |
| 130 | 42 | 2 | றீரங்கறவ | றீங்ககறவ |
| 132 | 2 | 2 | கூர்தன | கூர்ந்தன |
| 132 | 6 | 3 | மின்னிய | மன்னிய |
| 132 | 7 | 1 | நல்லோகம் | நல்யோகம் |
| 136 | 3 | 3 | விளைவிற் | விளைவினிற் |
| 137 | 44 | 4 | கின்மால் | கின்பால் |
| 139 | 4 | 3 | தோரு | தொறு |
| 139 | 11 | 3 | வாரறி | வாற்றி |

பிழை திருத்தம்,

முற்றிற்று.

உ

கணபதிதுணை.

ஸ்ரீமத் கூவலப்புரம்

# அன்னதானமகத்துவபுராணம்.

## பாயிரம்.

### விநாயகர் வணக்கம்.

சொல்லாருஞ்சீர்படைத்த சுந்தரரன்பாகவுளந் துவசநாட்டி
யெல்லாருமினிதுறவினனைமூவரிந் தெண்ணுனைகமுமியற்று நூறோர்
வல்லாரும்புகழ்சரிதந் தனைமறிப்வி ரிசைப்பாரிதுமனமாசற்ற
நல்லாரும்பரும் ணிவிநாயகனை மொழிர்பதமலரந் தலைமேற்கொள்வாம்.

### பரமேசுரன்றுதி

அஞ்சக்கரத்தாற்சலந்தரனை யமரிற்செகுப்பானரியகத்தி
லஞ்சக்கரத்தாற்றுதிப்பவுவந் தருளிபமராபமுனிவரர்கண்
டஞ்சக்கரந்நாலந்திரடடியருநதியபின் மீநகலவா
னஞ்சக்கரத்தானமபுரக்குமரன்பொற்றணந்தலைக்கணிவாம்.

### அம்பிகை துதி.

கணபதியைமதியாது தக்கன்வேள்வி
தானியற்றவவன்மகளாந் தன்மையோவிப்
பின்பதிகதவபுரியு நாகவேந்தன
பெருங்களிப்புமேவவவமகளாய்த்தோன்றி
மனபனைகடமைநோங்க வருபான்மேனுள்
வாரிவிடமுண்ட கண்ட மகிழ்நனானே
டன்பதிகமாகவென்றுங் கலந்துவாழு
மம்பிகைபொற்பாதமலரகத்துட்கொள்வாம்.

### கணபதி துதி.

பொன்னுகத்துடையம்பன் புகழநாக நதிநாகர்போற்றநாக
மின்னுகத்திடனுகமிளிர்நாகம் பூணுகவிராக்கும்வேணி
தன்னுகத்திளம்பிறையு நதியுமணியரன்மகிழுந்தனயனுகி
முன்னுகமுகனுகநிலனுகவென்றருண் முன்னவன்றாள்போற்றி.

## குமரவேள் துதி.

பொன்றாளையுடையானை வாமனைந்தீர்த்தாண்டானைப்புகழுளானை
யன்றானைமுகத்தானையடர்த்தானை முன்னாகவன்புற்றானை
வன்றானையசுரர்தமைமாய்த்தானை யமரர்பணிவானைவஞ்சத்
தொன்றானையிருமூன்றானனத்தானை யிருதயத்திலுன்னிவாழ்வாம்.

## திருமால் துதி.

அன்றாழியருணியொற்றால் விரவலர்தமுறையுளறிந்தரிகளோடுஞ்
சென்றாழிகடந்தரக்கர் செருவில்வயம்புனைந்தாயர் சேரிமேவிப்
பின்றாழியுமொருவனைப்பெறவீடு தந்துமறை பிறழ்ந்தோர் தம்மை
வென்றாழி சாத்திரக்கும் விண்டுதிருப்பதமலரை விரும்பியுய்வாம்.

## சரசுபதி துதி

உலகில்வாழுயிர்கள்யாவு முதவியகமலனாவி
னிலகினான்மறைகளாதி யியம்புறுபொருள்கட்கெல்லாந்
தலைமைபெற்றுயர்ந்துமின்னுஞ் சகலர்க்குமுணர்வுநல்குங்
கலைமகள் சரணமென்றுங் கருத்திலிருத்தி வாழ்வாம.

## நந்திதேவர் துதி.

விந்தைசேர்புயன் வேதமந்திரத்
துந்துமேந்திரந தாங்கியொண் வாய்தலி
னெந்தையார்பரமனின் புனைவகிய
நந்திபொன்மலர்த் தாடினாடுவாம.

## தமிழாசிரியர் துதி.

அலைகொள்வாரியை யங்கையிற்கொண்டுணன்
னிலைகொளுந்தமிழ் ணீணிலத்தோதியே
மலையமால்வரை வைகுங்குறுமுனி
யிலகுபாதங்க ளேத்தியுய்வாமரோ.

## திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் துதி.

பொய்ம்மையான வமணெறிபோக்கிமேற்
சைவநன்னெறி யென்றுந்தழைக்கவே
துய்யமன்னனை சிந்தைத்துயரறச்
செய்யுமண்ண றிருவடியேத்துவாம்.

## திருநாவுக்கரசு நாயனார் துதி.

அன்பின்ஞானத் தமிழ்துதும்பாடலா
லென்பினுரங்கொ ளீசனகிருபையால
வன்பிற்கட்டுங்கல வாரிமிதககநல்
லின்பமெய்திய வேந்தலைப்போற்றுவாம

## சுந்தரமூர்த்திநாயனார்துதி.

தெள்ளிதாகிய சிந்தையிற்காதலசெய
தள்ளருமமொழி மறையவரபபகலி
னள்ளிராவினி றனைத்தூதுகொள
வள்ளறாய மலரடிவாழத்துவாம.

## மாணிக்கவாசகசுவாமிகட்டுதி.

நீதியாரநிமயத்தாரின னேருற
காதுருசமபு கவைப்பரியாக்கியு
நாதனரடி நனகு வுணணிய
வாதவூர யாரடிவாழ்த்துவாம

## சிவநேசர்கட்டுதி.

தலமதிற்புலையராசச சண்டித்தவரெரி நூமபொலலாக
கொலைகளவிய மறியெனறும கொடுமைநுதுகாமனாரேனுஞ்
சிலைமலைபாககொண்டோன் சேவடிக்கன்புசெய்யு
நலமிகவுடையரெனனி னடிமையாளுடையராமே

## சுந்தரமூர்த்திசுவாமிகட்டுதி.

எங்கலமுஞ்செழிந்தோங்குஞ் சதுரவரைச்சார யிறைபஞ்சியேத்திக
கன்னலினறசுவைநாவுக் கினிப்பதுபோற திருநாமங்களெவ்வுகூர
வன்னதானத்தையென்று மகிழ்ப்பிசைவிலைநறுத்தி யலங்கிலசீரத்தி
மன்னியசுந்தரமூர்த்தி பொறகமலமலரடியை வணங்கிவாழவாம

## அவையடக்கம்.

தருவெனத்தகைசா றண்ணளியுடனே சார்ந்தடிதொழுமவர்க்குலக
விருளகலொளியா யிருதயத்திலங்கி யின்பமாயிலாசசுகத்தினிலிருத்திக்
கருவுறைகயகதி லொழுந்திடாதரிய கருணைசெயதாளுமெய்ஞ்ஞானத்
திருவுருவாகி யெங்கணுநிறைந்த சிவப்பிரகாசதேசிகரே.

எங்கணுநிறைந்த சிவப்பிரகாச தேசிகரிணையடிமலரைச்
பிங்கலிலுளத்திற் சேர்த்தியெய்ச்சாந்தலிங்க தேசிகன்மலர்ப்பதத்தைப்
பொங்கியவுவகை யாற்றினர்தோறும் போற்றியன்னவரருளுளத்திற்
றங்கியபழமலைமுனியெனவொருபேர் சார்ந்தநற்குமர தேவரையே.

வேறு

இனியதேசிகராய்ச்செயமா விருதயந்திருந்தியாண்டும்
தனையிகரில்லாச்சிற்றதிச் சிதம்பரசாமிதன்னை
வினையகலுளத்திற்கொண்டு விராங்குஞ்சண்முகர்பொற்றாளைப்
புனைசெனியுடையோராரானும் புந்தியாலெழுககான்மிக்கோர்.

வேறு.

எழுந்தொடுசொற் பொருளியாப்பினணியுமென்று விலங்குபஞ்ச விலக்கணங்களினிறைந்து, விழுத்தகுநூல்த்தாங்குமறைநூலகடோர்ந் துவேதாந்தசகுருதிகளுமயலாகிஞானம, பழுத்தசிவப்பிரகாச நாதரெ ன்னுப் பகாகந்தசாமிபதுமாகர்போற்றிச, செழித்தபுகழ்படைத்தச ட்டிச்சாமியென்னுசயிசடபுமந்தசசாமியருட்சிறைதகூர்ந்தே.

கார்தவழுஞ்சதுரவரையீசன்பாதங் கருத்துறுஞ்சுந்தரமூர்த்திக ருணையாலே, நாந்தகழும்வேடந்தவிராழுந்தவன்ன தானமொடெ ண்ணுண்கறழுந்தவத்தோர்வாழ்ந்த, வோதிகழவெஞ்ஞான்றுநிகழ்வ தான விப்பெருமை தனைமுமணேனிலசநூற்கேயப், பார்புகழுமனதான ப்புராணமென்னுப் பகருமெளமரீர்விளிந்நூல்பகாந்தநூமால்.

வேறு.

இழிவுடைசயசொற்களமரா வியான்சொலபுனகவிகளோனும
வழுவிலக்கணத்துக்கென்றுபார்ந்தநூலோர்கூறுர்
பழுதறுசொற்கடோர்தோர் பாலகர்பிதற்றுகின்ற
மொழியையுமகிழ்ந்துகேட்டு முகமலரொளிருமாறே.

போலியென்றுணர்ந்துமப் போலியைப்புலவரெல்லா
நாலினுமபுகலுமாசே நுவலிலககணங்கடோர்ந்தோர்
சால்புறும்பதியையேனுஞ் சார்ந்திலாப்பேதையேன்சொன்
மேலவர்கொள்வரென்று விருப்புடனுரைத்ததாமால்.

கோகிலங்கூவக்கண்டுகுளறியகோட்டான்போலுந்
தோகைமாமயில்களாடசுழலும்வான்கோழிபோலும்
வேகமார்கலுழற்கண்டுவிசைத்தெழுமறுகாற்போன்றும்
நாகமார்முன்னூன்மானப்பகரயான்புகுந்தவாறே.

நல்லவர்நெறியினூற்றும்பூசனைநயந்துமில்லான்
கல்லினுலெறியச்சிந்தைகனிந்தருளீசன்மான
வல்லவரிசைகுன்றாமல்வழுத்து நாவலொப்பநாயேன்
சொல்லிய நூலுட்கொள்ள றூயவர்வழக்கந்தாமே.

வானவர்முனிவர்க்கான்றவரந்தருமீசனன்பார்
மோனசுந்தரரென்றோதுமாத்திதன்சிறப்பிசேர்ந்த
மேனலமானவிந் நூல்விளம்புவோர்விரும்பிக்கேட்போர்
தானமவாதையின்றிச்சம்புதாட்கணியராவரோ.

இம்மையிலங்கணிடுமிருபிலத்துயர்தவிர்வுஞ்
செம்மைசேர்புதல்வர்மற்றுஞ்சிந்தைகூர்பொருள்கள்யாவுங்
கொம்மைமெய்ம்முலையாள்பாகனருளிக்கொளுமடியரன்பும்
பொம்மெனவடைந்துநாளுமபுகழுடன்வாழ்வாமன்றே.

ஆணவமுதலாய்ச்சொன்ன மூவராண்கடந்தறுவர்க்காயந்து
காணுதற்கரியசோதிக்கமலமாமலரினமீது
தானுநன்னடனஞ்செய்யுந்தன்மையுமுணர்ந்துபாரில்
வேணசித்திகளுந்தேர்ந்துவிண்ணவமகிழவாழ்வர்.

பாயிரமுற்றிற்று.

---

## சிறப்புப்பாயிரம்

சொல்லரியகூவமாநகரிலென்றுந்துலங்கியசுந்தரமூர்த்திகருணையாலே, பல்லுயிர்க்குமனதானமரிவிநூற்றுமமன்பினைந்தெனபாலுவணப்பதியினளருங், கல்வியறிவொழுக்கமுயர்புகழ்பெற்றோங்குங்கவின்கொளருணசலதேசிகன் மாங்கற்ற, வல்லதமிழ்நாவலன்சுப்பையவேளிந்தமாநிலத்திற்புராணமதாய்வகுத்தனனால்.

முற்றிற்று.

சிவமயம்.

# ஆற்றுப்படலம்.

நல்லறங்களு மொழுக்கமு நாளுமேமேலோங்கிச்
செல்வமேதிகழ் திருப்புகழ்ப்பாண்டிநன்னாட்டில்
வல்லவையையும் பொருநையென்றிருநதிவனப்பிற்
பல்வளங்களுஞ் செறிதரப்பரிப்பதுபகர்வாம். ௧

அண்ணலாரடி யார்திருநீற்றினையணிந்த
வண்ணமேனியை யானநல்வான்வழிபடர்ந்த
வெண்ணிறத்தன முகில்களாழ்விரிகடல்பருகிக்
கண்ணன்மேனியைக் கப்பமீண்டகன்வெளிகரந்தே. ௨

பொன்னிறத்துளான பொன்னிறத்தண்ணலைக்காண
மன்னிநேர்வரு செயமெனமாலிங்கநாதர்
துன்னுநற்சதுராசலமீதிற்றொறைபுறையான்
மின்னிறக்கவி னேர்வான்வெளியிடைசூழ்ந்தே. ௩

கானற்றேரொடுங் கடுங்கதிர்க் கதிர்களோ படையாய்
வேனிற்றனிருந் தாரசெய விரதத்தினை யுணர்ந்து
வானற்றனையாம் படைகளாற் கோடையை மாய்க்கத்
தானுற்றவெனா முழக்கொடு நடித்துமின்னியதே. ௪

கனக மால்வரை வில்லியைக் காமன்முன்னுவந்து
புனித மஞ்சன மாட்டியுஞ் செயவனைப் பொருவ
நனி தவந்தாகன்ன முதலநாளிலந்தவாக் கெல்லாந்
துனி யறச்சது ராசல மேன்மழை சொரிந்த. ௫

மானி றுத்திய கரத்தினன் மேவுமால் வரைகீழ்ப்
பானி றுத்திய குறிஞ்சிக் கப்பான்மை யிற்பரவ
மேனி றுத்திய வண்டத்தின் முகடுற வெளித்தூண்
டானி றுத்திய தாமெனும்படி மழைந் தாரை. ௬

பெய்த வான்சதுர்ப் பிறங்கலி னுடம்பெலாங் குளிரச்
செய்து கோடையைச் சினந்தெங்குந் தொடர்வது கடுப்ப
வைய மெங்கணுஞ் சிறப்புற வான்றினம் பொழிய
வெய்ய வேனிலின் பருவமும் வெறிது நீங்கியதே. ௭

போத மேவிடப் புல்லிய மலப்பகை தவிர்ந்தும்
வாதனை தமைத் தாக்குமா றுயர்மறை கரந்துங்
கோதின் மாமிரு கங்களும் பறவையின் குழாமு
னோத ரும்படி மரமபல நண்டுளி துவற்றும். ௮

வேறு.

உள்ளன பொருள்கள் யாவு முவந்திர வலர்கட் கெல்லாம்
வள்ளலாங் கொருவ னீந்து மற்றுங்கைப் பொருளி லாமல்
விள்ளரு நாணந் தாமே மெய்யுற வெறிருமா போற்
கள்ளமின் மாரி பெய்த கார்க்குலம் வெளிறிற் றனவே. ௯

வழுவிலென்பால்வனத்து வானவன் றருமேற்றேனு
பொழிதருபாலினவெள்ளம பொன்னிரத்திழியுமாபோற்
குழுவியமுகில்கள்பெய்யக் குளிருருசதுரக்குன்றைத்
தழுவிவெள்ளருவியெங்கும் வரம்பிசைவழிந்தமாதோ ௰

அந்தநல்வரையினமேனின் றிழிந்துவீழருவியாவுஞ்
சுந்தரப்பொருளைநல்கவல்லவையெனுமாறுநாலலாறாற்று
முந்துறமுந்துமபோதுமுறிதிரைகரத்தால்வீசி
வந்தனமற்றுமுள்ள வான்பொருளவைவிமாதோ. ௧௧

வேனிலைமடியநூக்கி வெற்றிசோர்வாகைசூடி
மேனிலையுணர்ந்தவீரர் திருவரையிருமடிக்கூடி
மீனுயர்துவசனுட்டை வி ராகுமாறு
தேனுயர்தெரியல்வீரர் தொப்பொலிவருவனேரன்ற. ௧௨

மின்னியமணிபொன்முத்துமேயகிற்சந்தனத்தூ
மன்னியவாசநாவி மயிற்பீலி மருவுகத்தூரி
யின்னனபொருள்கள்யாவு மெடுத்துக்கொண்டேகுநீரா
பண்ணரும்வணிகமாக்கட் பான்மைமையக்கடீத் தநீந்தம. ௧௩

கல்லொடுமரங்கடாக்கக் கன்னெனவொலித்துப்பொங்கிப்
புல்லியவேகத்தோடு புணரிமேற்போகுமாற்றல்
வல்லவெஞ்சிலையிராமன் மகிழ்வினிற்சேதுசெய்யச்
செல்லுறுஞ்சேனைவெள்ள மாமெனச்சென்றவெள்ளம். ௧௪

தணிவறுமதமாமற்றுஞ் சாதருமாக்கள்யாவு
மணிவருஞ்சேனையாக வானரசேவிளங்கடானே
மணிவரும்படைகளாக வழங்கொலிமுரசமாகப்
புணரிமேற்பொருவானுள்ளிப் போதரும்படைநேர்போன்ற. ௧௫

மாக்குறிஞ்சியினுட் புக்கி வளர் தருவேங்கைகாகந்
தேக்ககிலசோகங்காந்தட் டினைசெந்தேன்கிழங்குமற்றுந்
தாக்குறக்குரவர்சிற்றிற் சாடியே * வெட்சிசூடிக்
காக்குறுந்தலைமைபூண்ட கந்தவேட்பணிந்துமீண்டே. கசு

முல்லையுட்புகுந்துகாயா தொய்மலர்க்குருந்துகொன்றை
நல்வரகுடலேசாமை முதற்கொள்காரமீந்து
மெல்லிடையாயச்சியாரில் வெண்ணெய்பாற்றியும்வாரிக்
குல்லைந்தாரியைப்போற்றிக் கூர்ந்தும்*வஞ்சிவேய்ந்தே. கஎ

பாலையுட்புகுந்தாங்குற்ற பாலையோமருப்பைமற்றுஞ்
சாலூர்புவிளைவுராறுந் தனித்திடமறவர்வேடர்
சிலமாயப்பயமபெறும்பயச செய்துமுன்மயிடற்காய்ந்த
நீலியைப்பணிந்துதேன்கவரிமாதரு * கரந்தைவேய்ந்தே. கஅ

மருதமாநிலத்திற்புக்கு மலர்மருப்பைசாலேந்து
சரியிலாக்கஞ்சாஞ்செந்நெ ருழுவர்ப்பரவிச்சென்று
பரிகரிமுதலாய படையுடை வேந்தர்யார்க்குந்
திருவுறப்பாரநல்கித் தோட்டிகோனைவிந்திக்கூறி. ககூ

வாசமா * றுழிஞைசூடிவேய்ந்து வானஞ்செறிநெய்தன்மேவி
நேசமாய்வருவார்போற்றி நிலவுமமைப்புன்னைகைதை
மாசறுபொருள்கணல்கிப் வாங்கிப் பாரீந்தால்நெப்
பேசருபாதக்கின்பமடைந்து * தும்பைவேய்ந்தே. உ0

முதுமணையிடத்திற்றோரறி முருகவிழ்மலர்ப்பூஞ்சோலை
புதுமணம்பங்கம்பிக்க பொய்கைகள்குளங்காவேரி
மதுமலர்ப்பலவகியானிந்து மருவிர பெளவநீரிற்
சிதைவிலாவுமிழ்சேர்த் தெளச்சோந்தமாதோ. உக

ஆற்றுப்படலம் முற்றிற்று.

—*—

ஆக படலம் க-க்கு திருவிருத்தம் உக.

* வெட்சி—குறிஞ்சித்தலைவனதுவெற்றிமாலை.
* வஞ்சி—பகைவர்மேற்செல்வோன்சூடுமாலை.
* கரந்தை—பகைவரோட்டியநிரைமீட்சிமாலை.
* உழிஞை—பகைவாரரண்பிடிக்கச்சூடுமாலை.
* தும்பை—போர்வென்றோர்சூடுமாலை.

இனையவாகிய விருந்தியயர்ந்திடு மெங்கணுஞ்சிறப்பெய்த
மனையறங்களு மற்றுளவறங்களு மறைநெறிகுன்றாதாய்
வினையகன்றிடக் கயற்கணியுடனருள் விமலனைசெங்கோலோச்சுந்
தனைநிகர்த்திடாப் பாண்டிநன்னாட்டணி சாற்றுதற்கெளிதாமோ. ௧

முன்னைநாண்மழை வறத்தலிர்ப்பரிப்பிணி மூண்டிடாவகைசெண்டாற்
பொன்னின்மேருவை யடித்திருநிதியமும் புகழ்பெறக்கொடுவந்து
மன்னுமாந்தர்கள் யாவர்க்குங்கலிகெட வழங்கியதனிச்சீர்த்தித்
தென்னனாட்டிற்கு நிகரிந்தவுலகினிற் செப்புதற்கிலைமாதோ. ௨

ஆதிநாயகன் றிருமணங்காணுதற் கமரராயாவருமெய்தக்
கோதிலாவடதிசைதணிந்திடவரமாகுறு முனிதனைநோக்கிப்
போதிநீயவட் பொதிகையினெய்தியப் புவியினைசமஞ்செய்யென்
றோதவைகிய தகைமைசேரிந்தநாட் டொப்புவேறுளதாமோ. ௩

வேறு.

மீனவன்மனையுங் குலசேகரன் கவலை விட்டொழிமெய்யமகிழ்வுறமணா
மேனிமிர்சமய மழித்திடுமையலாக மீதேறி நடித்துநயந்ததுவுந்
தேனமர்கடிக்கைச் சிரனட்டெட்டாய் திருவிளையாடல்செய்ந்ததுவும்
வானவர்க்கிறைவன் கோமுனிசாப மருத்ததுமீயமியாதுமிந்நாடே. ௪

பன்னுதற்கரிய பரம்பொருளனைத்தையும் பாண்டிநன்னாட்டணியெனவையுஞ்
சொன்னயமுணரு முனிவராகலைக்கொக்கராருக [ங்க
மின்னதன்மையவென் றிசைப்பதற்கடங்கா நெறியுடனோங்குபல்வள
னுன்னுமந்நாட்டின் சிறப்பினைமனத்திற் கேற்றியவாறிலசொல்வாம். ௫

வேறு.

செந்நெலேகன்னல்காட்டச் செழுங்கன்னல்கமுகுகாட்ட
மன்னியபூகமேலாய் வளர்தருந்தெங்குகாட்ட
நன்னலமிகுந்ததென்னை நறியமாதாலங்காட்டத்
துன்னியவமைகள்வானைத் தொடர்தருமேனிகாட்டும்.

பனிபடுசோலையுற்ற பன்மலருகுக்குந்தேனும்
கனிகசிந்தொழுகுந்தேனுங் கரும்பிழிதேனுமேதி
மனதினிற்கன்றையுள்ளிவழி தருபாலுமேல்லா
நனிபணைபாயமீன்க ணன்குண்டுகளிக்குமாதோ.

பனையுறுகனிகள்வீழப் பாங்குறுமிளநீர்தள்ளிச
தினைநறுங்கமுகின்பாளை சிதைத்துமாக்கனிகளோடும்

புனைகனித்தாற்றைமோதிப் பொருவறுங்கனிகள்வீழ்த்து
நனிவாராறள்ளியோட நறுஞ்சுனைபயந்திலாழும். அ

பங்கயம்விளக்காய்நீலோற் பலங்களேகண்களாகப்
பொங்கர்வண்டினங்கள்பாடற் பருணிநர்புகல்பாட்டேயக்
கங்குபாகலின்பழத்தைக் கடுவன்மத்தளமுழக்கச்
சிங்கலின்மயில்களாடும் திருநடமருநங்காணும். சு

மங்கையர்மகிழ்நரோடு வாவிநீர்படிந்துசெல்லக்
கொங்கையிற்புனைந்தசந்தக் குங்குமமலரின்றேனும்
டொங்கிநீர்புரண்டுசென்ற புதுமணமோடைமற்று
மெங்கணும்வாசம்வீச வெழின்மதுகரங்கண்மொய்க்கும். ௧0

பங்கயமுளையுமுந்தும் பசும்பொனுறும்புரண்டுவீழச்
சங்கினங்கொழுமுன்மூன்னோர் தானுமூமாறுமோதச்
செங்கயறுடிப்பவாமை புலேடுடைசுரிப்பமற்று
மங்கணம்வராலுநணடு மளேநரவுமூவர்மள்ளர். ௧௧

கன்னலையொடித்துமேதிக் கடாவினையடிப்பக்கன்னன்
மன்னியமுத்தமருதவயலகரிந்தெரிந்துமின்னப்
பின்னவையனைத்துமள்ளா பிறழ்நரசேறுசெய்து
செந்நெலைவாரிவாரித் தெளிப்பர்கண்மகிழ்வின்மாதோ. ௧௨

கொங்கையினபாறந்தீன்ற குழவியைவளர்க்குமாறு
தங்கணாற்பனையினுறு நறைக்கிடத்நண்ணீபாடச்சி
மங்கைபங்கமாவோனமுண்டர் மலப்பகைதுறப்பதேய்ப்பச்
சிங்கல்செய்களைகளைந்து சிறப்பொடுவளாப்பமள்ளர். ௧௩

பூசையோரிடத்திலீன்ற பரறைத்தான்புரக்கவேண்டி
யாசையாற்பல்விடத்து மமைப்பதுபொருவநாற்றைக்
காசணிதனத்துமின்னார்கைகளால்வாரிச்சென்று
தேசுடைக்கழனிதோறுஞ் சீருறநடவைசெய்வார். ௧௪

பரவைநீர்படிந்துசெல்லும் பசுநிறக்கொண்டலுப்பண்
விரவியநாட்களோடு வெண்மதிசெல்வதென்ன
மரகதந்தளிர்த்தாற்போலும் வளர்தருபைங்கூழுடு
சரதநித்திலங்களீன்று சங்கினந்தவழுமாதோ. ௧௫

வேறு.

[illegible]ளைகளை யாற்றுவீரெனக்
இன்[illegible]யவர் கிளையொடெய்தியே

வெள்ளனம்பெடையொடு விலங்கப்பண்ணையிற்
கள்ளமில்லாதுறுங் களைகளைந்தனர் ௧௬

பங்கயங்குமுதநீ லோற்பலங்களுஞ்
செங்கைகளாற்பறித் தெறிந்துஞ்சேயிழை
மங்கையர்தம்முகம வாய்கண்ணீரிடைத்
தங்குவகளையினுந் தளிர்ந்ததென்பரால். ௧௭

அல்லிசெந்தாமரை யலர்ந்தபூவினம்
புல்லியமதுநுகர் பொறிகொளவண்டினம்
வல்லியர்முகங்கண்வா யிதழின்மொய்த்திட
மெல்லியகைகளால் விலங்கவீசுவார். ௧௮

நனைமலர்ப்பங்கயங் களையநங்கையர்
சினமொடுமுள் ளுறுங்கொடியைத்திணடலும்
புனைகரங்கிழித்துப்பல் புண்படுத்தின
தனைவதைப்பவர்க்கிடர் தாஞ்செய்யார்களோ. ௧௯

விரிமலர்க்குவளையை வீக்கச்சென்றிடு
மரிவையர்கால்களை யணைத்துப்பற்றுறுப்
பரிவுடன்றுன்றறும் பாலர்மேல்வரும்
விரவலர்கான்மிசை விழுவமானவே. ௨௰

அம்புயங்குமுதஞ்செவ் வாம்பலாதியாய்
வம்பவிழ்மலரவர் வதனம்வாய்கண்கட்
கிம்பரின்மாறுநந் திமைக்குமேலதைக்
கொம்பனார்களைதலிற் குறையுண்டாகுமோ, ௨௧

பற்பலநிறத்தன மலரும்மைங்கொடி
சிற்சிலமருங்கெங்குஞ் செறிந்திருப்பது
நற்பயிர்த்தோற்றமு நாகம்வாழ்முகில்
விற்பலவுடனிம்பர் விளங்கிற்றென்னவே. ௨௨

இன்னனகளைபறித் தெறியுமாதரா
மின்னிடைத்துவளவம மினிப்பைங்கூழிடைத்
தன்னடிபடுத்துவண் டினங்கள்சார்வுற
மன்னியகரைமிசை வருகுவாரரோ. ௨௩

பாசிழையார்களை பறித்தபண்ணையி
னேசமாய்முன்புபோ னேர்ந்தவன்னங்கள்
கூசிமெய்வாடின கொடுஞ்சமர்த்தலை
யாசைநாயகர்த்தவி ரரிவைமாரினே. ௨௪

MAHAMAHOPADHYAYA SWAMINATHA IYER LIBRARY. MADRAS-41

தன்னுயர்பொருள்கெடத் தாழ்ந்தநாளினு
நன்னலக்கிளைக்கரு ணைலமுற்றோரெனத்
துன்னியமலர்வளா மிழந்துதொல்பனை
யன்னங்களுண்ணமீ னளித்துக்காக்குமால். உரு

மாநிலக்கிழத்தியின் வளமைகண்டநா
மேனிமைத்துறசெயல விராங்கக்காண்டுமென்
மேனையாகண்களுக் கிவரிமையாகிய
மேனலமுமைப்பயிர விளரினுயர்ந்ததே. உசா

வேறு

நென்முளையனைத்தும்வெள்ளை நிறத்தொநிதிலத்திற்றோன்றிப்
பின்னவைபசலையுற்றுப் பெற்றிமேர கதங்களெல்லாந்
தங்கிமட்வெளுத்துப் பின்னேசாரருமபசுமைகாட்ட
லன்னைதன்குணத்தைச் சேயாலறிகுறியாயிற்றன்றே. உஎ

ஆடவர்க்கண்டோரணிர யஞ்சவெம்பேதைமான
நாடிவிண்ணுயர்ந்துசென்ற ரவிருரும்பைங்கூழெல்லாம்
தேடருமங்கையாரச் சேரங்கயிற்ற துணைநல்போலக்
கூடியகதிர்ச்செஞ்சாலிக் குலைமுகங்கவிழ்ந்தமாதோ உஅ

கருமுதிர்மாதரார்மெய் கவினுநிபசுமைகாட்டும்
பரிசெனக்கதிர்செஞ்சாலி பழுத்திடப்பருவமோர்ந்து
கருவிகளுநுனூன்மள்ளர் கதிரிரரியலருஞ்சேர
வரிகுவர்தலைவர்க்குற்ற டுந்தவர்மர்குமாம்போல உகூ

ஆற்றல்சால்கல்வியோரு பதிருளையரபெண்ணது
போற்றுநல்செய்துமேலோர் பொருவறுமிடத்துப்தென்னச்
சேற்றிடைபிறந்தவான செந்நெலினைகதிர்களெல்லா
மேற்றலைசுமந்துமள்ளர் வெங்காமதுவினுய்ப்பார். ௩௰

முன்னைநாட்சினத்திறுர்த முகில்களைச்சிறைசெய்தாண்ட
மன்னவர்புகழுநிம்ப மாலையான்வரைகளெல்லாந்
துன்னியசிறைமைவத்தென்னச் சொல்லருஞ்சுவைகளெல்லாம்
பொன்னுயர்மேருநாணப் போர்களங்கியற்றுவாரால். ௩௰௧

மலையெலாநிலத்தில்வீழ்த்தி வானவர்க்கிறைவனூரு
முலைவுறுமுகில்களாமேல யுணங்குறமிதித்தலேயப்
பலபலபோனர்மள்ளார் பயன்றருங்களத்திற்றள்ளி
வலமிகும்பகட்டினங்கட் பிணித்தவையுழக்குவாரால். ௩௰௨

உடலிடையுயிருஞ்சேர வுறுபெயரொன்றதாய்ப்பின்
னுடலிடையுயிர்நீங்கிற்றே லுறுபெயர்வேறுமாறு
மடலிடைச்செந்நெல்சேர வழுங்கியபெயரொன்றாய்ப்பின்
மடலிடைச்செந்நெனீங்க வழுங்கியபெயர்வேறான. ௧௩

வையினையகற்றியார்ந்த வளியெதிர்தூற்றலோடுங்
கையகல்பதர்தூண்மற்றைக் கழிவையும்புறத்திலோடு
மையை தன்பாகன் றொண்டர்க் கன்புசெய்பவ ருளத்திற்
பொய்முதற் றீயவெல்லாம் பொருக்கெனப் போகுமாறே. ௧௪

வேறு.

முடியுளவரசர்க் காறிலொன்றளித்து முதுநிலத்தவர்க் கருளன்னக்
கொடிபடைத்திலங்குஞ்சுந்தரமூர்த்திகோவிலுக்கொருபங்குகொடுத்து
வடுவிலாநன்னூ லுரைமுறைப் படியே மற்றையோர் தங்கட்குமுதவிப்
படியினிற்சகல விளைவுங்கைக்கொண்டு பாவலர்புகழ வாழுவரால்.

வேறு.

மேகமுங்கரியு ம்பிளிர்சோலைவா
யாகமுஞ்சடங் கந்தணரிற்கணே
யோகமுந்தவ மும்முயர்ந்தோர்கள்பாற்
போகமும்பொலி வும்புரமெங்குமே. ௧௬

ஓதுவார்க ளுயரெழுத் தெண்ணுமே
வாதனைப்பிணி யும்வர லஞ்சுமே
நீதிமன்னர் நெறியு மங்கம்பினே
மாதராரும் மருவுவர்கம்பினே. ௧௭

பூவின்மேவும் பொறியொடுவண்டினங்
காவின்மேவுங் கலையொடுபிடானின
மாவின்மேவுவ வான்பொருளோங்கற
நாவின்மேவுவ நன்மொழிமெய்மையே ௧௮

கோடனைத்துங் குழையுஞ்சுரும்புகள்
காடனைத்துங் கழையுங்கரும்புகண்
மாடனைத்தும் வளையுங்குவளையே
பீடனைத்தும் பெறும்பெருநாட்டினே. ௧௯

சோலையிற்படி யுஞ்சுரிவண்டினங்
கோலவாவி மலர்மதுக்கொள்ளுமாற்

சாலுமத்தட மீதுறத்தாவிய
சேலுமக்கனி தின்றுகளிக்குமால். ௬0

தளமலர்ப்பணைச சார்பிற்பலாக்களே
வளமிகுந்த வனத்தும்பலாக்களே
குளனிருங்கரை யுங்குளிர்மாக்களே
கிளையுடன்மயற் கேழ்கிளர்மாக்களே. ௬௧

மாடு போதகம் வண்டிறை போதகம
பாடு மம்மனே யேபயி லம்மனே
தேடு மாலை திகழ்மண மாலையே
நீடு கேதன நீடவர்க்கே தனம். ௬௨

கோட ரங்கள் குதிக்க வனக்குழாங்
தாட ரங்க ந் தமலை ரோவியே
யாட ரங்க ந தரிவையாச் சேர்நதவா
பிட ரம்பொரு வேற்கட்குப் பேதுறும். ௬௩

இன்னி யற்கனி யா ரிசை நிற்றிலு
மன்ன மனைவ ராவணத் துய்ப்பதுந்
நெங்நென் முந்தத் தொடுசெறி கண்டருங்
கன்னன் முந்நங் கழைதரு முந்தமே. ௬௪

ஆலைவாய்க் கரும் பார்நரு மோதையுஞ்
சோலைவாய்ச் சுரும் பார்த்தெழு மோதையும்
காலைவாய் மறை கற்பவ ரோதையும்
வேலையோ தையின் மிக்குவி ளங்குமால். ௬௫

## வே று.

விண்ணினுயர் கெரவனா வேறத்தின் கட்டருகிந் திலங்களோடு, மண்ணினுயர் நறும்புன்னை விரையரும்புந் தலைந்தலையே மயங்கித்தோன்ற, வெண்ணிறமாய்த் தானுயிர்த்த முட்டைதனை யுணர்வரிதாய் வெருவிநாணிப், பண்ணிறைவண் டினம்பயிலு நளினமலர் மீதனம்போய்ப் பரிவுகூரும். ௬௬

வெண்கொடியோர் பாறழுவக் கருங்கொடியோர் பாலில்வந்து விரவப்பணணைத், தண்பசிய கொடியொருபாற் பவளவல்லி யோர்பாலிற் றழுவநாப்பண், விணபரவு நெடுங்கமுகின் மஞ்ஞையுறப் பெருங்காற்று விசிக்குந்தோற்றம், பண்படுநாற் றிசைக்கயிற்றிற் பரவுகழைக் கூத்தியரின் பரிசுகாட்டும். ௬எ

பலமுருக்கின் மலர்சொரிய வனமீதிற் றோகைமயில் பரவுந்தோற்றந், தலைமதனின் மாதர்திருச் சாயலுக்கு நாணியகல் சார்வதேய்ப்பப், புலமதனில் வேங்கைநறும பூவிளமின சக்கரியமின்றிர் பொருந்துந் தன்மை, நிலைமையுறு பொற்றொழில்செய் கம்மியர்களுலேக்கரியைநிகர்க்குமாதோ. ௪௮

## வேறு.

மங்கையா நகிற்குநாணி வானுற வோங்குநேங்கு
தங்கிய குரும்பை நன்னீர் தருபல மொழிக்குமாறே
சிங்கலி றடைகளா டனரேறு செறியுமடைபங் கதலியெல்லாந்
தங்களி னூறும் றென்னத் தாமுறு கதலி கவிழ்ப்பதாமால். ௪௯

பங்கய முகங்கண் டஞ்சப் பவளவாயக் கலவிநாணச
செங்கய னீல வீயுஞ் செவ்வரி விழிக்கு நாணப்
பொங்களி முரலுங் காந்தட் பொருவிலாக் கைக்குநாண
மங்கையர் நதியி லென்று மகிழ்ந்துநீ ராடு வாரால். ௫0

மேனடை கற்பா னுமன்றி வெள்ளனம பிடிபின செல்லப்
பான்மொழி தெரிதற் குனனிப் பைங்கிளி குயிலும் போத
மான்விழிப் பார்வை கற்பான மருங்குறத் தோகை மஞ்ஞை
யூனமில் சாயல் காண வுலவுவ ரொளிகொண் மாதர். ௫௧

காரொடு மிகல்வ மின்னார் கதுமலாக் கூந்தல் பௌவ
நீரிடை நுரையை யன்னார் நெடுந்துகி லிகலவ செங்நெற்
போரொடு மிகலவ மாதர் புணர்முலை பொருவில் வீரர்
தாருடை மார்பை யன்னார் நடங்கணக ளிகல்வ மன்னோ. ௫௨

ஊன்கழி சங்கைப் பேதை யாருயர் பாண்டமாக
மீன்களோ டுறையு மாமை வெரின்மிசை யடுப்புக் கூட்டித்
தேனுலை நீரா யஃதிற் றிகழ்முத்தி னரிசி பெய்து
மேனலத் தல்லி வீததீ யெனவிளை யாடு வாரே. ௫௩

வேதநன் குணர்வோ ராற்றும் வேள்வியின் புகையு மாதர்
கோதைகட் கிடுவ தான குளிர்நறும் புகையும் பின்னு
மோதன மமைக்கு மட்டிற் புகைகளு மொன்றாய்க் கூடிச்
சீதங்கொண் முகில்க ளென்னச் சென்றுவிண் படர்வ தாமே.

கருந்தடங் கண்ணி னாருங் காளைய ரெவரு மேன்மை
பொருந்திய கல்வி செல்வம் பொருவறப் படைத்த வாற்றல்
விருந்தினர் தமக்கு மீசன் மெய்யடி யவர்க்கு நோயால்
வருந்தினார்க் கிரவ லோர்க்கு மனமகிழ்ந் துதவு வாரே. ௫௫

தேடுவ பொருளுஞ் சீர்த்தி செய்குவ தறமு நன்மை
நாடுவ தரனபொற் பாத நவில்வது கதை புராண
மோடுவ பலங்க டமை யொடுங்குவ பகைகண மூன்று
மாடுவ மயில்க டென்ன னகன்புன னாட்டி னெங்கும். ௫௬

குற்றமில் லாதா ரீற்றிற் கூற்றத்தின் பயமு மில்லைக்
கற்றில ரிலாதா னெஞ்சிற் கடுஞ்சினம் பொறாமை யில்லைப்
பற்றல ரிலாதா லென்றும் பயிற்றுரு சமரு மில்லைச்
சிற்றறி வினரி லாதாற் சீர்த்திதேய வில்லை மாதோ ௫௭

சந்தன மலரின வாசங் கமழ்தரு சாலை சோலை
நந்தன வனங்கள் பேருரா ராடிய வகாக ளெங்குஞ்
சுந்தர மூர்த்தி நாளுந் தொலைவற மனாக்க வேணடிப்
பந்தி பந்தியி னெற்றுய்யப் பண்டிக ணிறையு மாதோ. ௫௮

வேறு

எந்நாட்டுப் பெருவளமு மெனனாட்டும பொன்னாட்டி னியல்புமெல்லா
மின்னாட்டுந் திருமேனி மின்னாட்டு மரனரசாண மேன்மையாலே
யிந்நாட்டுக்கிணையாகா தெனவுயரும்பெருஞ்சீர்த்தி யிசைகொள்பாண்டி
நன்னாட்டிற் சீர்சிறந்த கூவனகா வளஞ்சிலது நயந்துசொல்வாம். ௫௯

திருநாட்டுப்படலம் - முற்றிற்று.

—*—

ஆக படலம் ௨க்கு - திருவிருத்தம் - ௮௰.

உ

சிவமயம்.

# திருநகரப்படலம்.

இந்திரனுறையும் பொன்னகர்தன்னோ டெழின்மிகு மளகைமாநகரு
மிந்தநன்னகருக் கிணைபெறுதெனவே யாவருமியம்புதற் கியல்பாய்க்
கந்தமாமலரா னொன்றும்வீற்றிருக்குங் கடிமனைபப்பல செறியச்
சுந்தரமூர்த்தி யினிதமர்ந்தருளுந் தூயசீர்க்கூவன்மா நகரே.

எத்திசையிருந்து மெத்திசைகருதி யேகுவோர்முத லியாவரையு
மித்திசைகருதி வருதிர்நீர்பசிதீர்ந் தினிதுறச்செல்லுமி னென்றே
யத்திசைகருதி யழைப்பதுங்காப்ப வணக்கொடியுலவு மாற்றலினு
மித்தலத்துயர்ந்தோர் கூவன்மாநகரென் றியம்புதற்கியைந்துளதாமால்

பொன்னகர்தனையே நன்னகரெனத்தம் புந்தியிற்கருதிய வமரா
ரிந்நகரெழிலைக் கண்டகமகிழ்வா லிருந்தொன்னகரைத்தா மிகழ்வார்
முன்னுறுமமணர் சமயநன்றெனவே மொழிந்தவர் சம்பந்த ரருளாற்
றுன்னுநற்சைவ முணர்ந்துமுன்மதத்தைத் தூசித்துப்பேசுமாறேய. ௩

வண்டினங்குடையமுகையுடைந்தலர்ந்த மலருறுதேன்மழைபொழியுந்
தண்டலைமிசையிற் கருநிறமுகில்கள் சார்வதுதன்னிடத் தறுகாற்
பண்டரமதுவை யளித்திடாதறுங்கற் பகங்களைப் பழிக்குமென்றந்நி
யண்டர்கட்கிறைவ னேவலாலிவணும் படர்ந்திடைதடுப்பதுகடுக்கும்.

கொந்தலர்குழலார் மாடமீதினிற்றங் குழற்கிடுநறும்புகை பருகிப்
பந்திபந்தியின்மீப் பரவியபொழிலகம் பௌவநீர்பிசைபடிந் தெழலு
மந்தமிலாழக் கடற்படியமுழுது மகின்மணங்கமழ்தரு மெனினக்
கந்தமார்தூமம் புகுந்தசாளரத்தின் மணகைமலையக்க முறுதற்கெளிதோ.

கைவளைகறங்கக் கணந்தனமசையக் கார்நிகர்கூந்தல்கள் சோர
மெய்யணியிலகச் சிற்றிடைதுவள மெய்யமெழவுயிர்ப்புமேலோங்கச் [த்
செய்யகாலணிகள்கலகலென்றொலிப்பச் சிறந்துபந்தடிக்கு மங்கையரை
துய்யவரெனினுங்காண்டொறுமதனன் றொடுமலர்க்கணைக்கிடைகுவரே.

மாடமாளிகைகள் மண்டபம்பலவே வானுயர்சிகரங்கள் பலவே
நீடுசாளரங்கோ ளரங்குகள்பலவே நிறைமணிச்சாலைகள் பலவே
தேடருஞ்செந்நெற் களஞ்சியம்பலவே சித்திரக்கூடங்கள் பலவே
யாடரங்குகளும் பலபலதேவர்க் கமைத்தவா லயங்களும் பலவே. ௭

வேறு.

வேதவோசையும் வீணையினோசையுங்
கீதவோசை கிளர்முழவோசையு
மாதரார்தம் மணிச்சிலம்போசையுஞ்
சீதவாரி யொலியிற்சிறக்குமால். ௮

தேரினோசையுஞ் சில்லியினோசையுங்
கார்நிகர்த்த கரிமணியோசையுஞ்
சீருளைப்பரி செல்குரத்தோசையும்
வீரர்தாரொலி வீதிகளொங்குமே. ௯

கரிநடத்துவர் காளையர்சிலரெனப்
பரிநடத்துவர் பாய்திறைப்பரியிற்
கிரிநடத்துவ மானக்கொடிபொறித்
திரணடத்துவ ராற்பெருகுமெங்குமே ௧௦

சுரக்குநல்லருட் சுந்தரமூர்த்திசேர்ந்
திருக்குடங்கக ரெய்துமிரவலர்க்
குருக்கமாக வுவந்துதிகொடு
புரக்கும்வேந்த ரெனப்புலவோர்வரே. ௧௧

ஈதலென்றும் விரும்புவரலுமோர்
காதலென்றும் விரும்புவர்காமுக
ரோதலென்றும் விரும்புவரோதியோர்
போதலென்றும் விரும்புமொன்னகர். ௧௨

கரிமதம்படக் காண்டொறும்பாநாம
பரிகுரங்கள் படவெழுந்துசேறரா
மெரிமணிப்பொறி யெய்துமந்தாளநாம
விரிமணிச்சுடர் வீதிகளெங்குமே. ௧௩

வளையொலிப்பன வாண்கிளர்வீணையின்
கிளையொலிப்பன கின்னரமாப்பரா
துளையொலிப்பல் லியத்தொடுதூரியம
விளையொலித்தொடர் வீதிகளொங்குமே. ௧௪

வேறு.

பண்பனைக்கங்குயர் பனையின்கள்ளொடு
தண்ணீர்பானையதேன் சாற்றுமோர்ததி
யெண்ணெய்மற்றவு மேற்றபல்குட
நண்ணிவீதியின ணிமயங்குமே. ௧௫

கன்னிமாபலாக் கனிவருக்கமும்
பன்னருங்கறிக் கிசைபல்பண்டமுந்
துன்னும்வாசநற் றருங்கண்மற்றவு
மன்னிவீதியிற் றலைமயங்குமே. ௧௬

உருப்பசிக்குநே ரொளிகொண்மாதரார்
பொருப்பிணைத்தனக் கலன்பொலிந்திட
விருப்புறத்தெரு வீதிவீசுநீர்
கருப்புரத்தொடுங் கலவைநாறுமால். ௧௭

பாடுவார்பலர் பண்டைரப்புச்
சூடுவார்பலர் வாசந்தொங்கல்க
ளாடுவார்பல ரூடறீரரச்
கூடுவார்பலர் கோநகர்க்கணே ௧௮

கொங்கைசேர்வரக் கூடுமெய்யரப்
பொங்குதாமமன் னொளிப்பரப்பூணையார்
மங்கலச்சதி வரமயிறைடராங்
கெங்குநூபுரத் திசையியீட்டுமே ௧௯

கந்துகம்படுந் தொறுங்கயின்சுவா
சிந்தும்பணமணி செறியவார் செண்டிடுனை
முந்துவீசலு மொயத்தபணமணி
தந்தமேருவின் றனைமைபெயரமே. ௨௦

திருந்துநற்சிறு செய்யமான்பட
பொருந்துமீதுவிட் டெழுக்கும்பொற்புமுன்
வருந்துவிண்ணந்தி முசசச வாத்தாம்
பருந்து முன்றிடும் பரிசு காட்டுமே. ௨௧

வேறு.

முன்னொநா ளொருவன் செய்தபுண்ணியவினை யனைத்துங் கூட்டிப்
பின்னொநா ளவனுக் கீயும்பெயர்க்கருமாயை போல
வெந்நலப் பொருளும் விற்குங் காலத்திற் பொருளீந் தேற்றுப்
பின்னதை விலையும் பேசிப் பெறும்பொருட் குதவல் செய்வார். ௨௨

தவறிய தெடுத்தற் கொல்லாச் சனங்கள்னெருங்கும் வீதி
பவமிலா மடவார் மைந்தர் பலகையின்றி முட்டுநர் தோறுங்
குவிமுலை புயந்திற் றுக்கக் கொண்டகம் ...வால்லோ
ரவமிலாச் சிலர்க ளாற்று தழுங்கிசொரப் பிடைவர் மாதோ. ௨௩

மின்னிய மணிபொன் மற்றும் வேண்டுவோர் வேண்டு மாறே
யின்னன பொருளீங் கில்லை யென்பதற் கிலதாய் நாளுந்
துன்னியே வாங்கு வோரும் விற்பவர் தொகுதியாக
மன்னுவ வளகை நேராய் வழங்குமா வணம னந்தம். ௨௪

மங்கல வொலிகண் மிக்கு வழங்குமந் நகரி லென்றும்
பங்கய மலரின் மேவும் பண்ணவன் றனது செய்ய
பொங்கொளி முகமே யாதி பொற்சரணங் கடையாய்த் தோன்றுஞ்
சங்கைகொள் வருணநான்கோர் சாதரு மியல்பு சொல்வாம். ௨௫

ஓதுத லோதுவித்த லுவப்பொடு மணங்கள் செய்தல்
பூதலந் தனின்மற் றோர்க்கும் பொலிவுற மணஞ்செய் வித்தல்
ஈதலு மீவோர் தம்பா லேற்றலிவ் வறுவாற் றானும
வேதியர் மகிழ்வி னந்த நகரிடை மேவு வாரே, ௨௬

வில்லொடு வேல்வாள் யானை வெம்பரி பொறியா றென்னச்
சொல்லிய படைக ளோடுஞ் சுற்றங்கண் முதலா யாறு
வெல்லுறற் குரியசேனை விறற்றொடுந் தினமா றுற்று
நல்லற வின்பத தன்ன பொருளொரா டோறுந் தேடி. ௨௭

குடிபடை யமைச்சு நட்பு கூழரணாறு மோங்கத்
திடமுட னோதன் மன்றல் செய்குதல் படை பயிற்ற
லடன்மிகும் போர்செய் திட்ட லவனியைப் புரந்த லீத
லுடனக மகிழ்வா னமன்ன ருறைவரந் நகரின் மாதோ. ௨௮

காவலர்க் கமைச்சு மாகிக் காங்கரி னூல்க டோந்து
நாவலர்க் கிழமை பூண்டு நானில விளைவுஞ் செய்து
தேவர்கட் கினிதாய் மூவா செய்பிய வேதமோதித்
தாவில் காராள ரந்தத் தண்பதி மேவுவாரே. ௨௯

பன்னில விளைவுஞ் செய்து பார்புக முறங்க ளாற்றி
மன்னிய சீர்த்திநாளும வளரச் செல்வ மோங்க
மன்னர்பின் னவர்க ளாக மகிழிரட் டியர்க ளந்தத்
தொன்னகர் தன்னி லென்றுந் துலங்கியே வாழ்வர் மன்னோ ௩௰

பூவர சருக்கின் னட்புப் பொருந்தியும் விளைவு செய்துந்
தாவறும் பொருளுந் தேடிச சார்ந்தவர்க் கினிதி னீந்தே
தேவருக் காலயங்கள் சிறப்புற வியற்றி நாய்க்கர்
மேவருஞ் செல்வ மெய்தி யந்நகர் மேவுவாரே. ௩௧

மின்னவிர் மணிபொன் முத்தும் வேண்டுவ பொருள்க ளெல்லாங்
கன்னலின் சுவைபோற் பேசிக் கனிவுற வாங்கி விற்றும்
பன்னருங் கலைக ளோர்ந்து பரமன்றாட் கன்பாற் சீர்த்தி
மன்னுமந் நகரி லென்றும் வாழ்வர்பொன் வணிகர் மன்னோ. ௧௨

கன்றொ டான்வ ருடைநாளுங் களிப்புற வோம்பல் செய்து
மின்பிறழ்நு சுப்பின் மாதர் வெண்டயிர் கடைத லோடு
மொன்றிய பலர்க்கும் பானெய் யுயர்தயிர் மோரு மீந்து
நன்றிகொ ளண்ட ரந்த நகரிலெஞ் ஞான்றும் வாழ்வர். ௧௩

நாட்டினிற் பொருந்து மைந்து நகர்படு பொருள்க ளைந்துங்
காட்டினிற் பொருந்து மைந்துங் கடல்படு பொருள்க ளைந்து
மீட்டுயர் வரைகண் மீது விளங்குவ பொருள்க ளைந்துங்
கூட்டிமே லவர்க்கு மீந்து சூத்திரர் குழுமி வாழ்வர். ௧௪

வேறு.

கன்னல்வின்மதன னூன்முறைப்படியே காளையர் தோளுறக் கலந்து, நன்னலம்போல லீலைகள் பலவா னடித்துண வரமு மளித்து, மின்னுதா ரியத்தாற் புணர்ந்த நங்கலவி விதமெல்லாஞ் சித்திரத் தமைத்துப், பொன்னவிர் மாடப் பந்திக ளிலங்குமப் பொதுமட வாரியல் புகல்வாம். ௧௫

மனையிடை யமர்வோர் மனைவியர் நறுநீ ராடிய வாறிரு தினமும், புனைநலத் துடனே புணர்ந்துபி னவரைவில் பொதுவிய ரகம்புக வவளைச், சினமொடு முனைநா ணீத்தன ரெனவே சேடமூவறு தினங்களினுங், தனமெனுந் தாம்பாற் பிணித்துநகலரி நம்பாத் தடஞ்சிறைப் படுத்துவர் மன்னோ. ௧௬

வண்டுகள்படியா வாடுறு மலர்ந்தா வானவ ரெனக்கண்க ளிமையா, மண்டனின் மிதியாப் பாதங்க ளுளவாய் வயங்கிய சித்திரக் காட்சி, விண்டனி லுறைவோர் பொதுவியர் கலவி வேட்டுமண் ணுலகிடை யுற்றுத், தண்டலின் மனையினப்பொது வியர்தஞ் சமயம் பார்த்திருப்பது மானும். ௧௭

விளக்கிடைவிழுந்த விட்டிலைப்போலும் வெம்பிடி நசையினுற் கயத்திற், றுளக்குறுகயமு மெனவவர் மயக்குந் தொழில்களான் மனஞ்சுழன்றிடவே, யிளக்கமினெஞ்சும பாடலாவிளக வினியணடங்களும் பயிற்றி,யளப்பருந் தியமனைத்தையுங்கொள்ளையாகவேகவர்வர்களம்மா

நல்வளஞ் சிறந்தகூவன் மாநகரி லுடோறுஞ் செல்வமேலோங் கப், பல்வகைப்பொருளும் படைத்துளரெனினும் பரத்தையர்மனநிலை யிலதாய்ச், சொல்லுறு மரபிற்கீழ்மை யோரெனினுந் தொலைவிலாப் பிணியுளரெனினும், புல்லுவர்பொருளுக் களவையிற்சுகத்தைப் பொ லனுற நிறுத்தனரெடுத்தே ௩௯

நிலையிலாமனத்துக்கணிகையர்தம்பா னேயங்கொளாடவர்தமக்குப்
புலனுகாசுகத்தையளித்திடுமாவிற் பொருந்துவர்தாமுமவ்வளவே
விலையெனநிதியங்கோடலுக்கிசைந்த வியனெறியில்புரிந்துயர்வாக [பர்
மலைநிகர்தனங்கள்கொடுப்பவாக்கினிதாய மலைநிகொடனங்கடாங்கொடுப்

விலைகொடுமுதலுள்விற்றிடுந்தனத்தை மீளவுந்தமதெனக்கொண்டு
கலைகொடுமூடிமற்றைநாள்விற்குங் கணிகையாவிலைக்களவையின்மே
விலையிமியளவுமெனவளாவிலக வெனினுமவ்வளவையுளராய்த்
தலமிசைப்பொருணீத்தவரவர்மனத்திற் றுயர்நீத்தநகருறைவார் ()

தருப்பையமிசையனுதிமேலார்கூறத் தான்மதியாச் சந்ததமுனிவரர்புகன்ற
விருப்புறுநூல்கள்யாவையுமுணராது வினயமினாற்கவித்திறமும்
பொருக்கெனப்புகலும்பலகணர்தொகை புலவர்கள்காவிகவொருவித்
திருக்கறச்சிறுமதிரளுடனகலைக ளுடனிருந்கரகருமமபலவால். ௪௨

கன்னலவில்லவளைத்துமலர்க்கணைபொழிதரு காமனைநிகர்முறைக்காய்ந்த
பொன்னவிர்மேவனைப்புரிதனமதைப் புதுமயிர்சந்தனம்புனைந்து
மன்னுகணடிகைபிணைமாலை யணிந்துவணப்புறுகாவியுமணிந்து
தன்னிகரில்லாச்சிவனடியார்கள் சாருவார்மடமபலவாவால். ௪௩

மற்றும்பல்குடிகள்யாவருந்தமது மரபினுக்கிசைதரும்படியே
யுற்றவேலவர்க்குமுறைமைவழுவா தொழுகியோங்கமஞ்சான்றதாய்நாளு
நற்றவராயமுன்னவரான நகரினுமேனினும்பரமேற்றோர
சுற்றிலுந்தங்கட்கிருபாககளியுறித் தென்னகரன்னில்லைவகுவரால்

வேறு.

இந்திரன்றிக்கினிற்பனைசூழ் வட்டநதிமுட்டொழிக்கு நதியிரண்டு
முந்தனலோன்றிக்கூஞ்சாநநதியுடன்கொடிங்கா னதியுமுண்டா
லந்தகன்றிக்கினிலுயாநந் தனமனமுநதியிரண்டா னிருதித்திக்கிற்
சந்தகிமேங்கொடுபன்மரப் பொழிலுற்றுங்காற்கூடந் தானுண்டாமால்

மேற்றிசையிற்கணபதிநா ரணன்கருப்பனிருளன்விளங் கூர்காப்பானுந்
தோற்றமுயர்சினகரங்கள்களாயான்றேரப்பொடுகொடிக்கா லூற்றுக்கா
றேற்றமிகும்வாயுதிக்கி னந்தவனந்தொடுநதிக ளிலங்கும்பண்ணை (லா
னாற்றிசையும்புகழண்ணு மலேநாதன்சோவினறும் பொழிலுநண்ணும்.

வடபுரத்திலேரியதன் கரையினிற்பலவிருக்கங்கண் மருங்கிற்புட்பச், செடிகளயற்றடமடுவும படமிகுதிற்செநெல்வய னதிகளுண்டாற், றிடமுளவித்தீர்த்தமும் பல் வளமுமாதுயினுங்குயில்கள் சிறந்துகூவ, மடல்விரியத்தேன்சொரியுந் சோலைகளு மயமான வனமுமுண்டால்.

வேறு.

இன்னபல்வளங்க ளோங்குமம்நகரி னெவ்வமற்றியாவரும் போற்றப்
பன்னுநற்கரிய ரமபொருளியிய பாதங்கயங்கருத் திருத்தித்
துன்னுநல்லமெண்ணுன்மையுமியற்று மசுந்தரமூர்த்திசேர்ந்திலங்கும்
பொன்னுநன்மணியார்கோவிலின் சிறப்பைப்புந்தியிலறிந்தவாபுகல்வாம்

வேறு,

பற்றராவெருவுறும் பணைகடாங்கிமீ
துற்றபம்பொறியுட னுயர்விரேறுக்கி நான
முற்றுணாசுந்தர மூர்த்திகோவிலைச
சுற்றுமளமதெழி றுலங்குமியலுமே. சகூ

ஒப்புமையாழியந் தடரேருளாய்வரும
வெற்றிசோகதிமராடு விரங்குமவெண்மணிமா
மற்றுளசிரகரா மணவமானவரை
யுற்றுயர்சிகரிக ளுவப்படிலமவே. ருய

ஆழிசூழ்புவியினை யனைத்துகாக்கரு
ளாழியா னன்னக ரமாநதுலாவிய
பாழியதிசைதயு டைப்பதுவைவமெனத்தெனக
தாழ்விலாவனகொடி தயங்கவிண்ணினே. ருக

இரவலர்முதலிய வெண்ணிலோர்களும்
பரிவுடன்பசிப்பிணி யகலறுபண்பிணுற்
கரைசெயலரியநற் களிப்பின்மேவுற
முரசொலிக்குந முழக்குமுன்றிலே. ருஉ

கண்ணகனுலகிடைக் கமலனுயநதன
வெண்ணிலோர்களும்வந்தோ ரிமைப்பிற்சேர்வன
வண்ணமாமணிபொனல் வயங்குகாட்சிய
விண்ணளவுறுவதாய் விளங்கும்வாயிலே. ருங

## அன்னதானமகத்துவப்ராணம்.

ஓரெழுகடல்வரைப் புலகமெங்கணு
மீரெழுதலத்தினு மீசன்மாலயன்
சேரும்பல்பதியினுஞ் சென்றுலாவுவ
தார்பெறுஞ்சீர்த்தியந் தனிப்பொற்றேரரோ. ௫௪

இந்திரன்முதலவி சானனீறதா
யுந்துமெணடிகையினு ளுற்றுநீடிய
பந்திபந்தியினுறை பற்பனுட்டவர்
சிந்தையினுறசெலுஞ் செயமெனுங்கயம். ௫௫

பச்சைமாப் பொறியுடைப் பகல்செய் பண்ணவ
னிச்செயந் தினஞ்சுற னேமிக் குன்றினை
யச்ச மில்லாதனைக் கணத்துலாய் வரு
மெச்சமி னீதியென் றிசைக்கும வாசியே. ௫௬

செயுந்தொழி லறிகிலா திகழு றுப்பில
ருயும்வகை யுணர்கிலா துற்று மாக்களின்
பயமொழித் தினியன பகர்ந்துலா வுவ
தயையெனுஞ் சேனையித் தரணி யெங்குமே. ௫௭

தொல்லுல கத்திடை தோன்றிச சூழ்கலி
யெல்லுறுங் கடுங்கதிர்க் கிடைந்து வாடிய
பல்லுயிர்க் குலங்களும பரிவு கூர்தர
நல்லருட் குடைநிழல் கவிக்கு நாடெலாம. ௫௮

துன்னிய பண்ணையிற் றுலங்க வுய்த்தன
மன்னிய நாட்டுளோர மகிழ்விற் றந்தன
மின்னிய முடியுள வேந்த ரீந்தன
நென்னிறை களஞ்சிய நிரை துலங்கவே. ௫௯

பன்னலிற் றெருக்தன பற்ப ளுட்டுறை
மன்னவர் கொடுத்தன மற்றுளோ ரெலாந்
தன்னக மகிழ்வொடு தந்த வெள்ளிபொன்
மன்னிய சாலைகள் பல வயங்குமே. ௬0

கன்னலிற் றந்தன கழைக டந்தன
செங்நெலிற் றந்தநித் திலமுஞ் சேயொளி
மன்னிய துவர்மர கதங்க ளாதிய
பன்னரு மிரத்தினச் சாலைப் பந்தியே. ௬௧

பற்பல விறத்தன பரிகளுக் குந்தன்
பொற்புறு நடையினைப் புரிந்து காட்டுவ
நெற்பொலி பண்டிக ணிரையை யீர்ப்பன
வெற்றியே றுறுநிரை விளங்கும் பற்பல ௪௨.

வெள்ளியங் கிரியென விளங்குமோ தனந்
தெள்ளிய நறுநெய்பால் செறிக மித்திர
ளொள்ளிய பாயச முதல வூட்டுவ
தெள்ளருஞ் சாலைக ளிலக்கி லாதவே. ௪௩

அருந்தவத் தினரொடு மரிய யோகிக
டிருந்திய துறவினர் சிவனமெய் யனபர்கள்
வருந்துத லின்றியெந் நாளும வாழ்வினிற்
பொருந்து மண்டபம்பல பொலிந்து தோன்றுமால். ௪௪

அதன்வடக் கிலக்குமி யமரு மண்டபஞ்
சதிருட னதற்கயல சாருக் ராணநல்
விதமுட னதற்கிய லினிய போனகம
புதுமையி னருளிடம் பொலிந்து தோன்றுமால். ௪௫

வேறு.

இனையதிருக் கோவிலுக்கு நாப்பணிற் சுந்தர மூர்த்தி யினிதின் மேவும், புனைமணிக ளாலிசைத்த கெர்ப்பகிரகமுமவலது புரத்திற் சேர்ந்தோர், வினையகற்றுங் கணபதியு மிடப்புரத்திற் சொக்கலிங்கம்விளங்க முன்னால், வனைமணியா லியனற வுந்தமண்டபமா மண்டபமும் வயங்குமாதோ. ௪௬

ஆறுகான் மண்டபமு மதனயற்சபாநாத ரமருங் கோவிற், கூறு முன்னை மண்டபத்தின் குண்பாற்றீர்த்த மும் பாங்கர்க் கொடியுற்றோங்கு, மாறிறிகழ் மண்டபமுஞ் சந்திநோ வழங்குசங்கப் பலகை யார்க்குந், தேறுதல்செய் யனக்கொடியு மபனுதபூசைசெய் மண்டபமு முண்டால். ௪௭

தென்மேற்கிற் கூபமதன் வடக்கினிலிச் செகத்திலுள்ளோ ரெவரும்போற்று, நன்மார்க்க மிகுமிராமலிங்கதேசிகர் கோவி னண்ணும்பாங்கர், மின்சேர்க்கை யெனவொளிசுந்தரசாமி கோவிலுமுன் விளம்புங்கூபந்,தன்கீட்டிக்கினிற் பழனிக்குமரசாமியின் கோவில்சாருமாதோ.

அனையவதன் கிழக்குயர் சுந்தரசாமி யதற்கயற்சுப்பையசாமி, நினைவினுயர் மௌனகுரு சாமிபுகழ் நிகழ்வுறுங் குமாரசாமி, வினையகலு மிரவணப்பசாமி திருவாலயங்கண் மேவபாங்கர்ப், புனைபுகழ்க்குமாரசாமியு மினிதிற் பொருந்திய கோவிலுமுண்டாமால். ௪௮

## வேறு.

கல்லடுத்தடுக்கி யிடையிற் காரச்சாந்து கவின்பெறப் பெய்தழகு டனே, பல்விதவுருககளமைந்துக்காண்றுவிப் பணபிற்போதிகைகளு த்திரங்கள், புல்லுறவிசைந்து மீதுறபகலலாற் பொலிவுற வேய்ந்தத னுப்ப, மெல்லுறுமணிகள் குயிற்றிநட்கதிபோ விலங்குமண்டபம்பல வுளவால். எ௰

இனையசீர்படைத்த சுந்தரமூர்த்திக் கிலங்கியமேடமா மதியிற், ப னிமதிவளரும் பக்கத்திற்றுசாரோ கணத்தொடு திருவிழாப்பயிற, னனி யுயர்கடக மதிகதிரமதியு நளைகூடிக்கூடுநா ளதனிற், கனிவுடனினிய தே சிகபூசை களிப்புடனியற்றுவ துளதால். எக

கன்னிநன்மதியி னோணபுடைத்திருநாட் கார்த்திகை நற்றிருநாளும் மன்னியமகர மதியுயாபூச மதியுடன்கூடுநா ளினுமீன, றன்னிடைக்க திரா ருத்திரத்திருநா ளொடுபினுஞ் சாற்றுதற்கரிய, நனைலத்தினங்க டொறுமதிதோறு நனியுயர் திருவிழா நடக்கும். எஉ

நன்னலமிகுந்த சுந்தரமூர்த்தி நன்குறு மாலயந்தனிலே
பன்னுதற்கரிய பல்லியமுழங்கப் பண்மிகுந கருவிக ளிசைப்ப
மன்னவர் முதலோர் கரஞ்சிரமகுவித்து வணங்க நாடொறுநதிரிகாலந்
தன்னிலுமுன்னூ லுரைமுறைப்படியே நான்புரி பூசனையுளவால். எ௩

ஈதலான்மறையோர முதலினோர் தமகட் கியற்றிய வன்னசத்திரத்தி
லோதன நூறுட்குயாதினந்தினமு முதவுதற்கருளி மற்றதனின்
மீதுறவரினு மகிழவுடனருளி மேதினி தனிலெமரோக் கெல்லாம்
போதுறவிரண்டு காலமுமன்னம பொருவற வுதவுவதுளதால். எச

மத்தியானத்தில் வருமகுதிகட்கு வயிற்றழனமாற்ற நாடோறும்
குத்துவர்மூன்று கோட்டைபுலநெல்லிற் கூழிடுமுறையினை வகுத்தே
யித்தலத்துளைப்ப தெவ்வணம்பினுநல் லெழின்மிகுசுந்தரமூர்த்தி
மெயத்தநற்புகழை முழுவதுமுணாத்தல் விரிமலரயனுக்கு மரிதால்.

நல்லியன்மிகுந்த சுந்தரமூர்த்தி நன்குறுநகரவள மதனிற்
புல்லியவறிவிற் கியைந்தமாத்திரமே புகன்றன மாணவந்துடனே
யெல்லையில் புகழ்சே ரிரொட்டியாமேனு ளிந்நாடெய்தியவிதமுஞ்
சொல்லுதற்கரிய சுந்தரமூர்த்தி தோற்றமு மறிந்தவாசொல்வாம். எசு

திருநகரப்படலமுற்றிற்று.

---

ஆக்கவிதை ௬-க்கு திருவிருத்தம்-கரு௬

கணபதிதுணை.

## சுந்தரமூர்த்திசுவாமிகள்

# திருமரபுரைத்தபடலம்.

தருமநன்னெறி யென்றுந் தழைக்கவு
மருவில் சீர்த்தியிம் மாநிலத் தெய்தவுந்
திருவுலாவிய சுந்தரமூர்த்தி சீர்
மரபினீர்மை வழுத்தலுற்றுமரோ. ௧

அரசெலாம்வந் தடிதொழுதேத்துமெ
முரசின்பேரொலி யெனறுமுழங்குவ
ணைசெயற்கரி தாகியகாட்சிய
விளாமலாத்திரு மேவுமயோத்தியே. ௨

அன்னமாநகர் தன்னிலறநெறி
துன்னவாரிசூ டொலலுலகாண்டருள்
கன்னல்வின்மத னென்னக்கவின்கொளு
மன்னர்மன்னன் றயரதவள்ளலே. ௩

ஆறிரென்றுகொண் டண்டரிறைமிசைச
சீறிவந்த வசுரர் திரளெலா
நூறிவிண்ணவர் நோயமை யகற்றிய
மாறிலாவென்றி மாலைகொண் மார்பினன். ௪

துன்னுசீர்த்தி துலங்குந் தயரதன்
றென்னகர்க்கணிற் றென்றுநாட்டிற்றுநீண்
மன்னர்பின்ன ரனுமரபாலவன்
றன்னகத்திடை நண்புறச்சார்ந்தனர். ௫

முத்தொழில்வைசி யர்க்குமுன்மேவினு
மத்தொழிற்கவர் தம்மையமைத்திடா
துய்த்தநூன்முறை யாலுயர்வேந்தர்பா
லெத்தலத்தினு மெய்தியிருப்பரால் ௬

வெற்றிவேந்தன் வியன்படையாறினுட்
சுற்றநண்ணுந் துணைப்படையாகியுங்
கற்றுணர்ந்துயர் காவலன்மந்திரத்
துற்றுநாடுவ தோர்ந்துரைப்பாரரோ,

பின்னும் பற்பல பேருதவித் தொழின்
மன்னன் சிந்தை மகிழ வியற்றலா
லின்னுயிர்த்துணை யாகுமிரொட்டிய
ரென்னவேமகிழ் வெய்திநட்டானரோ. அ

நண்புகொண்டமர் நாடனில்வேந்தர் கோன்
பண்புடன்புரி யுந்தவப்பான்மையாற்
றண்கடற்றுயில் வோனறையை செய்துநல்
விண்படர்ப் புகழ்ச சேயெனை மேவினன். கூ

பின்னுமூன்று னயா பிறந்திட
மன்னும் பின்னெவ ரும்மகிழ் வெய்தவே
பன்னுநூல்க ளனைத்தும வசிட்டன்பா
னன்னலத்தொடு கற்றுயர் நாளினே. க0

கோசிகன்பினர்க் கோதண்ட வத்தனு
மாசிறயபியு மன்புடனேகியே
நீசிதாடகை தன்னுயிர் நீக்கியத்
தேசிகன் குறை தீரவியற்றியே. கக

கருங்கல்லாகிய கௌதமன தன்மனைக்
கொருங்குசாப மகற்றியுயர்தவன்
மருங்குசென்று மிதிலைமனகன்னியைத்
திருந்துநன்மணஞ் செய்துதிருமபியே. கஉ

மழுவலானும்பின வாங்கநாண் வாங்குவிற்
றழுவுதோள னயோத்தியிற் சார்தலும்
வழுவினமனனன் மனமகிழ்வெய்தியே
பழுதிலாப்புவிப் பாரமபெறுகென. கங

தந்தை வார்த்தை தடுத்த மகாதென
மைந்தன் சிந்தை மகிழுவினியைதலு
மந்தணா ரமைசசா மற்றியாவரும்
வந்துசேரும வகைபுரிந்தானரோ. கச

மறைவலோருடன் மற்றுமுள்ளோர்களு
மிறைவன்முன்னரி னெய்தினர்நாளையே
முறைமுடிசூடுகவென்னலும
பிறையணிந்திடப் பார்த்திபன்கூறினன். [illegible]

அரசன்கூறலும் யானையின்மீதமர்
முரசின்பேரொலி யெங்குமுழங்கவும்
பரிவின்மைந்தரைப் பார்த்துயர்கைகைபால்
விரைவின்வந்து விளம்பலுற்றுளரோ.

உற்றுரைத்தமை கேட்டுயர் கைகையன்
பொற்றொடிக்குப் பொருமையுட்டோன்றலு
முற்றன்கொண்கன் மொழிந்தவரங்களால்
வெற்றியெய்துவ லென்னுமவ்வேலையில். கஎ

மன்னர்மன்ன னவனுறமாதுநொந்
தின்னலெய்தினள் போலவிருந்தலு
மென்னகாரண மீதெனமன்முனீ
நன்னலத்தி னவில்வரமுண்டரோ. கஅ

ஒருவரம்பரதன் புவியோம்பமற்
றொருவரத்தி னிராகவனோங்கிய
தருவுறும்பழு வத்திடைசார்கவென்
றரிவைகூற வரசனுஞ் சோர்ந்தனன். ககூ

அனையகாலை யிராகவனத்தனை
நினைவினேடின னவவிடைநோதலும்
வினையிற்கைகையன் மெல்லியலெய்தியே
யினையபூமி பரதனுக்கெனவும உ0

மற்றுநீவரு டமபதினன்குயர்
கொற்றமாதவர் கூடுமவனத்திடை
யுற்றுமீடி யெனவுயர் மன்னவன
சொற்றனன்னெனத் தோகையியமபினள். உக

சிற்றவையிவை செப்பிடக்கேட்டுடன்
பெற்றதாய்க்கும் பிறர்க்குமுரைத்துயர்
வெற்றிமேவிய வீரனுந்தம்பியும்
பொற்றொடித்திருவும் வனம்போயினர். உஉ

அய்யன்சீதை யருள்செறி தம்பியும்
வெய்யகானிடை மேவின ரென்றலும்
பொய்யின்மன்னன் பொறிகலங்கித்துய
ரெய்தமாநகர் மாந்தரிறங்கினர் உ௩

மகாமகோபாத்யாய, டாக்டர்
உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்,
அடையாறு, சென்னை-20.

அன்பின்மன்சுத னுனவிராமனை
யென்பினூற்ற மிவனெனவுன்னிய
மன்பினென்னு மரபினர்யாவருந்
துன்பினோடைந்தத் தொன்னகரோவியே. ௨௪

## வேறு.

மனுமுதலாக விந்த மரபினி லிலக்கிலாதார்
புனைமணி முடிகடாங்கிப் புவியினைப் புரப்பதானு
ரினையன நிகழ்ந்ததில்லை யிராமனைப்பிரிந்திவ்வூர்வாழ்
மனைநல மென்றுமென்று விரெட்டியர்வழிக்கொண்டாரே. ௨௫

சிலநுதற் சீதைபின்னோ னுடனுந்தென்றிசையைநாடி
மலையொடுநதிகணீங்கி வர்மாலேகினனென் றுங்கட்
சிலர்சொலுமொழியைக்கேட்டுத் தாமுமத்திசையைநாடிப்
பலபலவளங்களோங்கும் பாண்டிநாடுற்றாரன்றே. ௨௬

தென்னவனரசுசெய்யுந் திருவளர் மதுரைதன்னின்
மன்னிய சொக்கலிங்க ருடன்மகிழ் கயர்கண்ணம்மை
துன்னிய கோவிலெய்தித் தொன்முறைப் படியேபோற்றி
நன்னல மானசோதி மகிழ்துதி நவின்றுநின்றார். ௨௭

அனையவாறிருக்குங்காலை யந்நகரரசு செய்யுந்
தனைநிகரில்லாநிமலத் தாரினு னுங்கண்மேவி
யினையவர் செயல்களெல்லா மியம்புறவறிந்து பின்னர்க்
கனிவொடு மன்பினோர்கள் களிப்புற வரிசைசெய்தான். ௨௮

அங்கயற்கணியொடீசர்க் கத்தசாமத்திலாற்றும்
பங்கமில்பூசைக்கன்பாற் பாண்டியன்மாலையீந்து
துங்கமுளிரெட்டிமார்தந் தொங்கலைசூட்டிப் பின்னுற்
சங்கையில்லவர்கணல்குந் தாமபுனைவிகளென்னு. ௨௯

மீனகேதனனுங்கூற விளங்கிய வாதிசைவர்
பானலின் மொழியாள் பாகர்க் கம்முறைப்படியேசூட்டத்
தேனலர் தாரான்பின்னுஞ் செப்பின னிதுபோலென்று
மேனலமாக மாலை சூடுதல்மேன்மை யென்றே. ௩௰

அன்னநன்முறையினுற்று லாற்றுது மென்று கூறி
நன்னலமாகவென்று மம்முறைநன்கி னுற்றற்
கின்னியற்பொருளு நல்கியேபந்தரம் விடையும் பெற்றுப்
புன்னுமீனேக்கியீசன் பதமலர் பணிந்துமீண்டார். ௩௧

மற்றுமந்நாட்டினெங்கும் வளர்புகழ்க் கொருவனான
வெற்றிசேர் புயனைத்தங்கள் விழியிடைக் காண்கிலாம
லெற்றினியியற்றுமென்று வெழில்கொள் பால்வனத்தினெய்திக்
கொற்றமலுரத்தின்கீழார் சிவலிங்கக் குறியைக்கண்டார். ௩௨

கண்டக மகிழ்விற்பாங்கர்க் கயலினங்களித்துத் துள்ள
வண்டறை மலர்க்கைலாய கங்கைநீர் மருவியாடி
யண்டர்கட் கிறைவன்போற்று மண்ணலைப்பணிந்துவாழ்த்தித்
தண்டலை மருங்கிலுற்ற கோவிந்த முனியைச்சார்ந்தே. ௩௩

அவன்மலர்ப் பதங்கள் போற்றி யையவிராம நம்பி
நவையக றம்பியோடு நாயகியுடனும் போந்தான்
புவிமிசை யவர்கட்காணும் பொருவறு நெறியைக்கூறுந்
தவமுயர் முனியேயென்று மாதவனை சாற்றலுற்றான் ௩௪

தயரதன் சிறுவன்றன்னைச் சார்வதற்கரிது நும்மா
லயல்செலாதிந்நாட்டி லமர்வதே நன்மையென்று
னயமிகு மிவராலிங்ங னல்லறமோங்கு மென்றும்
புயல்வணன்விளக்குமேலைப் பொருளுநன்மனத்துட்கொண்டே. ௩௫

அம்முனிபுகலக்கேளா வனைவருமனத்துட் கொண்டவ்
வெம்மைதீர் முனிவற்போற்றி விளைதொழிற் குரிமைபூண்டு
பொம்மென வவரவர்க்கும் புந்தியி னிசைவதான
செம்மைசேர் நகர்கடோறுஞ் சென்றினி துறைவதானார். ௩௬

இந்தநன்னெறியினுற்ற விரெட்டியர் மரபிற் றோன்றுஞ்
சுந்தரானந்தரென்றோர் சுகுணர்பற்பலநா ளாய்ந்து
கந்தமார் பொழிலினுளுங் கார்தவழ்பொதிகை யெய்திச்
சிந்துவை யொருகைக்கொண்ட செழுந்தவ முனியைப்போற்றி. ௩௭

அகத்தியல் பகையைவென்ற வம்முனி விடைபெற் றேகிச்
செகத்தினி லெவரும்போற்றுந் திகழ்மகா லிங்கமேய
மகத்துவ முயர்நாற்கோண வரைமிசையுறு கோரக்கர்
முகத்தினி லெய்தியந்த முனிகழலிறைஞ்சியேத்தி. ௩௮

பின்னுமம்மலையிலுள்ள பெருந்தவத் தினர்களோடு
நன்னலத்துடனேகூடி நட்புமேலோங்க நாளும்
பண்ணுதற்கரியகாய கற்பங்கள் பலவுஞ்செய்து
மின்னவிர்வேணியானை விரும்பியாங்கமருநாளில். ௩௯

அந்தகன்றனையும் வென்ற வம்முனி மரபுதன்னிற்
சந்ததம்வெங்கடேசன் சாருஞ்சாத்தூர்க்குக் கீழ்பாற்
கந்தஞ்சேர் பொழில்கள் சூழுங் கற்றூழநகரிலென்று
நந்தலிறவத்திராம லிங்கநன்னலத்தின் மிக்கோன். ௪௦

மன்னவர் புகழுந்தூயன் புரிந்தமாதவத்தின் பாங்கான்
முன்னொரு புதல்வற்பெற்று முகமலர்ந்திருப்பப்பின்னே
கன்னியோர் பாகனன்பாா கவின்கொள் சுந்தரருவந்து
நன்னிலக்கிழத்திநாளு நன்குறவுதித்தார்மாதோ. ௪௧

வேறு.

கலியுக நாலாயிரத் தெண்ணூற் றிரண்டாய்க் கழறும்விசுவருட
முயர் கடகபானு, பொலிவுமிகுந்திதிவாரமயோகநாளும் புகலரியகரண
மெலாஞ் சுபமேயாகக், கலைகொண்மதிபிரவிமுதற் கோட்களெல்லாங்
கவினுறநட்பாட்சியுச்சங் கேந்த்ரங்கோண, முலவுசென்மந்தனம்பாக்ய
மிலாபந்தன்னி லுற்றவிவன் யோகபிரபல னென்றூரால். ௪௨

வேறு.

மைந்தனுற்றமை கண்டக மகிழ்பிதா வனையுந்
சிந்தையிற்களிப் பெய்திநஞ் சிறுவன்மெய வனைப்பாற்
சுந்தரம்மெனப் பெயரித்தந் தொலலுலகறியத்
தந்துவேதியர் பெறப்பலதானமுந்தந்தா. ௪௩

வேறு.

பாலகன்றேன்றலோடும் பகைமெயமையிருத்தற்கான
சீலமாயிருத்தலோடுந திகழ்நன்மை தவழ்தற்கான
ஞாலமேற் றவழ்தலோடு நனமறைநிற்றற் கான
கோலமாய் நிற்றலோடுங் குணம்பொறை வளர்ந்தமாதோ. ௪௪

பாரிற் சேய்வளர்தலோடும் பயிலறநடத்தற் கான
சீருடனடத்தலோடுந் தீவினைசெல்லற் கான
வீருடன்செல்லலோடும வெங்கலிபயந்திறேட
வார்தருநூல்களியாவு மறிந்தனரென்பமாதோ. ௪௫

வேறு.

எழிலினுயர் மதனென யாவருமுன்ன
வழுவிலாக்கலை வலத்தினல் லுசனைமானத்
தழுவும் வெற்றியாற் றயரதன் சிறுவனை நிகர்ப்ப
பழுதிலாப் புகழ் தரணியிற் படர்தர வளர்நாள். ௪௬

எண்ணிரண்டெனும் பருவம்வந்தெய்த நன்மடவார்
கண்ணிரண்டினுங் காண்டொறு மயலெழக் கவின்சேர்
வண்ணமேனியன் றனக்கு நனமரபினி லுதித்த
வெண்ணவேட்டன ரனைபிதாபெருங்களிப் புறவே. ௪௭

அரியநன்மணக் கோலத்தி னணங்களு ளுடனே
பரிசனங்களுஞ் சூழ்வரப் பல்லக்கி னெய்தி
முரசுகாகள முதலபல் லியங்களு முழங்கத்
தெருவினுற்றமை கண்டுபல்லரிவையர் சூழ்ந்தார். ௪௮

ஈசன்கட்படா வெழின்மிகு மைந்தனை மென்பர்
வாசவன்றரு மதலையாள் விசையனு மெனபர்
காசணித்தனக் கன்னியர் கலைகலன்புனைந்து
வாசமேறுறுமுனை மயலெழ வந்துவந்துறுவார் ௪௯

ஒருத்திசுந்தரமூர்த்திதன் வனப்புறநோக்கி
யருத்தியாலவனுற் றரிவையர்களைப் பார்த்துக்
கருத்தைசசந்துரை கருமபடி கடிதினைவினையான்
திருத்தியிவ்வழி மீண்டமை தெரித்திரோவென்றாள். ௫௰

அரம்பைநாணுற வழகினி னுயர்ந்த வோரரிவை
சுருமபு சோகுழல சோரநற்கலை கலைசோர்ந்தாள்
விருமபித்தன்னகம மேவிய நாணமுதனீத்தாட்
கருமபுறப்பொரு வானவைதரிககுமாறுளதோ. ௫௧

சுதைநிகாத்தநன் மொழியினையுடைய வோர்தோகை
புதியபலலணி புனைந்துயா வீதியிற் போந்து
கதுமெனக்கவின் காணடலும காதனமீதூற
மதிமயக்குற மண்மிசை யயர்ந்து வீழ்ந்தனளே. ௫௨

இனையபற்பல மடந்தையா மயலினு லிடையப்
புனைமணிக்கலன் பொலிவுற வீதியிற் போந்து
முனைமுறைப்படிச சடஙகுகள் யாவையுமுடித்து
மனைவி தனனொடும் மகிழ்வுற வைகுநாளினிலே. ௫௩

வேறு.

ஆதிதேவன தருளினற்சகத்திடையனைவருமகிழ்வெய்த
மாதுதன்வயிற்றுதித்தனரழகியமைந்தர்களவபம்விஞ்சும்

கோதிலாக்குணக்குமரசாமியும்வயங்கொள்ளும்பாப்பையாவென்
றோதிநாமமும்வேதியர்க்கரும்பொருளுதவிவைகுறுநாளில். ௫௪

தன்னகத்துறு மகிழ்வினுஞ் சுந்தரர் தமைமுனே நாளீன்ற
வன்னைதந்தையு முன்னயன்விதிப்படி யமரர்வாழுலகெய்தப்
பின்னவர்க்குறு சடங்குகள் யாவையும் பெருநலத்துடனாற்றி
மன்னுமுன்னவன் சுந்தரரொடுங்கிளையொடு மருவிவாழ்ந்தனர் மாதோ.

சுந்தரமூர்த்திசுவாமிகள்

திருமணம்புரைத்தபடல முற்றிற்று.

——(*)(*)(*)(*)——

ஆக படலம் ௪க்கு திருவிருத்தம் - ௨கக.

உ

சிவமயம்.

சுந்தரமூர்த்திசுவாமிகள்

## துறவுப்படலம்.

பாரெலாம்புகழ் கற்குடும் பதிதனி லொளிதிகழோங்கிச்
சீரெலந்தழைக்க முனாளோன் சேயர்தன்னுடன வாழ்நாளிற்
காரெலாவுயிர்க்குநல்கும் காரணமேபோலுநிதி சிந்தை
கூரவந்தவர்கட்கெல்லாம் கொடுத்தனரன்னதானம். ௧

அன்னநாட்டன்னின்முன்னோ னருளியதனயர்பாகந்
தன்னையே பிரித்துவேறு தானுமந்தம்பாகத்தை
நன்னலமானமைந்தர் தங்கள்பானயந்துதந்து
மன்னிய மணஞ்செய்வித்து மகிழ்வுடனிருக்கசெய்தே. ௨

இன்னியற்பதியையோவி யெழிற்சதுர்வரைக்குக் கீழ்பான்
மன்னுசீர் செழித்தகூவள யாங்கரத்தனையுற்றுக்
கன்னகுபுயத்தர்சின்னாட் கனறொடுபசுக்கண மேய்த்துப்
பன்னுதற்கரிதா யோங்கும பழுவத்திற் சரிக்குநாளில் ௩

கொற்றஞ்சேர் கருப்பனாந்த கோவிற்பூசாரிதன்பா
லுற்றவன்றனதுசிந்தைக் குவப்புறவிலங்கித்தோன்ற
நற்றவன்மனத்தின்மிக்க நன்புகொண்டையர்போய்க
குற்றமிறண்ணீர்ப்பந்தர் குவலயத்தியற்றுகென்ன ௪

குருவருளெனத்தஞ்சிந்தை கொண்டகமகிழ்வினோடுந்
திருவுலவியநற்கூவ னகரிடைச்சேர்ந்துநாசத்
தருநிகர்கரத்தராங்கட் டண்புனற்பந்தர்வைத்துப்
பருவரல்கெடவெல்லோர்க்கும பாங்குடனீத்தமீந்தே. ௫

பரமன்மேற்பத்தியுற்றே யிம்முறை பரிவிற்சொன்ன
பொருவறுகருப்பன்கோவிற் பூசனைபயிற்றுமோன்பா
லருள்செறிமனத்தினோடு மதுக்கதுமெனவுகணடே
யிருளகல்பரிதிமான விலங்கியாண்டமருநாளில் ௬

பின்னுமப்பூசகன்றன் பேரருளுதவியாலே
யன்னமாமுணவைநீக்கி யாவினாற்பால் பழயவாரங்காற்
பன்னுதற்கரியபாசிப் பயறுமப்படியுட்கொண்டு
முன்னுறுந்தண்ணீர்ப்பந்தர் முறைமையாநியற்றுநாளில், ௭

கோவிற்பூசகனன்பார்ந்து கூறியமுறையினாப்பி
னாவின்பால்பயறுநீக்கி யருங்கந்தமூலமுண்ணாட்
டாவிலா மாலிங்கேயர் சாவுறாச்சதுர வோங்கள்
மேவிமெய்யடியர்ப்போற்றி மீதுரெனநாவுரைத்துமோடும். ௮

நல்லதென் றுவந்தாங்கீச னண்புடையவரைநாடி
தொல்வரைக்கருகதாகச சுந்தரமூர்த்தியன்பாற்
செல்லுறுமளவையின்கட் டிகழ்கட்டிச்சுருதிற்றேன்றூம்
வல்லவிரமலிங்க மாதவர்தம்மைக்கண்டார். ௯

கண்டக மகிழ்ந்துசெய்ய கழலிணைபணிந்துபோற்றி
யெண்டவர்தேடிக்காணு வெழில்மாயாதசேவை
கொண்டருளமேவநாயேன் குணமபொனையுற்றமேனுண்
மண்டலந்தன்னிலாற்று மாதவம்யாதோவென்றார். ௰

தினகர னவிர்கண்டேகுந் திமிரமபோற் வங்கலிரல்லா
மெனையகன் றேகுமாற்று வினைநருள் புரிந்தாமென்று
மனதுநெக்குருக்கிக்கண்ணீர் மதைமெயன வாரநின்று
துனியறத் தேறிப்பின்னுந் தேசிகர்த் தொழுதுசொல்வார். ௧௧

வேறு.

தாதாருமலர்க்குழலார் மண்மொன்னெனச்சாற்றுகின்ற நசைமூ
ன்றிற் சார்ந்துநாளும். கோதாரும்வினைகள்பலபயிற்றியிந்தக் குவலயத்
தின் மிகுகொடிய னெனவுங்ஞாலும், வேதாவுந்திருமாலுந்தேடிக்காணு
விரிசடையோன் மகிழ்ந்துளத்தின் மேவப்பெற்ற, நாதாநின்றிருவடிக
ள்போற்றப்பெற்ற நான்பெற்றபெயரெவரானவிலற்பாற்றே. ௧௨

செய்யமறைப் பொருளையுணர்ந்துணர்வோர்நாடுஞ்செவ்வமேதெள்ள
மிர்தேதேனேபாகே, துயபாசுகானந்தவெள்ளப் பெருக்கேபூமேற்றோற்
றுமுயிரனைத்திநுக்குந்துணையேயானாரும், மையலரிகடந்து கதிக்கரையி
னுய்க்கு மரக்கலமே வளரொளியே வயங்குமவாழ்வே, யையநினதருட்
பதங்கள்போற்றப்பெற்ற யான்பெற்றபெயரெவராலறையற்பாற்றே. ௧௩

## வேறு.

தொண்டனெனையாளொன்றுத் தொழுதலுமனத்திலன்பு
கொண்டுமெயதழுவியுள்ளங் குளிர்தரவினிதுகூறிப்
பண்டுறநிகழ்ந்தவெல்லாம் பரிவுறவினவிப்பின்னர்த்
தண்டலிறுறவின்றன்மை சாற்றுதுங்கேண்மினென்றே ௧௪

இல்லறநெறியினுற்றோரம்முறைதகியைவதான்
சொல்லறநெறிவழாமற்றுலகுதன்மையாகு
மல்லதுதுறவினுற்றோ ரந்நெறிமுறைவழாம
னல்லறநெறியிற்பந்தை பொருட்டவாழுதனன்றாமால் ௧௫

மெய்யைமெய்யென்றபோது வியனுலகனைத்துமெய்யே
மெய்யும்பொய்யானபோது விரிவுறுவுலகமெங்கே
தையலர்சுதர்களெங்கே தமபொருளொன்பதெங்கே
யையவீதுணர்ந்தயெனனுட் பிறவாருமறைவதானுர் ௧௬

புவிவின் கான்மதியம பானு பொய்முதல்விடுத்துனே
தவிசுயரணைமேற்கட்டி சாமரம்விளக்கில்லாளா
யவமில்கேவலமேயின்ப மாகவோரரசன்மேனட்
டவநெறிமுறையிற்சென்று னெனமுன்னூல்சாற்றுங்கண்டாய்.

## வேறு.

ஈதலதுவீரரித்தெந்தோற்றும்வேந்த னில்லறவாழ்வினைவெறுத்து
க்கானிலேகித், தீநகலத்தனித்திருந்தைதப்புலனைவென்று சிவனையகத்தி
ருத்திநமச்சிவயவென்ன, வோதிபவண்மேவுறப்பெண்மணியென்றோது
மொண்டொடிபதோழியர்களுடனேவந்து, மாதரெல்லாமோர் மருங்கு
செல்லத்தானும் மாதவத்திற்சிறந்தோனைமகிழ்விற்கண்டாள். ௧௮

கண்டவுடனிவட்டரமன் கட்படாத காமனோவெனமனத்திற் காத
ன்மீறக், கண்டுநிகர்மொழியளவனருகிலெய்திக் கழறுகின்றுட வம்புரி
யுங்காளைவீர, பண்டுறைவதெந்நகர் மெற்றோர்யாவர் பண்மிகுனும்பெ
யர்யாதுபகர்மினென்னத், தண்டரளமாலைமின்னவிரதிமானுந் தையலை
க்கண்டுளொணித்தலைகவிழ்ந்தே. ௧௯

எந்தைதிருப்பெயர் வீரசேனனென்னை யீன்றவடன்பெயர்வீரசு
வெஃ.பார்க, ணந்தலிலாவென்மனைவிக்குநாம நற்கமலலோசனைநான்
வீரசித்து, சிந்தைமயக்கறவிந்தவனத்திலென்றுந் தினையசத்திருத்தி
யருந்தவநான்செய்ய, வந்தனனென்றுரைக்குமொழிகேட்டுநன்றாய் மா
துபினுமாதவனைப்பார்த்துச்சொல்வார் உ௰

மாமணிப்பொன் மண்டபந்தித்திரகூடங்கள் வாய்ந்தபலபாக்கிய
ங்களனைத்துமவிட்டுக், கோமுறைசெய்யரசியரசுந்தவிர்த்துமிக்க குண
முடையமனைவியர்தம்போகநீத்துத், தாயுந்தையுமாம்விட்டுப் பாலுள்கா
னிற் றனித்திருந்தீர் தம் மொன்றுமில்லாப்போலச், சேமநிலாதெ
ன்றேமருளுற்றீர்நாள் செப்புமென்மொழிமனையிற்சேருநன்மை. உக

மதனனைநிகருவ ருகுமிளமைபெற்ற பாலருடர்க் கிவ்விரண்டு
முறவருமையன்றோ, விதமுறவிவ்வினைமேவிற் றின்பநீத்தி ரிப்பவருமக
ன்றுயர்மூப்பெய்திறைப்பின், சுதையமுதமொழியுடையமாதர்போக
ந்துய்ப்பதற்கு வருமோநூர்து மவியானுண, மதிமிகவோவழகிலளோ
வாகிலென்னை மருவியினடசுகத்துடனேவாழுவோமே. உஉ

என்னழகுநும்மழகுக்கொத்தவாருமிருநலத்திலிருவருக்குமிணை
வேறில்லை, நன்னலத்திறுடைய வாரிசையுந்திராவுறு நம்மருவேனுமக்கு
வேண்டுவனவெல்லாம், பின்னுமொருமனைமனையாளிடைப புலிப்பாலுண்
டு பிறங்குமுமதுடைமராதளிப்பலுன்பீ, ரென்னைமணமபுரிந்தவனைமரு
ந்துநல்கி யின்றிரவேகொணறிடவேண்டாவேறில்லை. உங

அன்னவனுடனைத்துநீராளவாகுமரண்மனையேமுதலாயபொருள்
கட்கெல்லா, மனைவனுநீராகமஞ்சமீது மருவிவெகுசரச வொய்யாரங்
களாகத், தன்னிகரின்மதநூலின்முறையாற்போகந் தருவனுமக்கினிம
ற்றோர்தமக்குநல்கேன், பொன்னின்வீப்பூணணிந்திகழ்பெண்மணியென்னை
மம் புரவலனேயென்றபினுமபுகல்வதாருள். உச

இந்தநந்தவனந்தனின்மலரின்வாசமின்பசுகம்விளைப்பதற்கோ
ரேதுவாய, சந்திரன்போலொளிதுலங்குமபட்டுமெத்தைதலையணைகடக்
கபலபடங்கள்கொண்டு, வந்திடுவர்தோழியர்களுமதுசிந்தை மகிழ்ந்து
ரைத்தகுற்றேவல்வகுக்கவல்லார், புந்திதனிலெள்ளளவும்பயமில்லாமற்
புரவலரேயென்முகத்தைப்புரிந்துபாரீர். உரு

வேறு.

செய்யதாமரை மலருளாளொடு தேவர்மங்கையர் யாவரு
மையவென்னெழில் கண்டுநாணின ரந்தரத்தினடைந்துளார்

மையின்மாதவ ரெனினுமெந்தன் வனப்புநோக்கின் மயங்குவார்
வையமானுட ரென்னைநோக்கின் மயங்குறாதவர் யாவரே. ௨௬

மின்னைப்போலொளிர் கின்றவென்றிரு மேனிகண்டிடி லவியுருத்
தன்னைக்கொண்டவ ரேனுமெய்தளர்வெய்திநொந்துவருந்துவார்
பொன்னைக்கண்டுடன் கைக்கொளற்குயர் புந்தியற்றவரர்போ
லென்னைக்கண்டுநேர் நோக்கலின்றியிருப்பதிலென்னபாவமே. ௨௭

ஓதுபேரழ கிளமையாவயு முடையநீர்தனி யேயுளப்
பேதைமாதர்கள் கண்டபின்னுமை விடுவரோவிடிற் பெருமையோ
காதலாலிவ ணுற்றுளோனொரு கணமெனுநுமை யகல்கிலேன்
போதவேண்டுவ தெவணினெவ்விணும் யானுநும்மொடு போதுவேன்

என்றுமாதுரை கூறவேந்தனு மிறையவன்செய லென்னவே
நன்றுநன்றுநீ சொற்றவாசக நாறுதுன்பல வுடற்றனை
யொன்றுமெவ்வன மென்றுகூறில தின்றுநாளையொழிந்திடு
நின்றசீவ னகன்றிடிற்சவ மென்றுநீணில மோதுமே ௨௯

பொற்றொடிவெகு சுந்தரம்மெனப் புகலுகின்றவித் தனுவினை
யுற்றுநோக்குதியென்புதோனரம் பூண்பொதிந்ததினுள்ளுறக்
குற்றமாகியமலசல புழுக் கொள்ளொணுமுடைநாற்றமே
பற்றும்பொய்யுட றன்னைமெய்யெனப் பகர்வதிலென்னபாவமே. ௩0

சிட்டரானவருடலினுசையுந் தெரிவைமார்நசை தீர்ப்பராற்
கெட்டதாம்பலதெரிவைமார்நல மென்றுகேள்வியுற்றறிகிலார்
கட்டமேதருநாறுமியாக்கையை நச்சுவாரவைநச்சிலேன்
றட்டபுத்தியைவிட்டுநியய றாரவேகுதிதோகையே. ௩௧

ஆசையுற்றயன்மாதர்போக மகந்திலுன்னினுமன்னவன்
மாசுறத்தந்தைதாயுடனகும்பி பாகவன்னரகெய்துவ
னேசமுற்றயன்மாதரார்முக நோக்கினன்றெனுநினைகுவோ
னீசனுயொருகற்பகாலம்வன் னிரயமெய்தியங்குழல்வனே. ௩௨

நாசிகாதுகண்புருவநெற்றிதோ ணகில்கண்மற்றுளவியாவையுங்
கூசலின்றியேவேறுவேறுநேர் கூறியேமயல்கொண்டுபின்
சீசிமற்றவர்மலசலக்குழி மீதிலிச்சைசெலுத்துவோர்
பாசந்தீர்பரலோகசிந்தனை யற்றபாமரராவரே. ௩௩

கலவியுற்றகன்மாதரார்குழி காணும்பன்றியின்குழியென
வுலகினல்லதீதல்லவென்பதை யுன்னுமாறென்னகன்மமோ

நிலவுசெஞ்சடைகொண்டவீசனை நெஞ்சகங்கொளாகெட்டே
னுலவுபன்றியினுடலினுங்கடை யாகுமென்னவுரைப்பரால். ௩௪

## வேறு.

செல்வமுற்றுக சிறப்புறவாழ்நாட்
பல்கிளைத்துணை நட்பும்பலலாறு
மல்லலெய்தி னகல்வரணுகல
வில்லறத்தி னுறுஞ்செயலின்னதே. ௩௫

இறந்தகாலையின மைந்தர்மற்றியாவருஞ்
சிறந்திறணகுறை செய்புவதினறிகல
வறம்புரிந்திலே யேயரனமெய்ப்பகஞ்
செறிந்துறுந்தவஞ் செய்திலேயேயெனுர். ௩௬

அந்தமேவுறு காலையரினவையா
தந்தமக்குறு தாழ்வெடுத்தோதுவர்
நந்தமக்கொன்று நாடாரவர்களைச்
சிந்தையிற்கொளல் சீரியதாகுமோ. ௩௭

ஆதலாலவ் வரிவையர்பொனபுவி
மீதுகாத றவிர்த்து விருப்புடன்
பூதிகணடிகை மாலைபுனைந்துநா
னுதிதேவ னருட்சரணடினென. ௩௮

கண்களண்ணல் வடிவினைக்காணுறப்
பண்கொணுவவ னமம்பகர்வுற
வெண்ணகொள்காதவ னின்புகழ்கேட்புறத்
தண்கொள்செம்பதத னெமனஞ்சார்ந்ததே ௩௯

தாகததோடுதன மேல்விழுந்தாடனைப
போகச்சொல்லுதல புண்ணியமனறென
நீகற்றேறுதினு நீதியண்ணுறபரர்
போகத்தாற்பவன் போவனரகினே ௪௦

காலவேலவிழி யார்கணத்தினபமே
யாலந்தியு மருங்குமபி பாகத்திற்
சாலவேபல கறபங்களசார்விக்குங்
கோலநீள்விழி யாயெனறுகூறலும். ௪௧

மின்னனுளும் விரும்பியனைத்துங்கேட்
டன்னதேயுறு திப்பொருளாமெனத்

தன்னகத்திரு ணீங்கிக்களர்வொரீஇத்
துன்னுமன்பிற் றுலங்கியகாலையில். ௪௨

பொருந்தும்பெண்மணிப் பூவையொடெய்திய
வருந்தலில்லா மடந்தையர்யாவருந்
திருந்துகானிடைத் தேடியப்பெண்மணி
யிருந்தசோலையி னெய்தலுற்றாரரோ. ௪௩

வேறு.

இனையவாறவ ணெய்திய மடந்தைய ரெவரும்
வினையைவென்றுயர் வீரசித்தழகெல்லா நோக்கித்
தனைநிகர்த்திடா மதனிவனுருக்கொடு சார்ந்தா
னெனநினைந்தவன் றனைப்புணர்ந்திடவதாய் வளைத்தார். ௪௪

வந்தொருத்திதன் மகிழ்நனென்றேகரம்பிடித்துச்
சிந்தைமீதுறு காதலைத்தீர்த்தியென்றீர்த்தா
ளிந்துநேர்முகத் தேந்திழையொருத்திமற்றொருகை
யுந்தியென்னிடத் துறுதியென்றுவிழுந்திற்றாள். ௪௫

மானையொத்தகண் ணொருத்திபோய் மடிபிடித்திழுத்தா
ளேனையோர்பலர்களுஞ்சென்றாங் கவரவாக்கியையு
மானவாறொரு பொறியினை யனைவருமிழுத்தன்
மானமேவபல மங்கையர் தவனையீர்த்தனரே. ௪௬

ஆயகாலையில் வீரசித்தரும் கசைவிலதாய்க்
தீயசெய்தவ ரெனச்சற்றுஞ் செறுத்தல் செய்யாம
னேயமெள்ளள வெனினு நெஞ்சகத்திலதாய்
மேயயாவையுஞ் சிவன்செயலென வியந்திருந்தான். ௪௭

ஒருத்திதன்னகிற் புயத்தழுந்துறக்கட்டி யணைந்தே
யருத்தியானமுகத் தொடுமுகஞ் சேர்த்தன ளகலா
டிருத்தமாயிதழ் சுவைத்தெண்புட்குரல்களுந் தெரிந்தாள்
வருத்தமின்மனங் கலங்குறாதிருந்தனன் மன்னே. ௪௮

அன்னகாலையிலவளைநீத் தொருத்திவந்தணைத்து
வன்னவாடையி லாதவன்மடியின்மேலேறித்
துன்னுநற்குறி பொருத்திப்பூரித்தனளென்றுமன்
மன்னுமாசைநீத் தகன்றாளம்மடமாதே. ௪௯

பினும்பல்பூவையர் பெட்புறுநசையினாற் றாமும்
புனுகுபூசைபோற் புகுந்தொற்றி யொற்றிப்பார்த்தினிதா

நினைந்தவாறென்று முடிந்திலையெனநிற்குங் காலை
வனைந்தபூங்குழற் பெண்மணிமாதுரை வகுப்பாள். ௫௰

மாதரீர்கணீ ரித்தனைபெயர்களைமாற்றி
மோதிமேல்விழுந்திடவுமே யவன்சற்றுமுயங்கா
தேதுகாரண மியற்றுநற்றவத்தினோ டன்றேற்
கோதுதன்மனங்குறித்திந்த வேடங்கொண்டனனே. ௫௧

மலமுனைக்குறி பார்த்துவப்பார் மனிற்புருட
ரிலகுமெய்யொளி யிளமைசேரிந் நனைமடவீ
ரலகிலாவிதமியற்றியுமசைவிலாதிருந்த
னுலகினுள்ளிவனொருவனையுந் நமருணர்ந்தோன். ௫௨

அன்னவன்சொலு மொழியெனுமமிர்தினை யெனக்கு
மன்னுமோகமே முதலியபிணியெலா மாறித்
துன்னுஞானவாரிதியினுட் டோய்ந்தவளானே
னென்னவோதலும் யாவருமகிழ்ந்தினிதிருந்தார். ௫௩

ஆதலாற்றுறவடைபவ ரரிவையர்மயக்குங்
காதல்வாரியைக் கடந்தவருயர்பதங்காண்பர்
கோதிலாதவ ரிவ்வரைகுறுகிமீண்டமரு
மாதவத்தரைப் போற்றிமீளுதியெனவகுத்தார். ௫௪

வேறு.

திருத்தியதவத்திரா மலிங்கதேசிகரைப் போற்றி
யருத்திகொண்மனத்தினத்தே சிகரருள்பெற்றுச் செய்ய
கருத்தொடுமாலிங்கேயர் மேவுறுங்கனகக்குன்றி
னிருத்தமெய்யன்பரோடு மினிதுறமேவினாரால். ௫௫

அந்தநல்வரையிற்சித்தர் தம்முடனொருநாளிற்
சுந்தரானந்தரென்னுந் துகளறு முனிவரைப்போற்றி
முந்துதஞ்செயல்கள்யாவு மொழிந்தவரருளும்பெற்றே
யிந்தமாக்கிரியினமேன்மை யாவையுமியம்புகென்ன ௫௬

சுந்தரமூர்த்திகூறச் சுந்தரானந்தர்கேட்டுப்
புந்தியிற்கனிவுகூரப் பொருவறுகிரியினாரு
முந்துறுபொருள்கடம்மி லொன்றையுமொழிவுறுமன்
முந்துதம்மரபினுற்றோர் தமக்கெல்லாமொழிவதானார். ௫௭

சுந்தரமூர்த்திசுவாமிகள்

துறவுப்படல முற்றிற்று.

ஆக படலம் ௫-க்கு திருவிருத்தம் - ௨௬௮.

உ

சிவமயம்.

# சதுரவரைகாட்சிப்படலம்.

நாலுதிக்கினு நாற்சதுர துடன்
மேலுநற்சது ரத்துவிளங்கலாற்
கோலமாமல ரோனன்றுகூறுசீர்ச்
சாலுறுஞ்சது ராசலமானது. ௧

சிவபரஞ்சுடர் சேர்ந்தருண் மேன்மையா
ணவையின்மூன்றுல கும்மறைநான்குமே
பவமின்மாதவ மாற்றியபண்பினாற்
புவனிமீதெழும் புண்ணியம்போல்வது. ௨

அரியயன்னம ரர்க்கிறைதன்னொடும்
பரிவினெய்தித் தினமும்பணிந்திடக்
கரியுரித்துயர் கட்செவிபூண்டுபல்
வரந்தரும்பரன் வைகுங்கிரியிது. ௩

குலவுவெண்மதி யம்முதற்கோட்களு
முலைவில்விண்ணி னுறையும்பன்மீன்களு
மலையின்மீது வளருந்தருக்களின்
மலரும்பன்மல ராமெனுமாண்பது. ௪

கிடுகிடென்ன முழங்குங்கிளரொளி
யிடிகண்மின்னொடு மெய்துமுகிலது
பிடிகள்கன்றொடு பெய்மதவோங்கல்கள்
கடிதினெய்துறு மாறுகடுப்பது. ௫

தேவர்கின்னரர் சித்தர்வித்யாதரர்
பூவில்வாழும் புரவலர்மற்றுள
யாவருங்கடி தெய்தியடிதொழுந்
தாவிலாத பெரும்புகழ் சார்ந்தது. ௬

நன்றிநான்மறை நாதமும்விஞ்சையர்
வென்றியாகிய வீணையினோசையுங்
கன்றிமேகங் கலங்கக்கரிபுலி
யொன்றுங்கோளரி யோசைமிக்குற்றது. ௭

தேரின்மேல்வரு செங்கதிரோன்மதி
சாரும்விண்ணூற்று மேற்றிசைதாழ்தலும்
பாரின்மீது படர்ந்துயர்கீட்டிசை
வாரிமேனிழல் செலலவளர்ந்தது. ௮

நனிதவத்தர்பொன் னூட்டுறைதேவருங்
கனிவுடன்றொழுத் தாழ்கவின்மாலையும்
புனிதகற்பகப் பூவுறுமாலையு
முனிவரஞ்சலி மாலையுமொய்த்தது. ௯

நந்தலின்மரந் தோறுநறுமலர்ச்
சிந்துதேனுண்டு தேன்பண்ணிசைப்பது
கந்தமார்பன சக்கனியினசுளை
மந்திமாந்தி மகிழ்ந்து குறிப்பது. ௧0

விலையின்மாதனை மேவும்பதிதன்
றொலைவில்செல்வ மவர்கொளுஞ்சூழ்ச்சிபோ
லல்கில்புறறை யகழ்ந்துகுடாவடி
யுலைவிலாதுவாய் வைத்துறிகினறது. ௧௧

வே று.

மழையெனமதம்பிலிற்றும வாண்மருப்புயரும்வேழங்
குழையொடுமும்பர்நாட்டுக் குளிர்தருக்கோடுவாங்கிப்
பழையனவென்னவண்டு படிவுறவதனைநீத்து
பிழையிலாப்பிடிகளுண்ணப் பெருங்கரத்தளிப்பபாராய். ௧௨

அல்லிநன்மலர்களென்ன வதரங்கொள் கொடிச்சிமார்க்கு
வல்லியம்பயந்துநாளும் வழுத்திய தொழில்கள் செய்யக்
கொல்லியல்வாட்கணல்லார் குழலிகளுடனேவான
நல்லியற்றிங்கட்சேயு நன்குறத்தவழ்வ காணாய். ௧௩

பற்பலமரத்தின்கோட்டின் பாங்குடன்மலர்ந்து தோன்றுஞ்
சிற்சிலமலரினுள்ள தேனுண்டு களித்த தும்பி
யற்புதமாகவிணணி ஞருமீன்றன்னை புன்னைப்
பொற்புறுமலரென்றுன்னிப புலியுடன்மீள்வ பாராய். ௧௪

சந்திரகாந்தப்பாறை தனையுற்றுக்குறவர்மாதர்
சுந்தரமுகத்தின்சாயை தரிசறநோக்குநதோறு
மந்தரநாட்டுமாத ரணிகிளர்முகங்கடோன்றச்
சிந்தையுட்களித்துத்தங்கண் முகமெனச்சிறத்தல்காணாய். ௧௫

காளையர்காணுந்தோறுங் கவின்மலர்க்கணைகள்பாய
வேளைவெல்லரம்பைமினனார் விருப்பொடுபுனைந்துபின்னர்ப்
பாளைநேர்கூந்தனீத்த பனமலர்த்தொடையலெந்த
வேளையுமவாடுறாமல விளங்கித்தேனுளித்தல்காணாய். கசு

மதகயமடங்கநீண்ட வயிற்றுவெவ்வரவின்சட்டை
சிதைவிலாக்கோட்டினாலு நிகழ்கொடியாடைமானக்
கதமிலாக்கவரிமான்கள கவினொடுசெலவாலீட்டஞ்
சுதைநிகரருவிசெல்லு மாறெனத்தொடர்வபாராய் கஎ

சந்தனத்தருக்களோங்கித் தனைவெறிதடுப்பநோக்கித்
தந்திரமாகவல்லோனை றானுமைந்தகலவெய்க்கு
மந்தனன்மதிபாலுற்ற வயிர்கதிரொளிகளீண்டு
சிந்தியதெனவேழஞ் சிந்துமுத்திமைத்தல்காணாய். கஅ

குன்றவர்கிழங்ககழ்க்குங் குழிகளைக்கனிச்சாறோடு
மன்றல்கொண்மலரினறேனும வழிந்துபோய்நிறைக்குமாறுந்
தன்றினைப்புனங்கள்காக்குந் தையலர்மணிக்கல்வீச
வொன்றியவிண்மீனமண்மீ தூறுவதுகடுப்பநோக்காய். கக

மாணிக்கப்பாறைமீதில் வளர்கழையுயிர்த்தமுத்தஞ்
சேணுற்றபிரபையோடுஞ் சிறந்தவணிலங்குந்தோற்ற
மாணுற்றசெக்கர்வானில் வழங்கியமீனகளென்னக்
காணுற்றசெயல்களியாவுங் கருத்துறவினிதுநோக்காய். உ0

வேறு.

அருந்தவத்தின ரளவிலாவயதினின் முதிர்ந்தோர்
திருந்துசெய்கையாக் கிரகிகியேதிரிகட கயங்கள
பொருந்துபூட்கையா லருவியினபுனலினை முகந்து
வருந்தலின்றிநற் குண்டிகைவழங்குவ பாராய். உக

ஒளிமழுங்கிய கண்ணின ரொடுங்கிய வலிய
ரளவின்மூப்பின ரருந்தவருறு நெறியடைய
வளைவிலாதுநீள் வாலினையவர் கையிற்கொடுத்துத்
தளர்வினமந்திக ணெறிசெலுந்தகைமையுமபாராய். உஉ

மறையுணர்ந்துநன் மகங்களுக்கியையு மந்திரங்க
ளறையுநாவின ரியற்றுறுமாகுதிக் கியைந்த
முறைகொள்குண்டத்தி னழலெழமொய் மயிலினங்கள்
சிறைகள்கோலியே வளியெழுப்புவதுநீ தெரிபபாய். உக

குலஞ்சிறந்தவ ராகியிக்குவலையத் தேவர்க்கு
நலஞ்சிறந்துற நான்மறையோதுமந்தணர்க்குச்
சிலம்பிபஞ்சினூற் சிக்கறவிழைந்த நூலெடுத்து
வலஞ்செய்மந்திகண் மகிழ்வொடு கொடுப்பதும்பாராய். ௨௪

அரியமாபலா வாழையின்கனிமுத லனைத்தும்
வரிசையாலுயர் வானரத்தொகுதிகளளிபபக்
கரியமாக்களுங் கடிதினிற்றறையினை யகழ்ந்தாங்
குரியமாக்கிழங்குயர்தவர்க் குதவுவபாராய். ௨௫

நற்றினைக்கதிர் முதலியநானில விளைவு
பெற்றபல்கதிர் பிறங்கியமூங்கின் மெல்லரிசி
மற்றும்பல்பயறிவையெல்லாம் வளரும்பைங்கிளிகள்
கொற்றமாதவர்க் குவப்பொடுகொடுப்பதும் பாராய். ௨௬

மதங்கொள்வேழத்தை யெயிற்றொடும விழுங்கும்வல்லரவ
மிதங்கொளூலுணர்ந் தியன்மனமடங்கினோர் சிவணப்
பதங்கண்மெல்லிய பரனடியவா மிதித்தேறத்
துதைந்தநற்படி போலவைதுலங்குவ தோர்வாய். ௨௭

தேவர்தம்பதங் கருதியிவ்வரைமிசைச் சேர்ந்து
தாவறுந்தவ முற்றுறுமறிஞர்க டமக்குப்
பூவின்மாரிகள் பொழிதர மானமிங்குற்றுப
போவதாகிய புதுமையைப் பொலனுறநோக்காய். ௨௮

பனிநிலாவிந்தப் படர்வரையுச்சியிற் பரவ
நனியதிர்நதுவீ ழருவிகளிவ ணணுந்தோற்றம
வனிதைதன்னிடப் பாகத்தின் மருவவீற்றிருக்கும்
புனிதன்செஞ்சடைக் கங்கையைப்பொருவுவ பாராய். ௨௯

வேறு.

பாதவமொன்றினின்று கவர்பஞ்சவிதத்தினீண்டு
கோதிலாவடையுங்காயின குணங்களைவிதங்களாகத்
தாதவிழ்மலருமன்ன தன்மையின்மலாந்துதோன்று
மோதரும்புதுமைதனனை யுத்தமகுணநீபாராய். ௩0

மரம்பலவகையுநோய்தீர் மருந்தினமூலிகைக ளியாவும்
வரம்பெறுமுனிவரியாரும் வனப்புறுமாக்களியாவுந்
திருந்தியபறவையாவுஞ் சிறப்புறுமலர்களியாவும்
பொருந்துவதிவணின்மிக்க புகழுடையவநீ நோக்காய். ௩௧

வேறு.

ஆழியொன்றுளா னுழிமால்வரைச்
சூழ்வதிவவரைச் சூழலெய்தியே. கூஉ

வேறு.

நாகமுற்றவர் நலனுமிங்
நாகமுற்றவர் நண்ணுமின
பாகமுற்றருள பரமனின்
பாகவுற்றதிப் பருவரை. கூகூ

சூழியும்பல வாறுகத்தோய்வது
சூழியுமபல்க ணுளுங்தோய்வது
பாழியுமபல்க ணும்பரப்புறும
பாழியும்பல்கோ ளரியும்பாங்கினே. கூச

வேறு.

வானரமபயில வாட்கண்ணிமைப்புறு
வானரம்பைய ருருவின்மாணபிலா
வானரம்பையின் மாக்குலேதாழ்த்தென
வானரமபழிக் குஞ்செயன்மானுவ. கூரு

சோலேதோறுந் தொகுமானமரைகளே
காலேதோறுங் களிபபமறைகளே
வேலேவோதட மீத்துள்ளும்வாளேயே
பாலிளெங்கு நெருங்குமபல்வாழையே. கூசு

வேறு.

இனனுமபற்பல வளமுளதியாவையுந் தெரிக்க
மனனுசுந்தரமூர்த்தியு மனமிகமகிழ்ந்து
பொன்னேநேர்சுந்த ரானந்தன்மலரபபதம் போற்றி
யென்னேயாளுடை யையரோகேளுமென றிசைப்பான. கூஎ

வேறு.

வையகந்தன்னின்மிக்க மானுடபபிறவிபெற்றோர்
வெய்யவிப்பிறவிநீத்து மேவரும்பதத்தினண்ணச்
செய்யுமாறினனதெனறென் சிந்தையுட்களிக்குமாறு
மெய்யுணர்வுடையீர்சொல்க வெனவிவைவிளம்புவாரால். அஅ

### வேறு.

எண்ணறுபிறப்பின் மானுடப்பிறவி யெய்துதலரிது பின்னவற்றிற்
பெண்ணுறுவகற்றிப்பிறப்பதேயரிது பெறினுமெய்யெச்சமெட்டகற்றி
நண்ணுதலரிதா மதனினுந்திருவி னோடுதலரிதுநண்ணினுநற்
பண்ணுறுங்கல்வியறிவுறலதனிற் பத்தியுற்றிடன்மிகவரிதே. ௩௬

பத்தியுற்றிருந்து சரியையேமுதல பதங்கணான்கினுக்குமே லுளது
சத்தியம்பொறையாமதனினும்பெரிதுசாற்றரும்பரவுபகாரஞ் (டையே
சித்தநன்மகிழ்வாற்ப லபொருட்கொடையிற்சி றந்துளதோதனக் கொ
யெத்திசைதனிலும் புகழினைச்செலுத்தி யிலங்கியகதியினுய்ப்பதுவே

அன்னதானத்தின் மகத்துவமெவர்க்கு மளவிடற்கரியதாயுயரு
முன்னைநாணிகழ்ந்த சரிதமொன்றதனைமுகுந்தனோடுதிட்டிரன்கேட்ப
மன்னவைபுகுந்து கீரிகூறியதை மகிழ்ந்துரைப்பேனுணர் கென்னாச்
சொன்னலமுணர்ந்தோனசுந்தரமூர்த்திகேட்புறச்சொல்லலுற்றனரால்

சதுரவரைகாட்சிப்படல-முற்றிற்று.

ஆக படலம் ௬-க்கு-திருவிருத்தம் - ௩௱௬.

---

௨

சிவமயம்.

## சத்துப்பிரத்தன் மாத்தானப்படலம்.

அத்தினபுரியையாளு மருள்செறி பாண்டுவேந்தன்
புத்திரருடன் கண்ணில்லான் புதல்வர்கணூறுபேரும்
பத்திகொள்பதினெண்பூமி யரசர்நம் யடைஞரோடும்
பத்துடனெட்டுநாளும் பரிவுடனரும்போர்செய்தார். ௧

இருதிறத்தரும்போர்செய்ய விசைகெழுபாண்டுமைந்தர்
குருபிதாமகன்மற்றுள்ள குருகுலத்தவர்களோடுங்
கரிபரிகாலாளியாவுங் களத்திடைமடியநூறி
யிருநிலமுழுதுந்தன்ம னெறியுறப்புரக்குநாளில். ௨

முந்தியயுகங்கடன்னி னிகழ்ந்தநன்முறைதப்பாமற்
சிந்தையிலறங்கள்பேணிச் செய்தவமெங்குமோங்கச்

சந்ததமுகில்கள்பெய்யச் சகலபோகமுமுண்டாக
வந்தணர்முதலோர்தத்தந் தொழில்வழாதாற்றினரால். ௩

பின்னும்பல்வளங்களெங்கும் பெருகவேசெங்கோலோச்சித்
தன்மனுடாளுநாளிற் றவவனத்தவர்களோடுந்
துன்னியவியாசனென்னுந் தொன்முனிவரராங்கெய்த
மன்னியற்றருமன்றம்பி மாருடன்வணக்கஞ்செய்தே. ௪

ஆசனத்திருத்தியான்றோர்க் கருண்முறைமுடித்தபின்னர்
மாசறுவியாசனென்னு மாமுனிமகிழ்வினோடுந்
தேசுயர்தருமனீன்றசேய்திருமுகத்தைநோக்கிப்
பூசுரர்வேந்தர்யாருங் கேட்பதாய்ப்புகல்வதானான். ௫

தருமபுத்திரனீயாற்றுஞ் சமரிடையநுசர்தம்மாற்
குருமுதலனேகர்மாளக் கொண்டவெம்பவங்கடீரப்
பரிமகமியற்றுகென்னப் பகர்ந்துமாமுனிவரேக
வரியருளாலேதன்மனசுவமேதஞ்செய்தானால். ௬

மட்டவிழ்குழலாள்பாகன் வாழ்வரைக்கயல்வலாரி
யிட்டபொன்னுடனேதன்ம னெழின்மிகுங்கனிட்டரானோ
ரட்டதிக்கினைவென்றங்க ணரசர்களளித்தபொன்னு
நட்டவர்வேள்விக்காக நயந்துதவியபொன்னெல்லாம். ௭

எண்ணிருகோடிமேலா யிருநான்கிலக்கம்பொன்னும்
வண்ணமாரறுவைமிக்க மணிக்கலன்முதலவாய
வெண்ணருந்தானமியார்க்கு மின்புறவளிக்குங்காலை
நண்ணரும்பிலத்துணின்றோர் நகுலம்வந்துற்றமாதோ. ௮

மறையவர்முனிவரியாரு மனமிகமகிழ்ந்துதன்ம
விறைநலவேள்வியிந்த விருநிலத்தியற்றலான்
முறைபுரிந்தார்கள்செய்ய மூவுலகத்துமில்லென்
றுறைமொழிசெவியிற்சார வருள்செறிகீரிகூறும். ௯

இந்தவேள்வியைப்புகழ்ந்தீரியைந்தமோவார்படிமாத்தானந்
தந்தவர்க்கிணையோவென்று சாற்றலுந்தினத்தராகி
யந்தணரெவருமியாங்கள் புகல்வதையலதென்றேநீ
நிந்தைசெய்குவதென்னென்னப் பின்னருநிகழ்த்துவாரால். ௰

வேறு.

அனகனுஞ்சத்துப்பிரத்தன்முன் னளித்தமாப்பலனு
மினியவென்னினு மிருநிலத்தியாவருமகிழப்

புனிதமாயறன் புதல்வன்செய் வேள்வியின்பெருமை
தனைநிகர்க்குமோ வொருபடிமாவரு டானம். ௧௧

மந்திரம்பல பழகியம்முறைமைக மாற்றித்
தந்திரம்பல கைவரத்தவம்வெகு நாட்செய்
துந்துமந்தண ராதியீறிடையுறு நலனே
வந்துசேர்தர வியற்றலால் வழுவொன்றுமிலையே. ௧௨

வேறு.

சிறப்புறுந்தேவர்க் கியற்றுபூசனையா லிருடிகள் செய்யுமாசிகளா,
லிறப்புறுமுன்னைப்பிதுரர்களெவரு மினியநற்கதியினேறுவதா, யறத்தி
ன்மெய்ப்புதல்வ னியற்றுமவேள் வியினபா லடைந்தநால் வருணத்தி
னெவர்க்கு, மறப்பதற்கிலதாயவரவர்மனமும் வெறுத்திடவழங்கினான்
றானம். ௧௩

ஆனவுண்டிகளுமணிதிகழ்டணியு மாடைநன்னிதிமுதலெவையு
மூனமுற்றவர்கள்வறிஞர்கணமுநமோ ரியாவருமபெறும்படியுதவி
மேனலமுறவேயியற்றியவரிய வேள்வியின்பயனைப்பமெனவே [ர்
தானலவவையினுரைத்திடுமவிதநதைச்சாற்றுவாயென்றனர்தவத்தோ

உலகினையிடந்துமளந்துமுண்டுமிழ்ந்து முந்தியிற்கமலனையளித்து
மிலகியவிருடிகேசனுமுராரிமுதலிய வியாவருங்கேட்ப
வலமிகுங்கீரியுரைசெயுமேனாண்மறையெலாமுணர்சத்துப்பிரத்த[தோ
னலம்குங்குருகுசேத்திரந்தனினமாவோனலத்தினுமொழுக்கினுஞ்சிறந்

அருந்தவத்தினர்கட்கேவலூழியங்க ளவரகமகிழ்வுறநெடுநாட், பு
ரிந்துநற்பிரமசாரியமுறையும் பொறையுறவியற்றியில்லறத்திற், பொரு
ந்தியம்முறையுந்தவறுதலிலதாய்ப் புரிந்துநல்விரதமாதிகளிற், றிருந்து
செய்கையினாலிளைத்தமெய்யுடையான் செப்பரும்புகழினாற்சிறந்தோன்

இன்னநன்முனிவன்கற்புயாமனையூ ளிசைபெறுமைந்தனன்மருகி
யென்னாநால்வருநல்விரதஞ்செயபவரா யென்றுநற்புருக்களேமான,நன்
னிலந்தனிற்றேடுந்தானியத்தை நாழிகையையைந்துகழித்துத், தன்னி
கரில்லாக்கிரியைகண்முடித்துத் தகுமுறையினிற்பினர்ப்புசிப்பர். ௧௭

செய்யும்வேள்விகளானோன்பினாற்கொடையாற் சிறக்குமில்லறநெ
றியதனான், மெய்யினாற்புகழாலுயர்ச்சிபெற்றவராய் மேதினிதன்னில்
வாழ்நாளிற், பெய்யுநன்மாரிகுறைந்தனவதனாற் பிறங்கியபயிர்வளமிறப்
பக், கையினிற்பொருளுமில்லதாய்க்கொடிய கலிப்பிணியுடற்றுதற்கி
டைந்தே.

வேறு.

எந்தநாளுண வுக்கியையும்பொருள்
வந்ததேனு மகிழ்வுடனல்வரு
மந்தநாளின் முறையினருந்திநற்
சிந்தையன்பிற் செகத்திடைமேவுநாள். கக

வேறு.

உணவினுக்கிசைந்த பொருள்சின்னளிலதா யொருதினங்கிடைப் பமற்றதனைக், கணவன்சொற்கடவாமருகிபாற்கொடுப்பக் கனிவுடன் வாங்கியோர்படியு, மணிபெறந்திரித் நமமாவினையெடுத்தாங்கருமைசே ர்மாமன்பாற்கொடுப்பத், தணிவிலாமுதுமைமடைந்த வம்மறையோன் றன்கையின்மாவினைவாங்கி. உய

நாலுகூறுகப்பிரித்ததிலொன்றை நனகுறப்புசிக்கவென்றெடுப்பச் சாலுநான் மறையோனாலுமாபிலங்கத் தளாவொடு மூப்பினினுயர்ந் தோன், போலும்வெமபசியினைப்பதினே னெனக்குப் போதுறவனமரு ளெனத்தம், பாலின்வந்தவர்குமகிழ்ா துகாட்டிடதன் பங்குளமாவையீந் தனனே. உக

முதுமறையுணருநற்சத்துப்பிரத்தன் முகமலர்ந்தளித்தமாவதனை க், கதுமெனவருந்திக்காற்படிபசிக்குக் காணுமோவெனவவன்கழற, ம தியினுலுயருமறையவனகற்பா மனைவிதன்பங்குமாவெடுத்துப், புதிய வருணவிற்கருளுமெனறினிய புகழ்பெறுகணவன்பாற்கொடுத்தாள்.

வேறு

வாங்கரும்பசியா னைந்த மனைவிதன்முகத்தைநோக்கி
நீங்கருமருளான்மிக்கோ னிகழ்த்துவான்மாதேகேளாய்த்
தீங்கொடுதருமந்தன்னைத் தெரிவுறவிலங்கென்றாலும
பாங்குளமனைவிதன்னைப் பரிவுடன்புரக்குங்கண்டாய். உந

பத்தியிற்றவத்தின்மிக்க பாக்கியந்துயர்ந்தோர்க்கேனு
மித்தலந்தனினற்பாரி யெய்துதலரிதுகண்டாய்
மெய்த்தபுண்ணியந்திறனேடு மேற்பதமிருவருக்கு
மொத்ததென்றுணாவின்மிக்கோ ருரைப்பர்நான்முறையுமஃதே.

என்னுநன்மொழியைக்கேளா வியறவன்மனைவிசொல்வா
ளன்னையத்தன்முன்னோர்க்கு மதிகமாங்கொழுநனென்பர்
பின்னுயர்கதியைப்பெற்றோர் பெறுவதற்கியற்றலான
..... வர்தம்மை நானிலத்துதவலாலே. டரு

என்றுரைத்தவள்பாகத்தை யினிதுடன்பதிபாலீய
நன்றெனவாங்கியந்த நான்மறையவனுக்கீந்து
தின்றருளெயவென்னச் சிரித்ததைவாங்கியுட்கொண்
டெ ரன்றியபெரும்பசிக்கிவ் வுரியின்மாவென்றுமென்று. உகா

புத்திரன்றன்பாகத்தைப் பொருகவெடுத்துநீட்டி
மித்திரராகிவந்த வேதியர்க்கருளுமென்று
வத்தன்பாலருளலோடு மந்நணன்மகனைநோக்கிச்
சித்தமீதுவகைபொங்கச் செப்புவனென்பமாதோ. உஎ

ஆயிரம்வயதாறைலு மருளிருேன்றனக்குமைந்தன்
சேயெனவுரைப்பதல்லாற் செப்புவபெயர்வேறில்லை
யேய நின்வலத்தினைபா லிப்படிப்புவந்திடினுமந்சே
னீயன்றேபிதுரர்பூசை நிலைநிறுத்துவதற்கும்றாய். உஅ

பாலகனேநீயென்முன் பசியுடனிருக்கலாமோ
காலந்தோறினுநோன்பாலே கடந்துபோன்பசியையென்றே
னூல்கடோந்தருளுமைந்தா வெனவவனுவலக்கேளாச்
சீலஞ்சேர்மைந்தன்றந்தை சிந்தையுளுவப்பச்சொல்வான். உகூ

என்னையீன்றருளுமைய விசைமிகுமுன்னை நாலி
னன்னையுமபிதாவுமுன்னை யறிவுறுதெய்வமாகு
மென்னுநன்முறையினாலு மினியமாபிதுரர்பூசை
மன்னுவகடமையென்று மகிழ்ந்துதன்மாவையீந்தான். ந௰

தந்தையுமகிழ்ந்துமைந்தன் றந்தமாவதனைவாங்கி
முந்துறுமறையோன்கையின் முறையினிற்கொடுத்தலோடுந்
சிந்தையின்மகிழ்ந்துவாங்கிச் சிரித்துதையருந்திப்பின்னை
ரிந்தமாவெங்கேபோது மென்பெருமபசிக்கென்றுறைல். நக

அம்மொழிபுகலக்கேளா வருந்தவன்மருமியான
செம்மைசேர்மனதன்பாகஞ் சேர்ந்தமாவதனையந்த
மும்மையாங்காலநதேரு முனிவரர்க்கருளுமென்று
வெம்மைதீர்மாமன்கையில் விருப்புடனளிக்குங்காலை. நஉ

மறையவனுவந்துகற்பார் மருகியானனத்தைநோக்கி
யறைவனீசிறியைபொல்லா வரும்பசிபொறுக்கமாட்டாய்
குறையிலென்கிளையையிந்தக் குவலயந்தனிலெஞ்ஞான்று
நிறைவுறவியற்றலான நேரிழாயின்னுங்கேளாய்.

## வேறு.

சிறியளாயினும் பொறையினுனேன்பினுஞ் சிறந்தா
யறிவினுலுய ரரிவையே யிருகிளையவரைப்
பிறியஞ்செயவிக்கும் பெருமையாய் நின்பங்குமாவை
நெறியினுணவென் னேரிழைநிகழ்த்த லுற்றனளால். ௩௪

ஆவியோடுட லரிவையர்க்கவர்பதி யெனினு
மேவரும்பதி தமைப்பெறுதந்தையாய் விளங்குந்
தேவதேவர்கீர் குருவிற்குங்குருவெனுஞ் சிறப்பான்
மாவைநான்றரு வேனெனவழங்கலு மேற்றே. ௩௫

ஏற்றமாவினை முதுமறையவர்க்கினி தளிபப
மாற்றரும்புகழ் முனியுண்டு மனக்களிப்புடனே
யாற்றல்சாலுமந்நால்வரை யன்புற்றுப்பார்க்கத்
தோற்றும்வெம்பசி யகன்றுநற்சுவையுண்டார்நிகர்த்தார். ௩௬

அன்னகாலையி னம்முனியருந்தவத் துயர்ந்தோன்
றன்னைநோக்கிநின் றனைநிகர்தனைசுதன் மருகி
யென்னுமூவரும் பொற்புளார் நீரிவணியற்று
நன்னலத்தினும் பிதுரர்நற்கதியி னண்ணினரால். ௩௭

புண்ணியத்துரு வாகுநின் போலுயாபுனிதர்
மண்ணகத்தினு மிலையிருநிதியுயர் வகைசேர்
விண்ணகத்தினு மிலை நிரு மெய்த்தவமுடைய
பண்ணவர்க்கிறை மகிழ்தரும் பரவுபகாரி. ௩௮

## வேறு

தானசிந்தனையுளார்க்குத் தருமநாடோறு மோங்கு
ஞானசிந்தனையுளார்க்கு நல்குரவொழியுநாளு
மீனமில்பதத்திற்சேர்வ ரென்பதையேழைமாந்தர்
தானறிந்தியற்றுரானற சான்றவருணர்வரன்றே. ௩௯

பத்துநாறுடையோ னூற்றைப் பரர்க்களித்திடநூறுள்ளோன்
பத்தும்பத்துடையோனென்றப் பரிசினிற்கொடுக்கத்தன்ம
மொத்தனவன்றித்தாழ்வு முயாநிலையிரந்திவேந்தன்
சுத்தமாஞ்செந்நீர்நது சுவர்க்கத்தின்மன்னினுனல். ௪0

எத்துணைப்பெரிதென்றாலு மறநெறியியல்பிற்றேடு
மத்தத்தாலியற்றுந்தன்ம மதன்மமாம்பயனின்றாகு
முத்தமப்பொருளான் மேலோ ரொருவருக்கணமீந்தாலு
மெய்த்தவத்தவர்க்குமேலாய் விளங்குவரென்பர்மாதோ ௪௧

நிருகனென்பவனுடோறு நெறியினுயிரம்பசுக்க
ளருமறையவர்க்குநன்று யளிக்குங்காலொருநாட்டன்னி
லொருமறையவனுக்கீகோ வுற்றதையுணரான்பின்னுள்
வருமறையவனுக்கீந்து வந்துவீழ்ந்தனன்பாழ்ங்கூவல். ௪௨

சிறந்தநற்புகழின்மிக்க சிவியெனுமரசன்மேனுட்
புறஞ்சுழல்புறவிடைக்குப் போதுமந்தசையைநல்கி
யறம்பெரிதுடையனுகி யருண்மிகுசுவர்க்கமுற்றான்
பெறுந்தவமனமாசற்றுப் பிறர்க்குதவுதலேமேலாம். ௪௩

அளப்பருமிராசசூய மசுவமேதமுமநேக
முளப்பொலிவுடனெண்ணுன்கு தருமமுமுழுவப்பதாக
வளத்தொடுபயிற்றலான மாந்தரின்னோவா
கிளர்ச்சிகொளுலகினில்லை யெனமுனிகிரந்துமவேலை. ௪௪

வானவருலகினின்றோர் மானமவணிலகித்தோன்ற
மேனலமுளநால்வோரும் விரிமலாமாலைமீதிற்
போனபோதவனுற்றேற்குப் பாதிபொனனுருவமான
நானவணின்றுநீங்கி நன்மகமனைத்துமுற்றேன. ௪௫

தாதவிழ்மாலைமார்பன் றருமனசெய்மகத்திலுற்றுற்
பாதியும்பொனனுமென்னுப் பரிவுடனிவண்வந்துற்றே
னேதமில்பாதிபொன்னு யெய்துதற்கிலைமாத்தந்த
மாதவனறத்துக்கொவ்வா தெனப்பிலவணைப்பிற்சென்ற. ௪௬

வண்ணவான்கீரியிந்த வுகைசொலிப்பிலந்துட்செல்லக்
கண்ணனேமுதலாயுள்ள காவலரெவருங்கேட்டுத்
தண்ணளியுடையனுன தருமன்செய்மகமீதானுன்
மண்ணின்மற்றவர்கள்செய்யு மகபலனென்னுமென்றுர். ௪௭

அந்தணர்முதலோரிவ்வா றறைந்திடவாழியோன்றன்
சிந்தையினினைப்பச்சென்ற நகுலம்பின்னவையிற்சேர்ந்த
தந்தைதன்றந்தைநோக்கிற் சடமுழுவதும்பொனனுகி
யிந்தவேள்வியுஞ்சிறந்த தெனவுரைத்தகன்றதென்பர். ௪௮

மாவலியென்பான்மேனுண் மறையவனுகியுற்ற
மூவலிலரிக்குவந்து மூன்றடிமண்டானீந்து
தாவிலாச்சீர்த்திநாளுந் தழைத்திடச்சுதலந்தன்னிற்
கேவலமின்றிவாழ்ந்தா னென்பதுங்கேட்டிலாயோ ௪௯

விருத்திராசுரனென்றோதும் வெய்யவன்றன்னைக்கொல்லு
மருத்தியாலமரர்கோமா னடையநற்றதீசியென்னும்

வருத்தமின்முனிவன்சிந்தை மகிழ்ந்துதன்முதுகினென்பை
மருத்துவன்றனக்குநல்கி வளர்புகழ்க்கொருவனுனன். ருo

செழிப்புடைப்புகழிஞேங்குஞ் சீமூதவாகனனென்னும்
பழிப்பிலாவரசர்கோமான் பாம்புகளுய்யுமாறு
விழுத்தகுகலுழனுண்ண விருந்து தன்றசையைநல்கி
யொழிப்பரும்புகழையிந்த வுலகுளாதனையும்பெற்றான், ருக

இனையனமேனூற்ற வியல்பினுலவனிதன்னில்
வனைகழலரசர்க்கேனு மற்றுளார்தங்கட்கேனு
மனையறங்காத்துநாளு மன்னுயிர்க்குறுதிநல்கும்
தினையளவெனினுமன்ன தானமேசெய்தற்பாற்றே. ருஉ

மன்னியவுயிர்க்காதாரம் வயங்கியவுடலமாகும்
பன்னியவுடற்காதாரம் பாங்குளவுணவேயாகும்
மின்னமெய்வலத்தாலார்ந்த வியானையுமுடிக்கலாகுஞ்
சொன்னதுதெரிதியைய சுந்தரவெனப்பின்சொல்லும். ருந

ஈந்தவர்புவியிலென்று மிருந்தவராகுமீயா
மாந்தர்கள்செல்வமெய்தி வாழினுமவரேமண்ணில்
வீந்தவராகுமென்று விளம்புநூன்முறையும்பின்னும்
பாந்தண்மேலுலகின்மிக்க பருணிதர்பகருமாறே. ருச

எண்ணுன்கதாகுந்தான மெஞ்ஞான்றுமியற்றலான
புண்ணியந்தனினுமன்ன தானமேபுனிதமாகுங்
கண்ணகனுலகினுண்டோர் களிப்புறவியற்றலானு
நண்ணலர்கலராற்கொள்ள முடிவுறுநலத்தினுனும. ருரு

முன்னுமிவ்வுலகிலன்ன தானங்கண்முறையினூற்றி
மன்னியசீர்த்தியாளர் வரம்பிலாதவர்களாகுந்
தொன்னிலமதனிற்றோன்றிப் புகழொடுதோன்றலில்லா
ரிங்கிலந்தனிலுருமை யினிதெனவுரைப்பர்மேலோர். ருசா

என்றிவையனைத்துங்கூறு மெழில்கொளாசிரியர்முன்னர்
நின்றுகைகூப்பிவேத நெறியொடுசுருதிநேர்மை
யொன்றுமிவ்வுலகிற்கான வொழுக்கநீயுரையுமென்று
நன்றெனமகிழ்ந்துசுந்த ரானந்தனவிலுவாரால். ருஎ

சத்துப்பிரத்தன்மாத்தானப்படல-முற்றிற்று.

---

ஆக படலம்எ-க்கு திருவிருத்தம் - ௩சாசா.

உ

சிவமயம்.

# ஒழுக்கங்கூறியபடலம்.

சுந்தரமூர்த்திகேளாய் துகளறுமுலகிற்றோன்றி
வந்தநால்வகையதான மானுடரெவர்க்குமுய்தன்
முந்துறுமிருதத்தோடு மொழிதருமமிர்தமென்று
முந்துறுமிருதமற்று முயர்பிரமிருதமென்றும். க

சாற்றுவததற்குப்பின்னே சத்தியாநிருதமென்று
மேற்றநாய்விருத்தியீறா யிசைப்பர்காருண்மைத்தாத்
தேற்றமேமிகுந்துதன்போற் சிவகோடிகளொன்றுன்னி
மாற்றரும்வண்மையாற்றல் வழங்கியவிருதமாமே. உ

பிறவுதவியையுன்னுமப் பெய்யுமாமுகில்களொன்னப்
பிறரிடத்திரத்தலின்றிப் பெருமபொருளீதிற்றேடி
மறநெறியின்றிநாளு மாநிலத்துயர்ந்தோர்வாழ்த்த
வறநெறிசெலுத்தனமிக்க வமிர்தமென்றுரைக்கலாமால். ௩

இந்நிலத்துயர்ந்தோர்தன்பாலேற்றன்மிருதமாகு
நன்னிலவிளைவுசெய்த னவில்பிரமிருதமாகு
மன்னியவாணிகங்கள் வருஞ்சத்யாநிருதமென்ப
ரன்னியர்க்கேவல்பூண்ப தருளின்மிருத்தியாமே. ௪

உத்தமங்கல்விமேன்மை யாலுயர்தொழில்களொன்று
மத்திமங்கிரிசியோடு வாணிகத்தொழில்களொன்றுஞ்
சத்தமிலதன்மமாகுஞ் சேவகத்துணைகடாங்கல்
பத்தியின்மிருகசீவி யென்னச்சொன்னூல்பகர்வதுண்டால். ௫

ஆனதாலருளான்மிக்க வருமறையவர்களென்று
மேனலமானதூய விருத்தியாற்றன்மையோம்பித்
தேனினுமினியவான தெள்ளியநூல்களாய்ந்து
வானுயர்சீர்த்திமன்ன வாழ்வதுமரபாமன்றே. ௬

வேறு.

மந்திரநான்முறை யுணர்ந்துமாசறு
சிந்தனையுடையராய்த் தினமுக்காலமுஞ்
சந்திவந்தனைகளாற் றலமேலுய
ரந்தணர்பாற்பவ மடுக்கவொண்ணுமோ. ௭

செய்யவுபாசனந் தேவபூசனை
யெய்தியவதிதிபூசனையு மேற்றநூற்
றுய்யவேதந்தனைச் சொற்றனற்செப
மையமிலோங்கெச்ச மாற்றுந்தூயராய். ௮

தனதுநற்பாரியின் போகந்தானயந்
தனகராய்ச்சதுர்த்தர்தம் மன்னநீத்தனு
தினமுமக்கினித்தொழில் செயவலார்கடு
வினையைமுவனல்சுட விளங்குவார்களோ. ௯

ஈறிலாச்சீர்த்திகொ ளிவரயன்பதிக்
கேறுவரமரர்மற் றெவருமேத்தவே
கூறுமாப்பிரளயங் கூடுநாளினும
வீறுடனயன்பத மேவிவாழ்வரே. ௰

அந்தணர்முறையினா பரசாநீதியான
முந்தியமநுமுறை புரந்துமன்னராற்
செந்தழன்மகங்களுஞ் செய்துநாடொறுஞ்
சிந்தையின்மகிழ்ந்திரணஞானகடங்கள்செய்தலே. ௧௧

பிறன்மனைசிந்தியாப் பெருமையாகநா
னெறியினையடைந்துநீ ணேரலாரொடு
மறநெறியானவை மாற்றிமாண்புடை
நிறைமொழியென்றுநீங் காதசிந்தையாய். ௧௨

மாற்றருமநுமுறை வழியினெய்திய
வேற்றஞ்சானிதிகளை யினியசுற்றமு
மேற்றிகழ்மறையவ ருணவிருந்தளித்
தாற்றல்சாலபுகழுட னவனியாள்வரால. ௧௩

அரசர்தம்மொழுக்கிதா மரியவைசியர்
வரிசையிற்பயிரிட லான்வளர்த்திடல்
பொருவறுவாணிகம்புரிந் நாடொறுந்
தருமநன்னெறிகளுந்தழைக்கவாழ்வரோ. ௧௪

மறையவர்முதலிய வகுத்தமூவர்க்கு
முறைவழிபடுந்தொழி லுளுமுற்றியே
நிறைதருந்தருமமுங் கொடுத்தனீங்கிடா
துறைவதுசதுர்த்தருக் குள்ளதன்மமே. ௧௫

இத்திறநால்வரு ணத்தினெய்தினோர்
சுத்தராயவரவர்க் கியன்றதொன்னெறிப்
பத்தியின்வழுவின்றிப் பாரினுய்வரோ
னத்தியகாலன்வாய் நண்ணலில்லையே. கசு

புண்ணியம்பாச பந்தத்தைப்போக்கியும்
மெண்ணிலாப்பவங்களை யீடழிக்குமாற்
பண்ணியநல்லறப் பயன்செய்மாந்தர்க்கு
நண்ணுங்காலரி தெவையனைத்துநல்குமே. கஎ

உலகினுல்வருணத்தி னுள்ளவர்க்கெலாம்
வலமிகும்பவங்களை வெல்லவல்லது
நலமிகும்புண்ணிய மன்றிநாடினவே
றிலேயெனவுணர்ந்த வரியம்புவாரரோ. கஅ

குலத்தினுசாரமே யெவர்க்குங்குற்றந்தீர
நலத்தினையுதவுநல் லறங்கண்மீதுறும
வலத்தினுற்பவமறு மாபவந்தரோ
நிலத்தின்மீதுறச்செயி னறமுநீங்குமே கசு

தருமபாவங்களி னருமைநானறிந்
தொருவருஞ்சொலவரி துலகின்மீதறப்
பெருமையேசீர்த்தியைப் பெருக்கும்பாவமே
மருவுறுமிழிவொடு வறுமைநல்குமே. உ0

இன்னனவாகமீ திலகும்புண்ணிய
மன்னியவுத்தம மத்திமத்தொடு
முன்னருமதர்மமென் றுரைக்குமூவகை
யன்னவையியற்றுறு மடைவுகூறுவாம். உக

### வேறு.

சாத்திககுணத்தாற்செய்யுந் தருமமுத்தமமாமென்றும்
வாய்த்திராசதத்தாற்செய்யும வண்மைமத்திமமாநல்லோர்
நீத்ததாமதத்தாற்செய்யு நீளறமதன்மமென்றுஞ்
சேர்த்தநூலுணர்ந்தயேலோா சிறப்புடனுரைக்குமாறே. உஉ

### வேறு.

பண்ணவர்முனிவர்பிதுரர்சாத்திகத்தாற் பண்ணியபலனனுபவிப்பர்
திண்ணியவசுரரிராக்கதரொலித்துத் திகழிராசதப்பலனடைவ

ரெண்ணரும்பேய்களொடுபசாசுகளு மேற்குந்தாமதப்பலன்றனேயே
நண்ணுமுத்தமமத்திமமதன்மமென நவில்குணமூன்றுமிவ்வகையே.

அருமறையவர்நல்லறிஞர்பாலணுகி யன்புறக்கொடுத்தலுத்தமமாம்
வரவழைத்துதவன் மத்திமந்தன்பால் வந்தனுசரிந்தபின் கொடுத்த
லிரதமிலதன்மமுன்கதிதே ரியலுமத்தியகதிமனுடர்
திரிதருவிலங்கின்கதியதாமதன்மச் செய்கையினுற்றரும்பலனே, ௨௪

அறிஞராயுயர்ந்தோர்கற்றுணர்ந்தவர்கட் கருள்வதொன்றெனினு ங்கோடியதாம், வறிஞராயிரப்போர்க் கினிதுறவளித்த லேயறமருந் துணுமுறையே, நெறியுடனீவோன் செய்பவமனைத்து நீணிலத்திரப்ப வன்றனக்காம். வெறிதிரப்பவன்செய் புண்ணியமனைத்தும் விரும்பி யீந்தவர்க்கெனலாமால். ௨௫

கொடியதாமதத்தாற்கொடுத்திடும்பலன்முன் கருப்பத்திற்கூடிப் பின்னகலும், படியிற்காரணந்தா லறனிலாப்பொருளைப் பரிந்துதவிய கொடைப்பலன்முன், வடிவுறுமிளமை தனிலனுபவிப்பன் வருந்துறு நோயினல்வழங்கன், முடிவுறுமுதுமை தனிலனுபவிப்பன் மூன்றினும் வழங்கலாயினையே. ௨௬

சுத்தியாய்மகிழ்வானியமத்தாலளித் தறய்க்குவரெவ்வனந்தனிலே பத்தியாய்நற்பாத்திரமறிந்துதவல்பண்ணியபாவத்தையகற்று, முத்திரந்தானம்பலன்கதிமூன்று முதுநிலந்திரப்பவன்குடிமடி, மெய்த்தநூலு ணர்வோனிவர்கள்பாலேகி விருப்பொடுகொடுத்தல்சாத்திகமே. ௨௭

ஆகினுமபுவியினமருயிரனைத்து மருந்துறுமுணவினலோங்கு, நாகம்வாழமரரவியுணவதனை நன்குணவிரும்புவ ரெனினன், பாகவேபுரி யெண்ணுன்கரந்தனினு மன்னதானத்திற்குநிகராப், போகபூமியினுமி லையவனுறைவோர் புவிடையேற்குமாற்றலினல். ௨அ

கொடுப்பதைத்தடுத்தல் கொடாதலோபமுநற் குரவரந்தணர்களை ப்பழித்தல், விடக்கினைநுகர்தல் பிறர்மனையவரை விரும்புதல்பதகரோ டிணங்க, றிடத்துடன்பொய்ச் சான்றுரைத்தனட்டவர்க்குத் தீங்கியற் றுநனறவருந்த, லடுத்தவர்க்கருளாதருந்துதன்மெய்ந்நூலறிஞரைவண ங்கிடாதிகழ்தல். ௨௯

நான்கொடுக்கின்றமெனசசொல்லிக்கொடுத்த னல்கியபின்னதைநி னைத்த, லேன்கொடுத்தோமென்றெண்ணுதல்பொய்கொடீட்டியகளவி

னிற்கவர்ந்த, மேனலனில்லாப்பதகர்தம்பொருளான் மெய்யறன்விரும்புதல்பிறர்சேர், மானமின்மனைவியுடனும்வாழ்ந்திருத்தன் மடந்தையர் வார்த்தைகேட்டமர்தல். ௩௰

வேதசாத்திரங்களில்லை யென்றிகழ்தல் வெறுத்துயர்தருமத்தைவிற்றல், பூதலந்தனிலாசாரத்தைவிடுதல் பொருவிலாபின்னவருடன்புசித்த னீதியில்வட்டி வாங்குதலதிகநீசர்வாழூரிடையிருத்தல், கோதுறுவஞ்சமியற்றலீதெல்லாங் கொடிதெனவகற்றுவர்மறிவே ௩௧

இத்திறத்தவரும்பூமியிற்சிலவாறியற்றும்புண்ணியஞ்சிலவுளவேற் சுத்தமிலசுராபசாசுமப்பலனைச்சூழ்ந்துகைக்கொளுமவாக்கிலையான், மெய்த்தவமதனுற்செருக்கலகண்டதனைவிளம்புதல்பொய்யுரைசாற்ற, லெத்துணையுயிருங்கொலைசெயல்பிறர்பாலிடுகைகனையுறுத்தலும்விலக்கே.

பூத்தமங்கையரைத்தீண்டுதலவர்கள்புரிக்கும்வேளையின்முகம்பார்த்தல், சீர்த்தசெங்கதிரையகிழக்கெழுங்காலைந் திகழுசாரணனுங்காலையினு, நீர்த்தசுமபெனநனணிறமுறமேல்பானீளகடலிடையடைபொழுதும், பார்த்தனீருடையிலாதுநல்லயத்திற் பாடிவதுமவிலக்கெனப்படுமே. ௩௩

வேறு.

ஒருதுகிலுடுத்தியுண்ண லுடையிலாமாதைநோக்கல்
பொருவறுமந்தியுற்ற பொழுதினிலனமருந்த
லிருவிசும்பதனிற்றோன்று மிந்திரதநுவைநோக்கிப்
பரர்களுமறிவதாகப் பகர்வதும்பழுதென்பாரால். ௩௪

தலைவடக்காகவைத்துத் தரையிடைத்துயிறன்மற்றோ
கலைசெருப்பணிதன்மிக்ககள்வர்களிழிகுலத்தோர்
நலமிலாப்பதிதர்மேவு நகரிடையிருத்தலும்
பலரொடும்பகைத்தல்கையாற் பயமருந்துதலுமாகா. ௩௫

செந்தழற்கடவுள்பாண்டி றேவர்கண்மறைவலாளர்
சந்திரன்குரவாமிகக சான்றவர்தமக்குமுன்னூற்
சிந்தையிற்பொருந்துமிசைசை தீர்தரவெறிதிருத்த
னிந்தனைபிறரைக்கூற லிதுவெலாநீக்கலாமே. ௩௬

* குண்டகனுடனேயல்லாக் 0 கோளகனியல் * கானீனன்
றிண்டிறற் 0 பிரதிலோமன்றிக * ழநுலோமன்மற்றும்
விண்டரு 0 ளந்தராளன் * விராத்தியனிவர்களெல்லா
மண்டர்க்கும்பிதுரர்தங்கட் காந்தொழிற்குரியராகார் ௩௭

உணர்வுடைமறையோனேனுஞ் சதுர்த்தர்யோனியினுங்கூடிப்
புணர்வனேலவனுக்குற்ற புதல்வனுங்கிரியைக்காகான்
குணமனையெனினுநாய்வாய் கொண்டிடுஞ்சுதைநேராகத்
திணைபழுதுறவேயன்னோன் றிரளெல்லாநரகில்வீழ்வார். ௩௮

செகத்திலந்தணருக்குற்ற தருமத்தைநிலைக்கச்செய்வோன்
மிகுத்தபத்தியிற்காமத்தை வென்றுயர்விரதமாற்றி
யகத்தினிலன்புபேணி யறத்தினைவளர்ப்பானாகின்
மகத்துவஞ்சீர்த்தியாயுள் வலிமரபொழுக்கதாமே. ௩௯

நாலுவேதங்கள்பின்னு நவிற்றருகலைகளியாவுஞ்
சாலவேகற்றுமிக்க சமர்த்தனாகவெனவுற்றாலு
மேலதாய்விளங்குங்காயத் திரிசெபமில்லாவீணே
நூலுணர்விலருங்காயத் திரியுறினுண்ணியோரே. ௪௰

ஆதிகாலத்திற்றேவ ரருள்செறிமுனிவரெல்லாம்
வேதமோர்தட்டுங்காயத் திரிதனைவேறோர்தட்டின்
மீதுறவைத்துத்தூக்க மிகுங்காயத்திரியைநாளு
நீதியினுயர்ந்தமேலா நெறியுடனனுட்டிப்பாரே. ௪௧

---

* குண்டகன் வேற்றோர்க்குப்பிறந்தவன்

0 கோளகன் கைம்மைபெற்றபிள்ளை

* கானீனன் கன்னிபெற்றபிள்ளை

0 பிரதிலோமன் உயர்குலப் பெண்ணினுமிழிகுலத்தாணினும் பிறந்தவன்

* அநுலோமன் உயர்குலத்தாணினுமிழிகுலப்பெண்ணினும்பிறந்தவன்

0 அந்தராளன் அநுலோமத்தாணினும்பிரதிலோமப்பெண்ணினும்பிறந்தவன்

* விராத்தியன் அநுலோமப்பெண்ணினும் பிரதிலோமத்தாணினும்பிறந்தவன்

அருமறையவர்க்குக்காயத் திரிதனிலதிகமான
பொருவறுமந்திரங்க ளுளதெனப்புகல்வதில்லை
யிருநிலந்தன்னிலெண்ணுன் கறத்தினுமினியவான
திருவுறுமன்னதானந் தனக்குநேர்தெரிக்கினியாதே. சஉ

கதிரவனுதிக்கவைந்து கன்னன்முன் றுயிலைநீத்துக்
கதுமெனவெழுந்துகையிற் கரகமுங்கண்டுங்கொண்டு
பதிபுறநிருதிதிக்கிற் படர்ந்துநற்பகல்வடக்கும்
விதிமுறைப்படியேகங்குல் வேளையிற்றெற்குநோக்கி. சந

இருந்திரண்டியகசீத்தே யிலகுநீர்முகந்திட்டோர்காற்
றிருந்துமண்ணீராற்பின்னுங் குறியினைசெவ்விதாக்கிப்
பொருந்துமண்முக்காலிட்டுக் குதங்கழீஇப்புனலைவாமக்
கரந்தனிற்பதுகாற்பெய்து கையிரண்டுமேழ்காலும். சச

பதங்களிலேழுகாலும் பயம்பெய்துசுத்திசெய்த
விதம்பெறுமனையோர்க்கீதா மிம்முறையாறுமடங்கே
யதன்மமில்பிரமசசாரிக் காகும்காட்டுறைவோர்மற்றுங்
கதமகறுறவியின்னோ ரெழுமுறையியற்றல்கண்டாய் சரு

தூயநன்னீர்வாய்ப்பெய்து துறவினோர்நாலெண்காலு
மாயைதீர்பிரமச்சாரி வழங்கியவீரெண்காலுந்
தோயுமில்லறத்தினோர்க டெலங்கியோரெண்காலு
மாயநன்முறையால்வாயசொப் புரிப்பதென்மறைவர் மேலோர்.

மலசலம்விடுக்கும்போது மங்கையர்கலவிப்போது
மிலகுபல்விளக்குமபோது மிசைந்துநீர்குடையும்போதுங்
குலநெறிக்கியைந்தவாற்று லோதனங்கொள்ளும்போது
மலவலிதுறக்குமேலோர் வகுத்தொன்றும்பேசிடாரே. சஎ

மறையவர்தமமால்வேள்வி மந்திரமுறையினீதல்
குறையறுபிதுரரோடு கோதிறேவருக்குமாகு
மிறைவர்மற்றவர்கடம்மா லீயுமெண்ணுன்கறத்தின்
றுறையுளபலன்களெல்லா மனுடர்க்காஞ்சொல்லுங்காலே சஅ

இவ்வுடற்பொறைக்குநாளு மீட்டியபொருள்களியாவுஞ்
செவ்வையிற்புதைத்துவைத்த திடமெனக்கருதார்நல்லோ
ரெவ்வமிலறங்கள்பேணி னீறிலாவுயிர்க்குநல்கும்
பெளவநீருலகின்மாண்டு பழந்தனத்துற்றார்யாரே. சகூ

என்பினைநரம்பிற்கட்டி யிழிவுறுதசைதோல்போர்த்துப்
புன்புழுமலந்துன்னீரும் புண்ணசும் பொழுகிநாறித்
துன்பநோய்விகாரங்கோப முதலியதொகுத்துவாழும்
வன்புலையுடம்பினாலே வந்திடும்பலன்கள்யாதே. ருய

எய்துதற்கரியவான வெழிலுறும்பிறவிபெற்றுற்
செய்வதற்கரியவான வறங்களைச்செய்துவிட்டி
னுய்வதற்கரியாதார்க ளுடம்புயர்பொற்கலத்திற்
பெய்வதற்கரியபாலைக் கமரிடைப்பெய்தனேராம். ருக

நிலையிலாவுடலென்றோது நெடும்பொறைக்குறுதிநாடா
துலைவிலாவுயிர்க்குநாளு முறுதியைநாடவேண்டும்
வலமுளவுயிர்க்காதாரம் வழங்கிய நன்மமஃதுட்
டலைமையாமன்னதான மெனமறைசாற்றுங்கண்டாய். ருஉ

எனவிவைபுகலக்கேட்டாங்கிதங் கொள்சுந்தரமூர்த்திக்கு
மனமிகமகிழ்ச்சிகூர்ந்தவ் வாரியர்மலர்த்தாள்போற்றி
யினியனவானவெண்ணன் கறங்களினியல்பையெல்லாம்
புனைநலமுடையீர்சொல்க வென்னலும்புகல்வநாளுர். ருங

ஒழுக்கங்கூறிய படல முற்றிற்று.

——(*)(*)(*)(*)——

ஆ படலம்-அக்கு திருவிருத்தம் - சுகசுஉ.

உ

சிவமயம்.

# புண்ணியபலப் படலம்.

நலமிகுந்தசுந்தரமேகேணீசென்ற நன்மைசெறிதுவாபரயுகாந்தந்
தன்னி, னிலமுழுதும்புரந்தருளுந்தருமன்கேட்ப நெடியமாலுளத்தில
குணிறைவுற்றன்பாற், சொலுமினியவறநெறியீதென்றுமுந்நூற் றெருகு
தியெலாமுணர்ந்து சுகானந்தபோத, வலமிகுமந்தணர்சுந்தரானந்தப்
பேர் வள்ளன்மனமகிழ்ந்தாங்கவழுத்தினரால்.

ஆதுலருக்கனங்கொடுத்தல்சாலைசோலை யருந்தவரோடறுசமயத்
தவர்க்கூணல்கன், மாதர்போகம்மகப்பாலறுவைசெம்பொன்மகப்பே

றுமகவுவளர்த்திடனேய்திர்த்த, நீதறுகன்னிகைதானம்பிறரைக்காத் தல்சிறைசசோறுவண்ணார்நாவிதர்கண்ணுடி, யாதரவாய்விலங்கிற்கூண் பசுவூண்டண்ணீ ரரியமடந்தடங்கண்ணேய்க்காமருந்தும். ௨

அருதியாம்பிணமடக்கறலேகட்கெண்ணெ யளித்தலுடனுவுரிஞ்சுத றிகள்வைத்தன், மிகுமிசைப்பல்லியஞ்சிற்றாண்குடைசெஞ்சாந்து மிதி யடிகண்முதலியவம்பிகைமேனுட்செய், தகுதியுளவெண்ணுன்குதருமமீ தாய்ச் சாற்றுவர்களவ்வறங்கடமைப்பத்ராகச், செகமதனிலுறைதருமா னுடர்கள்செய்து சேருகின்றகதிவிதமுஞ்செப்பக்கேண்மோ. ௩

வேறு.

வனப்புடைக்கன்னியை மறைவலோன்பெறத்
தனத்தொடுவழங்கிய தகும்சீர்த்தியோன்
மனத்துனியறவிமா னத்தின்வைகிந்தன்
னினத்துடனுயாபதத் திலிதினெய்துவான். ௪

பொன்னோல்லுயர்மறைப் புரிநரேற்பதாய்
நன்னலத்துடன்மிக நலகுமேலவர்
மின்னவிமணிவிமா னத்திற்றனமின்
மன்னவிண்ணுலகிடை மருவுவாரரோ. ௫

இனியவந்தணர்பெற வெள்ளியீநவர்
நனிபுரிபவமெலா நாசமாகநற்
புனிதராயமரர்பொன னுலகிற்புக்கியே
கனிவுறவவரொடுங் கலந்துவாழ்வரால. ௬

கன்றொடுபசுக்களைக் காங்கமினமறை
நன்றுணர்வேதியர்க் களிச்சுராணிலத்
தொன்றியமேலவ ருமபர்வாழ்ந்துபின்
வென்றிவேதியாக ராய்த் தரையின்மேவுவர். ௭

வேதியரிருக்கவீ டருளிமெய்ந்நூக
ளாதியபொருளெலா மமைத்துவைத்தவா
கோதிலாப்பிதுரர்க ளொவருங்கூற்றுறழ்
வாதைதீர்ந்துயர்பத மனுவாரரோ. ௮

வேறு.

உலகினிற்றருமசிந்தை யுடையராய்ப் பவங்கடீர்ந்து
நலமிகுகுருவைத்தேவை நான்மறையவரைப்பூசை
வலமிகவியற்றிநாளு மனையறநெறிவழாதோ
ரலகில்சிங்காரமாக வரம்பையரோத்தவாழ்வர். ௯

வாயினாற்பொய்மறுத்தோர் வானவர்பதியிற்சேர்வர்
தூயதூசுவந்துதந்தோர் துலங்குவரமரர்நாட்டி
லேயுரல்கட்டிலாதி யெழிற்குடையணிகண்மிக்க
நேயமாயுதவினோர்க்கு நிறைமலர்மரணமெய்தும். ௰

உண்பனவுபசாரந்தோ டுதவுவோரமரர்நாட்டி
னண்புடனமிர்தமுண்பர் நாளும்பாறேனெய்வெல்லம்
வெண்டயிரமோருமிக்க விருப்புடனளிக்குமேலோர்
பண்டமைக்கருவியார்ப்பப் பண்ணவருலகில்வாழ்வர். ௧௧

புனிதநீரன்பாய்நல்கிற் சந்திரன்போல் விமானம்
பனிவிசும்பூர்ந்துவானோ பாட விண்ணுலகிற்சேர்வர்
வினையறுகடவுளர்க்கு விளங்காலயங்கள்சார்வர்
முனிவரரமரரெல்லா மொய்க்கவிணைபதத்திற்சார்வர். ௧௨

நறுமலர்சசோலைவைத்தோர் நந்தனவனங்கள்செய்தோர்
பெறுமுயலூர்திமீதிற் பிறங்கும்பொன்னுலகிற்சேர்வ
ரெறிகதிர்ப்பவளமுந்து மீநநவா தடங்கள்செய்தோர்
நெறியினன்மானமூர்ந்து நிகரிலாப்பதந்திற்சேர்வர். ௧௩

அணியுறுங்கலவைசர்த மழகுறவளித்தநல்லோர்
மணிபொன்பூவலங்காரத்தின மருவுவரமரர்நாட்டிற்
றிணியிருளகலுமாறு திருவிளக்கேற்றிவைப்போர்
துணிபடவிருடுறக்குஞ் சோதிபாலமர்வரன்றே ௧௪

இருக்கவில்லூர்திபாண்ட மெளியவர்க்கினிதினீந்தோர்
மருப்புடைப்பொருப்பினவான மாதுரரர்வாழ்த்தச்செல்வர்
வருத்தந்தீர்குடைகளூர்தி மிதியடிவழங்கினோர்கள்
கருத்துறுமூர்திமீதிற் கற்பகநாட்டிற்சேர்வர். ௧௫

பின்னரும்விரதமாதி பெறுபவர்தீர்த்தமாடன்
மன்னியவேள்வியாற்றன் மகிழ்ந்துபூசனைகள்செய்த
லிங்கிலந்தன்னிற்றேவ தெரிசனமுதலயாவு
நன்னலத்தியற்றினோரு நண்ணுவர்கதியின்மாதோ. ௧௬

இன்னனவறங்கள்செய்தோ ரெய்துவர்கதியென்றூலு
மன்னவரியற்றலானவ றங்களுக்கியன்றவாறே
பொன்னுலகதனிற்சின்னாட் பொருந்திப்பின்புவியின்மீது
மன்னுவர்மறைவலாளர் முதலமூவருணந்தன்னில். ௧௭

## வேறு.

பூமிதானத்தினைப் போலமற்றிலை
யாமதைத்தடுத்தவி னதிகபாவமாங்
காமஞ்சேர்மற்றதோர் காலத்தீறுறும்
பூமியென்ஞான்றினும் பொன்றலில்லையால். ௧௮

உத்தமப்பூமியை யுயர்ந்துளோர்பெறத்
தத்தஞ்செய்தொருவர்பாற் றும்பெறுரெனிற்
சத்தமார்கடற்புவி முழுதுந்தானஞ்செய்
வித்தவர்பெறும்பலன் மேவுவார்களே. ௧௯

பொன்மணியணிகலன் புனிதவாடைக
ளென்னும்பஃறானமு மிதனையொக்குமோ
பன்னுதற்கரியநற் பஞ்சவேள்வியு
மன்னுபூதானத்தின் பலன்வழங்குமோ. ௨௰

உலகுளோர்மகிழும்பூ தானமோங்கிய
பலன்றரும்பயிரொடும் வழங்குமபண்புளார்
குலமுளபிதுரெலா மகிழ்வுகொண்டிந்தத்
தலமுளமட்டும்விண் பதத்திற்சார்வரால். ௨௧

பூதலதானமும் பொருவிலாதுநல்
லாதரவுடனுமோ ராவுண்ணீர்தரு
மூதறிவோர்கண்மூ வெழுதலைமுறை
கோதருமமரரிற் கூடிவாழ்வரே. ௨௨

## வேறு.

சீவனுக்கெலாஞ் சீவனமெனப்பெயரதற்கிங்
காவதீபவர்க்கீற்றினி மெரர்களெதிரின
மேவிவேண்டுவ யாவையும் விருப்புடனுதவிப்
பூவின்மாரியும் பொழிந்துவிண் புகுமபடிபுரிவர். ௨௩

தண்ணுறும்புனல சுகந்தரும்பரிசையயும் தணிக்கும
புண்ணியம்மிதிற் பெரிதென்றே கொடுக்குநற்புனலா
னண்ணும்வெங்கன லகன்றுயிர்வளர்தருநலத்தாற்
பண்ணுநன்மகந் தவம்புரி பலனிதற்கிணையோ. ௨௪

அறுசுவைப்படுகறியொடு மனஞ்சிலர்க்குதவிற்
பெறுமுடற்கத னுறுந்தாதுக்கள்பிறந்தாங்

குறுமுயிர்க்கவை திடம்புத்திமகிழ்ச்சியுமுளதா
நெறியினன்னத்தின் மயமுயிரஃதின்றேனீங்கும். ௨௫

ஊணினலன்றே வுடலுயிர்க்குறுதியும் வலியுஞ்
சேணுறுந்தவ முராணமுஞ் செய்வனவெவையு
நீணிலத்துறு மானுடர் நெறியறிவிபுதர்
காணுமாவிற்கு முண்பனபிரமமாங்கருதின். ௨௬

உடற்பிராணனும் பானனுதானன்வியானன்
*றிடத்துக்காஞ்சமா னனுமிவர்தேகத்திற்குரிய
விடத்தினிற்றொழி லியற்றலோடுறங்குதலெழுத
னடத்தல்பற்பலபடைத்தலுமன்னமேநாடின். ௨௭

ஈசனாதியதேவரு மறையவரியற்றும்
பூசையின்னவி யுணவினும் புகலகற்பந்தோறும்
பேசுமுத்தொழி னடத்துவர் பெருநிலத்தவர்க்கு
மாசிலாவறம் பொருளின்ப மாவதுமதுவே. ௨௮

வருடமொன்றொரு மறையவன்றனக்கனமளித்தோன்
பருவமாயிரம் பண்ணவருலகினிற்பரவிப்
பொருவில்வேண்டிய போகமுந்துய்த்துப்பின்புவியி
லரியவேதிய னாகவந்தவதரித்திடுவன். ௨௯

அருந்துமுன்வனிக் கொருபொழுதனமளித்திடினுந்
திருந்தவோரிரண்டாண் டோர்சீர்மறையவற்கன்னம்
பொருந்தவூட்டினுங் கோடியாண்டமரர்பொன்னுலகி
னிருந்துநான்மறை வேதியனவனிவ்வுலகின். ௩௰

நல்லவேதியன் றனக்குப்பத்தாண்டனநல்கி
னல்லதீர்த்துய ரமராவாழுலகிடையடைந்தாங்
கெல்லையில்சுகத் தாயிரங்கோடியாண்டிருந்து
வல்லவேதிய னாகமாநிலத்தினில்வருவன். ௩௧

நடந்துவந்தனங் கேட்கினெவ்வளவெனு நல்கிற்
படர்ந்துபொன்னுல கேறுவர்நிரையத்துப்படரார்
தொடர்ந்துசென்றழைத் ததிதிகட்கூட்டுவோர்தோடங்
கடந்துநற்கதியடைவிதங் கழறுமாறெவனே. ௩௨

அதிதியேதெய்வ மெனமனம்பரிவுற வவரை
யெதிர்கொடேத்திநல் லிருபதம்விளக்கி யின்புறவே

திசெய்தன்னமுங் கொடுப்ப துருடன் றுலங்கும்
கதியின்மேவுவ ரரம்பையர் களிப்பொடுமருவ. ௧௩

அறிந்துவந்தவன் யாதுமற்றவனறி யாதோன்
செறிந்துறும்பெய ரதிதிகளாமிவர் சேர்ந்தாற்
பிறிந்திடாவன்பிற் பூசித்தூண்டரும் பெரியோர்க்குப்
பறிந்திடாப்பவம் மானமீப்படர்வர்வைகுந்தம். ௧௪

மத்தியானத்தி னுஃறுமதிதிகட்கனம் வழங்கி
னத்திறம்பிது ரமரர்பாலருந்துவதாகு
மித்திறத்தினி னிலேபொனபோர் பிரையமிதெயதிப்
புத்தியீனராமெசரிலுன் னமிரனப்புகல்வர். ௧௫

இல்லின்பக்கலி னடந்திளைப்போடெய்தி னோர்க்குச்
செலவமில்லவ ரென்னினும்பரிவைத் தீராரே
லல்லமேலொடுங்கீழ் நரகிலாயிரப்பந் நாண் டுறுகி
நல்குரவுக்கோ ருறையுளாநீசராய்நலிவர். ௧௬

ஓமவீற்றினிலதிதிக்கூ ணிடாதவர்நீச
ராமதற்கையமில்லைத் தேசாந்திரியானேன்
ருமுண்வேளையில்வந்திடிற் றந்நுணாகிற்
போமுன்பன்னிரு செனனநாயாவரம்புவியில். ௧௭

வரத்துநீசனே யெனினுமுண்வேளையில் வைகிற்
றரத்தகாதென்போர் தாமுஞ்சண்டாளரஃதின்றி
யருத்திகூர்தர வெதிரிற்சென்றழைத்தனங் கொடுத்தோர்
திருத்தவிண்ணவ ரெதிர்கொளவுபாபதஞ்சேர்வர். ௧௮

வேறு.

நற்குலத்துதித்து நன்னெறியுணர்ந்த ஞானியானவர்கட்கோர்வருட
மற்புதவுண்டியாடையுமகிழ்வி னருளினோரரம்பையர்சூழப்
பொற்புறுமானமீதில் வைகுந்தம் பொருந்தியேகோடியாண் டதன்மேற்
றற்பரமுணருநான்மறையவராய்த் தரணியினெய்துவரன்றே. ௧௯

உயிருளகாறுஞ்சாத்திககுணத்தி னுத்தமப்பொருளினாலுயருஞ்
செயிரறுமனதானத்தினைநடத்துஞ் செல்வர்க்டேவருக்கரசாய்ப
பயிறருநடனத்தரம்பையர்கவரி பற்றிநின்றிருபுடையிரட்டக்
குயினிகர்மொழியர் பலாண்டிசைபகரக்கோநகர்தனையென்றும்புரப்பர்

என்பனபலவுமொழிந்திடக்கேட்டாங் கெழின்மிகுஞ்சுந்தரமூர்த்தி, யின்புறவணங்கியறத்துறுபலனை யிசைத்திடக்கேட்டகமகிழ்ந்தன்றன்பின்னைவிளைக்கும் பாவமும்பதகர் தொடர்கதியையுஞ் சொலுகெனவே, யன்புமீதூறச்சுந்தரானந்த ரெனுமருந்தவத்தினரருளுவார். ௬௧

புண்ணியபலப்படலமுற்றிற்று.

—*—

௮ படலம்-௯க்கு திருவிருத்தம் - ௪௯௰.

## பாவபலப்படலம்.

சுந்தரனீகே ளந்தரவுலகந் துய்ப்பினாளுஞ்
சிந்தைகளிப்பால் வாழ்நாளுற்ற செயலைச்சொற்று
மிந்தநிலத்தோ ரிழிதொழிலாம் பாவ ரிவைசெய்தே
நிந்தையுறுமவ்வெந் நிரயமதுறுவன நெறிசொல்வாம். ௧

கூத்தன்சங்கீதன் விகடனாயினன் கொலைசெய்வோ
னேத்துறுவிரதம விட்டோனபெண்களை மிகவீன்றோன்
றீத்தொழிலைபுரியு மறையவர்பொருடிருடுங்கோளன்
சேர்த்துறுபொருளின் வட்டியினுஞ்சீ விப்போனும். ௨

தன்குருவின்பா லச்சமிலாது சடஞ்சொல்வோன்
பின்பொருவன்றன் மனைவிபொன்னனிச்சை பெரிதுள்ளோ
னன்றிமறந்தோ னுலகாயுதனொடு நாத்திக
னென்றிவரெல்லா நிரயமதுற்றிட ரடைவாரே. ௩

மித்திரபேதன் குலநியமங்கை விட்டோனுஞ்
சுத்தமுறுமமறை விற்போன்சூழ்வர் தொழிலைச்செய்வோன்
புத்தியிலாதவ னட்புறுவோன்புக ழறம்விற்போன்
பத்தியிலாக்கொடு நீசர்பெறப்பசுபால்விற்போன். ௪

பொறுமையிலார்க்குத் தவர்களிழைத்தவ போக்கில்லார்
சிறுவர்கடங்கட் கனமளியாமற் றீதாகு
மறுசுவையுண்டிக டாமுணபவராழ் நிரயத்தி
னுறுவர்களென்னநன் மறையறிவோர்க ளுரைப்பாரால். ௫

ஊருந்தேர்ப்பா கன்மிகுகட்டிய முறைசெய்வோ
னீருமருத்தன் கணிகைசூதாடி யிருவோரைச்

சேருமனத்தா ளவள்கணவன்மூத் தவன்செய்யா
தாருமனத்தா னரசர்தம்மனையி னனங்கொள்வான். ௬

தந்தையுடன்று யுண்ணவுணுதுறு சண்டாள
னிந்தையுடன்கள் ளொடுமதுநுகரு நெறியில்லான்
புந்தியினஞ்சுத லின்றித்திருடும் பொறையில்லான்
பந்தமுறுங்கொடு நிரையமதிற்போய்ப் படுவாரே ௭

இன்மையி னானை யுண்ணவழைத் திங்கிலை யென்றோ
நன்மைகொள் வேதியர் தொழிலைம றுத்தவர் நகர்வீடு
தொன்முனி வோருறை யாச்சிர மங்கள் சுடுவிப்போர்
மென்பசு வுணநீ ரளியாருங் கொடு நரகிடை மேவுவரே. ௮

நெறியுறு வேதிய ருமைநிந் திப்பவர் நடையில்லா
ரறிவி லரந்தக ரின்பொருள் கவர்பவ ரளியாக
முறையறி வித்தருள் குருமொழி கொள்ளா மனனுடையார்
குறிகொளை நாண்முற் கூடுவர் கொல்லாக கொலையோரே. ௯

கோலொரு மூன்றுஞ் செஞ்சடை குடுமியு மிலரேனு
மேலுள காவித் துகிலுள வரைவிரும் பாதரா
சீலநற் றுறவாஞ் சிந்தைய ரவவே டத் தோரைப்
பாலரையாத ரியாதவர் நரகிற் பாய்வாரே ௧௦

வேறு.

பூதலந் தனக்குங் காலன் புரிகருமெண் பானு றென்ன
வோதுமா யிரங்க ளூற்ற யோசனை யகலவி னுள்ளாய்
மீதுறு மரங்க ணீழ லிலவாய் வெருவல் காட்டும்
பூதமு மிரண்டிட் கல்லும் பொருந்திய நெறிய தாமால். ௧௧

உள்ள முன்வினை வயத்தா லுடலுறு முயிரைத் தூதர்
தள்ளுறத் தூல நீங்கிச சூக்கும தனுவி னோடும்
விள்ளரு மெரியி னாலும் வெந்திடா வினைப்ப யாவுங்
கொள்ளுறும் வலிமை யுற்ற குடம்பையைப் பிணித்தல்செய்தே.

கோரமாய்க் காலதூதர் கூட்டும்வெம் பாசத் துள்ள
யாரு மாதார மின்றி யிருவினை யகலா தாகிச்
சேரும்பல் லுறவும் விட்டுச செய்வினை நினைந்து நைந்தாங்
கீரமில் பத்தர் செல்லு நெறியிருட் டுயர்நீங் காதால். ௧௨

வரையறை காலம் வந்தான் மாத்திரை தருக வொட்டா
ருணைசெய் நால்வகையின் றேற்றத துற்றுவா மூயிர்க ளோடு
நரர்மிகு மசுர ராதி யாவர்க்கு நமனூர் தப்பா
தொருவறு முதுமை மட்டு முறுபொழு தினதென் றின்றால். ௧௪

இடமிது கால மீது செய்கையீ தென்ப தின்றிக்
கடைவரி னஞ்சு மாறு கட்டுவ ரடிப்பர் சுற்ற
மிடைவிழுந் தலற வெய்ய முள்ளாற்றிற் கதையா லெற்றிக்
கொடுமணற் கொதிப்பிற் றள்ளிப் பாதகர்க் கொடுபோ வாரே.

கொலைபுரி கொடியோர் தம்மைக் கோரமா யுலக்கையாலே
தலைமுத லுடன் முற்றுந் தசையுட னிரத்தங் கால
நிலையறக் கைகான் மூக்கு நெற்றிவாய நெறியத் தோள்க
ளலைவுறக் கவுண்பா ரென்பு மொடிந்துக வைத்தடிப்பர். ௧௬

அளவரும் கறுவி தம்மா லறுத்துக் குத்தியு மடித்து
முளமது பதைப்பச சுட்டுக் கொண்டுபோய நரகுட் டள்ளக்
களமுறத் தேளும் பாமபு கழுதுநிட வட்டை காகந்
தளர்வுறத் தின்னுந் தாமுண் விலங்கெலாந் தம்மைத் தின்னும்.

சிறியரைக் கொன்றுளார்கள் சேயிழை யவளைக் கொன்றோ
ரறிவுற நமபினோர்த நட்டையா தரிந்திடா தோர்
வெறிமலர்க் குழலி னார்க்கு விருமபிக்குற் றேவல் செய்வோர்
தறிசெயுங் கருவி தமமாற் றண்டிக்கப் படுவதாமால். ௧௮

இல்லுறு பொருளை வெய்ய விருளிடைக் கவர்வுற் றோரை
வல்லுரத் திடித்து யோதி வயங்குகொள் ளியினாற் காயவர்
நல்லவர்க் கிடரிழைத்து மிகழ்ந்து நோவசொன் னோவைப்
பல்லினை விகலன் காகம் பறிக்கப்போய் நரகிற் பாய்வர். ௧௯

உள்ளவ ராக வாழ்ந்து முயர்ந்தவர்க் குதவா தோரை
யொள்ளிய கழுத்திற் பாச முறவடித் துடற்றி மென்மேல்
கொள்ளரும் பரியாற் றுன்பங் கொண்டுநீ ரன்னங் கேட்பத்
தள்ளிப் போய்க் கும்பிபாக நரகத்துச் சார்விப்பாரால். ௨௰

கொடிய பாதகர்க டம்மைக் கூறுகூ றாக வாட்கொண்
டடிமுதன் முடியின் காறு மரிந்துவெந் தழலி லிட்டு
மிடியென வதிர்த்துக் காயு மிருப்புத்தா ணேடுகட்டி
நெடியவர்ங் கிருமி யாவு நெருங்கிய குழியிற் சேர்ப்பர். ௨௧

இவ்வகை யநந்த கோடி நிரையத்து ளேங்கி யேங்கிச்
செய்வகை யுணரா ராகித் திகைத்துநொந் தழுது துன்பப்
பௌவமுற் றுணங்கும் வெய்ய பாதகர் பதைக்குந் தோறு
முய்வகை செய்திலோமே யெனவுணந் திவைசொல்வாரால். ௨௨

வேறு.

பெண்டிர் தனயர்சுற்றமுற்றோர் பின்னையுதவி செய்வரெனக்
கொண்டு தருமங்கைவிட்டிக் கொடியநரகுக் காளானோ
முண்டா ருடுத்தார்மற்றுமுற்று முற்றாருற்ற வேளையில்வந்
தண்டார் புரிந்தவைம்பாவ மதுவேயுயிர்க்காதரவென்பர். ௨௩

தேடியபொருளையறநாளுஞ் செயாதுசிறிய தொழில்களித்துப்
பாடிவிழலுக்கிறைத்ததுபோற் பவமேபுரிந்தாமூழ்வினை
நாடியினும்போய்ப்பூவுலகி லெண்ணறுமிக விழுநரகினுறுங்
கேடிப்படிக்குவிளைக்குமென றிட்டோமென்றுநிலைசொல்வார். ௨௪

எந்தநாளுமிறவாம லிருப்பதாக மனத்தினினைந்
தந்தோகொடிய பவம்வாரமடுத்தோமாதவர்க்குறிப்புசெய்தோ
முந்தவிதனையுணரிற்பொருண முழுதும்வறிஞர்பெறவுதவிச்
சிந்தைகளிக்கத்தேவர்பதஞ் சேர்வோமென்றுநிலைசொல்வார். ௨௫

ஐயமுனரிற்பூவுலகி லறியாமையிலுற்பவம்விளைத்த
வெய்யவெமைப்போய்ப் பற்றுமனத்தின் மேவவருளிவிட்டடோற்
பொய்யின்மேனாட்டேடிமனை புதைத்து வைத்தபொருளனைத்துஞ்
செய்யவறங்களாற்றியிவண் சேர்வோமென்றுநிலைசொல்வார். ௨௬

பிறந்தபிறவியிடேபரமுணர்ந்துமமதைத்
துறந்திங்கர்க்கெய்தாதநெறி யென்றுதோன்றுமென்பர்சில
ரிறந்திந்நிரையத் தழுந்துவதா யிழைத்தோம்பவத்தையெழிலறத்தை
மறந்தோமந்தோவித்துயர மாறுமோவென்றழுவார்சிலர். ௨௭

நரகஞ்சுவர்க்கமென்பதனை நாடிப்பார்த்துமண்மீதி
லுளாசெய்தவராரென்றுநம துணர்வைக் கெடுத்துச்சார்வாகன்
வளையும்விதத்தானமைநரகின் வருத்தப்புரிந்தமிகுகொடிய
பரமபதகரிந்நரகிற் படர்வரெனவேயகல்வர்சிலர். ௨௮

இன்னும்பலவாறுகநர கெய்தியுழலுமாந்தர்செயல்
பன்னவரிதாமாதலினாற் பவமோர்பொழுதும்பண்ணுமற்
றண்ணுருயிர்போலெவ்வுயிருந் தாமென்றகத்திலன்புறவே
யெந்நாளினுநல்லறங்கள்புரிந் தெய்துவார்நற்கதியினுள்ளார். ௨௯

சொன்னதருமம்பலவவற்றுட் டுலங்கோதனமேயதிகமென
முன்னருளாத்தமுறையாக முந்நீராடையுலகினிடை
மன்னுதருமமினையந்தமட்டும் வழங்குமவரோகதிக்காவ
ரென்னவுயர்சுந்தரமூர்த்திக் கிசைத்தார்யாவுமுணர்ந்தோரே. ௬0

வேறு.

அன்பொடு சுந்தரானந்தா கூறலு
மின்புடனவரிரு பதங்களேத்தியிவ்
வன்கலியுகசெயல் வழுத்துவீரெனத்
துன்பகன்முனிவரர் சொல்லுவாரரோ. ௬௧

பாவபலப்படல முற்றிற்று.

ஆ படலம் ௰-கரு-திருவிருத்தம் - சகூஉ.

# கலியுகவியற்படலம்.

நலமிகுசுந்தர மூர்த்தி நன்குறுங்
கலியுகச்செயலினைக கனிந்து கேட்டியே
லுலவறுமுன்னைய யுகத்திறுபோ
லெவிதனபெருமையை யறையக்கேட்டியால். ௧

முன்னுமகிழந்தன யுககணமூன்றினுந்
துன்னினர்கலர் சிலர் சுருதிநான்முறை
மன்னியவறஞ்சில மருவிற்றெனனினும்
பின்னுறுமிதிற்கலர் பெருக்கமிக்கதே. ௨

வேதியர் தந்தொழில் விரும்பிமற்றுள
சாதியர்புரிவாக டாழ்ந்துளார்களோ
பூதியமபெறுவதற் குனியுயாந்தவர்
கோதுறவணங்குவர் குலமுளார்களே. ௩

குறையுறுமீசரிக் குவலயத்திடை
மறையவருணரசசோ திடம்வகுப்பரா
னெறியுறுமரபினல்லொழுக்கநீங்கிட
முறையுறுந் தொழில்சிலர் முயலுவாரரோ. ௪

தன்மனை தனம்விற்றுத் தனங்கடேடினு
நன்மைதானெனச்சிலர் நயந்துவாழ்வராற்
றன்மமென்பதனருட் டன்மையேயோர்வுறாக்
கன்மனத்தவர்சிலருறுவர் காணினே. ௫

ஆடிக்கியகோடி பொன்பெறினுமானநற்
குடிக்கியலாதன குறைக்குடன்படார்
படிக்குணமேலவரெனப் பகர்தன்மமாறாம
மிடிக்குடன்படுவர்மீ ப்பரியுமேற்பரால். ௬

குன்றினையனையபொன் கொண்டோர்களுங்
குன்றுவக்குன்றிபி னளவைசெய்யினுங்
குன்றுவமிரனுமேறா கூறுமாற்றினி
நன்றிலாரெனசிலர் நயப்பபாரினே ௭

தலையிடையிழிதரு மயிரினைப்போல மாபா
நிலையிடைத்திரிவுறு நெறியினோரெனப்
புலமையினோர்புனை புகலுந்தன்மையிற்
குலநலமறிவுறார் சிலர்கள் கூறிலோ. ௮

ஈட்டியபொருளைநல் லறத்துக்கீகிலர்
வாட்டமிலறிஞர்களை மகிழ்நல்கிலர்
கேட்டங்கொண்மனத்தராய்க் கொடிறுடைப்பவர்
கேட்டனகொடுப்பராய் விளைந்துநிற்றியே. ௯

தானுமுண்ணார்சுற்றத் தவர்க்குந்தாந்தரா
ருனுடையுடம்பினை வருத்தியொண்பொரு
ளானையபுதைத்தவக் கொடுசெய்வார்கட்குந்
தேனுறுமளியினைநிற்றருவராற்சிலர் ௧௰

சிறப்பினைத்தருவதுஞ் செல்வர்துய்ப்பது
மறத்தினல்லாற்றினை யன்றியின்றென
மறத்தினையகற்றுநூல் வகுத்தானன்னெறி
மறுத்துவெம்பவத்தினை வளர்ப்பராற்சிலர். ௧௧

என்பிலாப்புழுக்களைக் கதிரெரிப்பபோ
லன்பிலாவுயிர்களை யறஞ்சுடும்மென
முன்புரைதேர்கிலா மூடராய்ச்சிலர்
வன்கொடுஞ்செயலுடன் வாழ்வர்மண்ணினே. ௧௨

புன்னுனியுறுபனி நீரைப்போலவு
மின்னிடையொளியென விளங்குமிவவுட
றன்னிடையுயிரதன் றன்மைநோர்கிலா
திந்நிலத்திறில தெனக்கொள்வார்சிலர். கரு

ஒருபொழு தாயினும் வாழ்வநோர்கிலர்
கருதுபகோடிமேற் கணக்கிலாதன
மருவருமூலகியல் வழக்கமாதலைப்
பரிவொடுமேற்கொளார் பயனுணர்ச்சிலர். கச

வேறு.

தனையரேவிய தொழில்களைத் தந்தையர் புரிவர்
மனையின்வந்ததுன் மருகிசொன மாமிகேட்பதுவா
யனையவில்லவன் மொழியினைக்கேட்ப ராடவர்கள்
புனைநலந்தவர் நட்டவர் குறைபுகன்றிடவே. கரு

நசையுரைத்திட நாவிலராயும் பிறர்பால்
வசையுரைப்பதற் குடம்பெல்லாம் வாயெனப்பிதற்றி
யிசையறத்தன குற்றங்காண்பதற்குக் கண்ணிலரா
யசைவின்மற்றவர் குற்றமாயிரங் கணுக் காண்டார், கசா

குற்றமாகிய மொழிகளெம் கோடிமேனுழையுங்
கற்றமே வர்சொலுமொழி காதிடைநுழையா
துற்றசெல்வமேநிலையென வுணர்வின்றிநிலைமை
யற்றதுலமுமழிவுறு தெனநினைந்தமர்வர். கஎ

ஏற்றவர்க்கொன்று மீந்திடார்பிறரிடந்தாம்போ
யேற்றற்கெண்ணிலை தெப்பொருளாகினுமேற்ப
ராற்றுநல்வழிச் செலற்கிருகாலழி முடமா
மாற்றுந் தீவழிச் செலவெனின் மருத்தினும் விரைவர். கஅ

அடுத்துளோர்களைக் கெடுத்தவர் பொருள்கவர்பவரு
நடுத்திரிந்தவை தனிலொரு பானவில்பவரும்
வடுத்தவிர்ந்த மேலவர்களை வசைபுகல் பவருங்
கடுத்தசொல்லினர் கவர்மனத்தினர் சிலர்காணே. கசு

தேவராலயங்களை மறைசெப்பும் வேதியரைத்
தாவினன்மறை சுருதிநூல்களையிகழ் சளக்கர்
கோவைமேலவாங் குலத்தைநிந்தனைசெயுங் கொடியோர்
பாவமேயுரு வாகிய பதகர்கள் பலரால். உய

பெற்றதாய்மனம் பேதுறவியற்றும் பேதையரும்
பெற்றசேயினை விரும்புறுப் பேயனையவருஞ்
சுற்றமுள்ளவர்தமை யென்றும்பகைகொடூர்த்தர்களும்
வெற்றிவேந்தர்பாற் பகைகொளும்வெறியரும்பலரால். ௨௧

மனையின்மற்றொருவன் வரமனமதற்கிசையவோர்
பினையொருத்தன்வாழ் மனையிடைநுழையும்பேதையர்க
ணனைமலர்க்குழற் பொதுவியர் கலவியைநயப்போ
ரனையவர்க்குக் குற்றேவல்செய் யசடர்கள்பலரால். ௨௨

கல்விமேன்மையு நன்மையுந்தருமெனக் கருதார்
பல்விதங்களிலகஞ்செல வதன்வழிபடர்ந்து
நல்விதஞ்செயு முணர்விலாமையிற் பகைகொண்ணைத்
தொல்வியாகித்தம் பொருள்கெடத் துளங்குவர்சிலரே. ௨௩

செவியினுணறுஞ் சொற்சுவை தேறுதற்கிலராய்
நவிலும்வாயுண வினின்சுவை நன்குணரசட
ரவிகிலாதிருந்ததிப்பய னிலையென்பதறியார்
புவியினிற்கொடுந்தொழில் புரிந்துய்குவர்சிலரே. ௨௪

அச்சமின்றியே மதுநுகர்வார்களு மறிஞ
ரெச்சமென்றிகழ் சூதினைநாடுகின்றவரும்
பச்சமின்றித்தந்தாதைபாற் பாகங்கொள்பவரு
நச்சராவெனப்பலர்கட்கு நலிவுய்ப்பார்பலரே. ௨௫

வருணபேதமின் றுமெனவுழல்கின்ற மடையர்
கருணையின்றியே வறிஞரைக்கடிந்துசொல் கொடியர்
புரியுமவெங்கொலை யாளர்கள் பொய்க்கரியுரைப்போ
ரெரிகொளுங்கனன் மடிக்குறுமேழையர்சிலரே. ௨௬

திருடுசெய்பவர்பிறர்க்குத் தீங்கிழைப்பவர்பலரை
மருவும்பெண்களை மனையில்வைத்திருக்கின்ற மடையர்
மருவினற்குல மடந்தையர் கற்பினையழிக்கக்
கருதுமூடர்கள சிலர்களிக்காசினியமர்வர். ௨௭

இனையவாகிய வெண்ணறும்பாவிக ளுறினு
மனையறத்தொடு நன்னெறி வழுவிலாதவராய்
கனைகடற்புவி தனிலெங்குங்கலந்து நல்லறங்கள்
கனிவுறச்செயுங் கருணையோர் மிகுதியாங்காணின். ௨௮

துன்னுநற்றவஞ் செபஞ்செய்வோர் தொகுதியுமருளா
லன்னதானங்கண் முதலியவறஞ்செய்வோர் திரளுங்
கன்னலின்சுவை கைத்திடக்கனிவுறப் பகர்வோர்
மன்னுந்தேவர்க்கா லயங்களும்வகுப்பவர்பலரால். உசு

தேவராலயங்களை த்தினந் தெரிசிப்போர்பலரே
யாவலாயத்திருப் பணிகளாற்றுவிப்பவர்பலரே
தாயின்மாதவர் தமக்குபசரிப்பவர்பலரே
பாவமின்றிநல்லறத்தினைப் பரிப்பவர்பலரே. கூ0

கண்ணுறங்குவ போலவந்துறுவ சாக்காடக்
கண்விழிப்பது பொருவுவ பிறப்பெனக்கற்றோர்
பண்புலப்படப் பகர்ந்த நான்முறைப் பயனுணர்ந்து
தண்புனற்படை முதலியவறஞ்சிலர் சமைப்பர் கூக

அருதிதெய்வமென் றடிந்துனைதொழுதனங் கொடுப்போர்
தொகுதியாகநற் சுற்றத்தோரருந்துணுந தாயோர்
பகுதியின்றித்தன் றுயிரெனப்பல்லுயிர்காப்போர்
மிகுதியாகவிம்மேதினி தனில்விளங்குவரே. கூஉ

இனையபற்பல வறங்களுஞ் செறியிருநிலத்திற்
புனையும்பற்பல வணியினுங் கற்பினைப்புதுக்கி
மனைநன்மாட்சியி னுடனிருபரையுங் காக்குந்
தனைநிகர்த்திடா மேன்மைமிகொடையலார் பலரே. கூங

இல்லதென்ன தம்மில்லவண்மாண்புட னிருக்கி
னில்லண்மாண்பினை யில்லனேலுள்ளதென்னென்று
வல்லநாவலர் முன்னைநாள்வழுத்து மாறுணர்ந்து
நல்லறத்துட னில்லறத்தவர்பலர் நாடின். கூச

வேதவேதியர்முதலியவியனுலகமர்வோர்
சாதிமேன்மையுமொழுக்கமுந்தவறுதலிலராய்
நீதியாய்ப்பெரும்பாலும் மைத்திடைசரிலர்கள்
கோதுறக்கேதுவெதுவெனிற்கூறுதுங்கேண்மோ. கூரு

வேறு.

மன்பதைபுரக்குமெல்லுயிரவுநேர்வழங்கல்போலு
மின்பமுந்துன்பம்யார்க்குஞ்சமமெனவிசைத்தலாலு
மன்புடன்கலியுகத்தில்நன்மிகவளர்தலாலே
துன்புசெய்கலருமீறித்துவன்றினரென்பமாதோ. கூசு

முந்தியயுகத்திற்பாரின்மொழிதருவருணமின்றாய்ச்
செந்தழல்மகங்களின்றாய்த்தேவராலயங்களின்றாய்
நந்தலாம்பவங்களின்றாயநவஞ்செறியறமுமின்றாய்
வந்துறுதீர்த்தமின்றாய்வழங்கியதென்பர்மேலோர். ௩௭

இரண்டதாம்யுகத்தினான்குவருணத்தியல்புண்டாகி
மருண்டதன்மையினைமாற்றுமறைமகங்கண்முற்பிறங்களுண்டாய்த்
தெருண்டவர்மகங்களாதிசெய்வதற்கேதுவாகி
யருந்தவஞ்சிலர்களாற்றவிளங்கியதவனியென்பர். ௩௮

மூன்றதாம்யுகத்தின்மிக்கமுதுமறைக்குறிக்கேற்ப
வான்றதேவாலயங்கடத்தக்கதாலிலமைந்த
சான்றவர்சிலருந்தன்மாதன்மமுஞ்சமமேயாகத்
தோன்றியதென்னநூலோர்மேலவர்சொல்லுவாரால். ௩௯

இந்தநற்கலியுகத்திலிங்குறுங்காவிரியாற்றின்
முந்துறும்வடகோவின்மொழிதருமறுபான்மூன்று
முந்துதென்கரையிற்சேர்ந்ததோருநூற்றிருபதேழு
மந்தமிற்றலங்களாற்றுந்தொண்ணூற்றுதாகுமன்றே. ௪0

பாண்டிநன்னாட்டிலீசன்பதிபதிநாலதாகும்
வேண்டியதுநவுஞ்சேரநாட்டிலாடவிரண்டுமொன்றுங்
காண்டகுகொங்குநாட்டிற்கவினாரிருதலங்களேழுந்
துாண்டருவிளக்கமன்னதுழுவநாடதனிலொன்றும். ௪௧

தொண்டமண்டலத்திலந்தசசோதிசேர்தலமெண்ணான்குந்
தண்டலின்மகதநாட்டிற்றலமிருபத்திரண்டு
மண்டலம்புகழுகினைநவடைந்துமீசன்
பண்டமர்தலமிரண்டுநாற்பெழுபானுலாயால். ௪௨

திருமலிமார்பன்மேவுந்திருத்தலஞ்சோழநாட்டின்
மருவுவானாற்பான்மூன்றும்வளர்பாண்டிதனிலேழவாறும்
பெருவளமலைநாட்டிற்பிறங்கியதலம்பன்மூன்றுந்
தருமலிதொண்டநாட்டிற்றலமிருபத்துநான்கும் ௪௩

வடபுலந்தன்னிலென்றும்வழங்கியதலமீராறுந்
தடமதிற்காளியன்றன்றலைதொறாடனஞ்செய்து
படமுயரரவைநாளும்பாயலாய்ப்பள்ளிகொள்ளும்
இடமிகுமரியுற்றோங்குந்திருப்பதிநூற்றுப்பத்தே. ௪௪

தொன்மரநீழலுற்றுத்துகளறுமீசனன்பான்
முன்னுபதேசம்பெற்றமூவரான்முனிவர்தம்மாற்
சொன்முறைபாடற்பெற்றநலங்களாய்ச்சொல்வர்பின்னு
நன்மையேவிளைக்கும்பல்சேத்திரங்களுநிலத்தினுண்டால். ௪௫

ஈதலானதிகளிந்தவிருநிலவரைப்பினுப்பர்
மீதுயர்ந்தெழுந்தமேருகிரிமேல்பாற்சக்குவென்றாந்
தீதறுவடக்கிற்பத்திராநதிதிகழ்கீட்டிக்கிற்
சீதையென்றுரைக்கவான்றசெழுநதிசெல்லுமன்றே. ௪௬

அன்னமால்வரையின்றென்பாற்பாவினியலேபண்மோதி
நன்னலமாகச்செல்லுமிலாதினிநவினிமூன்றுயச்
சொன்னவைகளுக்குத்தென்பாற்றுலர்குவபரதகண்டந்
தன்னிலேழ்தீவுமுண்டாலதன்பெயர்சாற்றக்கேண்மோ ௪௭

நாவல்கண்மிகுதலானநலஞ்செறிசம்புத்தீவே
தாவிலா * விறலியுற்றதாந்தரும்பிலக்கத்தீவே
மேவுறுமிலவுமிக்குவிளங்குஞ்சான்மலியாந்தீவே
கோவுறுங்குசப்புற்சார்ந்துகுலவியகுசத்தீவாமால். ௪௮

கிரிகண்மிக்குளதுசெய்யாநிரவுஞ்சமென்னுந்தீவே
விரிதருமடைகொடேக்குவிருக்கஞ்சேர்சாகத்தீவே
வரிகொள்வணடினஞ்சூழ்சோலைவாவபுட்பகமாந்தீவே
தெரிதருமிவ்வேழ்தீவிற்செல்லுறுநதிகள்சொல்வாம். ௪௯

தாம்பிரபருணிவைகைகவுண்டலமரிதப்கசிரத்தி
யோம்புறச்சிருதமாலையுயர்வைகாயநிகாவேரி
யேம்பலில்பெண்ணைபாலாரினியசக்கரவரத்தை
தேம்படுதுங்கபத்திசிறப்புறுவேணியாறே. ௫0

திருவீமாநதிநற்கோதாவிரிநிருவந்தைசிர்சா
ணிருமதைபருட்டுணிக்கோணீசகுந்நாவிசுரத்தோடு
விரவைவேதசிநன்மிருதிமென்றிரிசாமைகுல்லை
யிருடிகௌசிகைசுகோணையிலங்குஞ்சாநவிதைவந்தை. ௫௧

சரயுநீளயமுனைசந்திரவதைநற்சதமாலைசசீர்
விசிரசுவதிசந்துருவையொடுவிசுவைசெம்மை
தருமருத்து ரதைசாற்றும் விசிரணி யுடனேதக்க
சரணியினுறும்பஃறீர்த்தஞ்சாற்றுநற்கரிதுமன்னே. ௫௨

---

*-இறலி-இத்திமரம்.

இவ்வரைதனின்மாலிங்கரெழினலம்விளங்குகின்ற
செவ்வியின்மலைகளெண்ணிலாதனசிறப்புவாய்ப்பப்
பௌவநீராடைசூழுந்தரணியிற்பல்லிடத்து
மெவ்வநீத்தின்பநல்குமபடியினிதிருப்பதுண்டால். ருங

ஈதலான்மேனுட்சென்றயுகங்களிலிருநிலத்தி
னீதிமிக்குள்ளதென்னுநிகழ்த்தினுங்கலியுகத்தின்
மாதவநதருமந்தானமறைநெறிமுதலியாவும்
போதுறுமபடியெஞ்ஞான்றும்பொருந்துமென்றுரைப்பர்மேலோர்.

வேதநன்முறையாற்சொற்றவிதிப்படிமகங்களாற்றி
நீதிதேர்நிமிமன்னுக்குநெறியுறுமமரர்நித்த
ரேதந்தீர்கலியுகத்திலிவ்வுலகிலவணெய்தக்
காதல்கொள்வார்களென்னுநியமாகக்கூறினுரால். ருரு

பின்னுமம்முனிவர்சொல்வார்பெருநிலவரைப்பினுள்ளும்
பொன்னிறப்பொருளையென்னப்புகலிருநதிகள்சூழு
மங்கிலநாப்பட்பத்தியறிவொழுக்கத்தினமிக்கோர்
மன்னுவரென்னச்சொன்னமறைநெறிமொழியுமுண்டால். ருசா

ஆதலாற் கலியுகத்தி லரமெங்குமலிந்து தோன்றுந்
தீதறு வஞ்சநெஞ்சர் சிற்சிலருளரென் றாலும்
பேதுறு மிருளிலாதுவிளக கொளிபேணு தற்றே
யீதலு மிரப்போரினறே லிலதெனவிசைக்கு மாறே. ருஎ

வேறு.

எக்காலமுமெந்தயுகங் களினுந்
தக்காருயர் விண்பதஞ் சார்குவரான்
மிக்காகிய பாவம்விளைப் பவர்கள்
சிக்கார் நரகத்திடை சேர்குவரே. ருஅ

காரார்விட மன்னகடுஞ் சொலரை
நீராருலகோ ரிவணிந்தை சொலத்
தீராத துயர்க்கடல் சேர்ந்தெவரும்
பாராதவெம் பாழ்நர கெய்துவரே. ருகூ

பொல்லாதவர் நன்மை பொருந்துவது
நல்லோர்கள் கொடுந்துயர் நண்ணுவதுந்
தொல்லார் வினையால்வரினுந் தொடர்பாய்
நில்லாதெனநீ டுணர்வோர் மொழிவர். சூ0

என்றின்னன டன்னுமெழிற் குருவின்
பொன்றுன்னு மலர்க்கழல் போற்றிசெயா
வென்றிங்கிலன் யாவர்விரும் புறுநாட்
குன்றுங் கெறிபாவது கூறுமெனு. ௬௧

வேறு.

திருவுளமகிழ்ந்து சுந்தரானந்தர் செப்புவாரிக்கலி யுகத்தின்
பருவமுழுதிருங் காலனுசாரப் பதகராமனுமிதர் புவியை
மருவியாணுளில் வருணமுமிலராய் மனைநெறிசாத்திர முறைக
ளிருளறப்புராண நெறிகளுமிலரா யறனகற்றிடப்பவ ரடர்வர். ௬௨

இருளுறுமனத்தராகி யேமனைங்களிய னெறிப்படிசெய்வ திலதா,
யரிவையர்பலரை யணைந்திடவதுவு மறமெனச்சம்மத மாவர், தெரித
ரும்பருவ மெட்டினிற்சிசுவைப் பயந்திடச்செகர்தனி னரர்க்குப், பரு
வமுப்பதுநற் புருடவாயுளு மபொய் பலங்கொலைவிருத்தியா மெனவும்.

கலர்திரளுவரி மணலினுமதிகங் கலித்திடக் காசினிமடந்தை, ந
லிவுறுதருளாற்காத்திடவரிவாழ்நாரண னகப்பியினுருவாய்த், தலமதிற்
கலரை வதைந்துயரறத்தைத் தளிர்த்திடப்புரிகுவ னெனமுன், னல
மிகுத்தவனுக் கிவையெலாந் திருவினுயகனேயுரைத் தனனுல். ௬௪

எந்தநாட்டனினுங்க டரியினனனோரிடறித் தவலிலாயப்புரப்பன்
முந்துபொற்கணனேயேனமாய் முடித்தானமுரண்மிகுமிரணியநாமன்
சிந்தையுட்கலங்கநரவரியுருவாய்ச்சிதைத்தன கம்பத்தோனுடனே
மந்தரகிரிக்குங்கர்கும்பகருணன்றனையுமிராமனுய்மடித்தான. ௬௫

மாமனுங்கஞ்சன்பவுண்டரன்றந்தவக்கிரன்சிந்துநாட்டரசன்
சேமமினரகன்முதற்பலர்களையுந்திறன்மிகுகண்ணனுய்மடித்துங்
காமனைப்படந்தோன்காமன்சேய்க்குலந்துகவிவிமேவாநாப்பொறிகடவி
ப்பூமனுமரசர்திரளொடுபலரைப்பொருகளத்திடைமடித்தனனுல். ௬௬

லேலையினெழுந்துமதுகயிட்வரைவீட்டிவிண்ணவர்துயர்தவிர்ந்தான்
மூலமென்றழைத்தகரிக்கருள் புரிந்தான்முன மகரேசன்கொண்மறை
யைச், சேலுருவாகித்திசைமுகற்களித்தான்செகதலமுழுதுமுண்டுமிழு
நீலநன்னிறத்தோன் செயலனைத்தினையு நிகழ்ந்து வதனந்தற்குமரிதே.

வேறு.

புவியினுயகனுதவிர்புவிமகடனக்கோ
ரவமுறுதுகாத்தருள்வதுமவன்பரமவனுந்

தவம்புரிந்துமாதவனெனப்பெயர்கொடன்மையினும்
பவமகற்றுநற்றவமின்றேற்பலிப்பதொன்றின்றால். ௬௮

சிறந்தமெய்த்தவமென்னினுஞ்செகதலமதனி
லறந்தவத்தினுக்கதிகமாமவற்றுளுமன்னார்
துறந்தவர்க்குமற்றெவர்க்குநற்சுகமுறவளித்தோர்
பிறந்ததிற்பலனுளதெனவுரைப்பராற்பெரியோர். ௬௯

என்னக்கூறியவாறெலாமினிதுறக்கேட்டுத்
தன்னகத்தினின்மகிழ்வுறத்தேசிகர்த்தாழ்ந்து
நன்னலத்துளீர்யோகத்தின்கூறுவிதங்க
ளின்னதென்றெனக்கருளுவீரெனவியந்திசைப்பார். ௭௰

கலிபுகவியற்படலமுற்றிற்று.

ஆக படலம்-௧௧ க்கு திருவிருத்தம் ௫௬௨.

# யோகமுறைப்படலம்.

நிலம்புகழ்சுந்தரமுத்தியோகமுறைதனைவிரித்துநிகழ்த்துங்காலை
வலந்தருவதியமமுதலெட்டாகுமவ்வியமம்வகுத்துக்கூறி
னலந்திகழ்சத்தியத்துடனேயலைவரையகழுந்துரையாறுநவைகணீங்கித்
துலங்குபிரமனையடையாசசுத்தமுடனளித்தமுந்தூயமனமையயோதல். ௧

பொய்யுரையாதிடர்கள்பல வாறுறவை பொறுத்துவெறுப்பின்
றினாளுந், துய்யமனத்தனிலுறுசஞ்சலமகற்றி யெவ்வுயிர்க்குந்துயர்செய்
யாமன்மையகலுங்கருணையுடனவிலக்குநன்மாதாகளைபிற்றின்பனீத்துக்
கைதவம்வஞ்சனையகற்றலாகுமெனவுணர்வுடையோர்கழறுவாரால். ௨

தவமகிழ்ச்சியுண்மையொடுதானமிகுபூசைகளுந்தயவாய்ச்செய்த
னவையகனன்னூல்கேட்டலிசைபகணமதிநோன்புநனகிளுற்றல்
பவமகனன்னியமமதாமிந்திரியமொடுக்கறவெம்பற்றுநீத்த
லவனிபுகழ்சங்யாசங்காமாதியொழிந்தலுயரறிஞருமே. ௩

இவ்வகையவெண்முறைக்குமிசைத்தவிதம்புரிந்துபினராதனங்கள்
செவ்வியமும்மூன்றுகுஞ்சோத்திரங்கோமுகம்பதுமம்வீரஞ்சிங்கம்

கௌவையகல்பத்திரனன்முத்தமயூரஞ்சுகமாங்கனிவாற்சிந்தை [ரால்
யொவ்வியியற்றுறுவிதமுமவிரித்துரைப்பாங்கேளெனப்பின்விளம்புவா

ஊருவுக்குமுழந்தாட்குநடுவாகவுள்ளங்காலிரண்டுமேற்றிச்
சீருடனேயிருமாந்துவீற்றிருத்தல்சோத்திரஞ்செஞ்சகனப்பக்கத்
தாருமிருகாற்பரடுயாறிய நன்பெருவிரல்கைமாறிப்பற்றி
நேரிலதுவளைந்துறமேல்விசித்திழுந்தல்கோமுகத்தினீர்மையாமால். ௬

இரண்டுதுடைகளினமீதுமிரண்டுளங்காலேமாற்றியேற்றிவைத்த
றெருண்டவர்கள்பதுமமெனச்செப்புவரால்வலதுபுறத்துடையின்மீது
முரண்கொளிடக்காற்பறட்டைசாந்தியேமாப்படைநன்மொழியுமவீர
மரண்டருமமெனமகிழுமருண்மிகுசுந்தரவினிநாமறையக்கேண்மோ. ௭

பீசக்கீழ்ச்சீவினிபாற்காலிரண்டின்பரடுகளும்பிறங்கச்சேர்த்தி
யாசையுடனிடமுழங்கைசானுறவைத்தங்குலியைவிரித்துநேரே
நாசிநுனிபார்த்திருத்தல்சிங்கமெனநவிலுவாகளப்பீசக்கீழ்ப்
பேசுறுசீவினிப்புறத்துப்பரடிரணடுமபிடித்தசையாதிருத்தல்பத்ரம். ௮

இடப்பரட்டைசசீவினிபாலழுந்தவைந்தேயிசையாகவலதுகாலின்
றிடப்பரட்டையதன்கீழாய்சசேர்த்திருத்தன் முத்தமிருமுழங்கைசேர
மடக்கியுந்திப்புறத்தழுந்தவைந்திருகைதரையூன்றிவன்மையாக
முடக்கமின்றிக்காணீட்டித்தலைநிமிர்தனமொழிகுவாமயூரமென்றே. ௯

அகமகிழத்தறுவினுக்கெவ்வாறிருக்கிற்சுகமாமோவவ்வாறுகச்
செகமதனிலிருப்பதுநற்சுகமெனவேசெப்புவராதனங்களின்ன
வகைபெறுமொன்பதுமாகுமவாசிநிலைத்துறமேலோர்வகுத்தவாறே
யிகலில்பிராணாயாமவிதியையுநீயுணருமாறியம்புவோமால். ௰

வேறு.

உந்தியின்கீழுதிக்குமோர்நாடிதா
னந்தநாடியின்கண்ணுதியாநிற்கு
மிந்தநாடியெழுபத்தீராயிரம்
வந்துகீழ்நின்றுமேல்வளர்ந்தோங்குமால. ௰

அந்தவாசிமேனுபிமருங்கமைந்
துந்துநேமியெனவுடன்முற்றுலாய்
வந்துசூழ்ந்துநிறைவுறுமற்றவை
முந்துறுந்தசவாதத்தின்மூளுமால். ௰௧

அன்னநாடிதசத்திற்குமாம்பெயர்
துன்னிடைப்பிங்கலையுஞ்சுழிமுனை

மன்னுகாந்தாரி யத்திமன்சிங்குவை
தன்னலம்புடை யார்குருசங்கினி. ௰௨

இனையவாந்தச நாடியிவற்றினுண்
முனையுளாப்பெறு நாடிகணமூன்றுமே
புனைநலந்தரு மூக்கின்புழைவழி
தனைநிகர்த்திடா மேன்மையிற்சாருமால். ௰௩

இந்தகைப்பெறு நாடியெல்லாமுணாந
துத்தமத்தி னுடலின்வெயிலகாற்றுறு
மெய்த்தரைக்கணின் மேவியிருந்ததிற்
சுத்தமான தனுவொடுதோன்றியே. ௰௪

பொய்த்தகவில்லா நியாசபுரிந்துபின்
வைதருமெல்லனை மீதிலவரிசையா
லுய்த்துநற்குசப் புல்லொடுமுழக்காக்கிமீ
மெய்த்தோலை விரித்ததிலாவைகியே. ௰௫

அத்திமாமுகத் தணலைப்போற்றிசெய
துத்தமக்குரு வின்பதமுன்னரியே
சித்துமொத்துக் கிழக்குந்திசையணநே
லுத்தரத்திகை நோக்கியுநேயரோ. ௰௬

பழக்கவாதனத் தொன்றும்பகாந்திடா
திழுக்கமின்றித் தனுவலமெய்துவே
துழந்தலாகியித் தூலமசைவுறு
விழிந்துணைச்சுழ லாதுவிழித்துமே. ௰௭

புருவநன்னடு மீதுபொருந்துற
வுருகநோக்கி யமுதமுகுபதாய்
விரிகொணுசிறற் சாக்கிரமேவிவே
ஞெருவிடத்து முறுதுற்றுநோக்கியே, ௰௮

வேறு,

இடைநாடியினுல்வாயுவை யீர்த்தேயுதரத்தைத்
திடமாகவேபூரித் தெழில்சிறக்கும் வகைபுரிந்தே
வுடனுப்பணினழன் மேவுறவுய்த்தவ் வழறனினே
யடைவானவிந்துடன் கூடுறவதி ரேசகம்புரிந்தே. ௰௯

மனும்பிங்கலையா லுற்றனவாசி தனைவிடுத்தே
பினும்பிங்கலையால் வாசியை யுதரத்திடைபெருக்கி

யுனுாலலிடையான் மெல்லெனவுட லின்புறம்போக்கிப்
பினுமெல்லென விடையாலுடல்பெறுங் காற்றமைப்பதுவே. ௨௰

என்றிவ்வகை யொருபோதினிலிரு மூன்றுறவியற்றி
னன்றிவ்வகைநா ளொன்றினுமுக்கா லென்றிநாற்கா
லொன்றம்வகைபுரிந்தா னலவுயர்நாடிசித்தியதாந்
தன்றேகமும்வயநாதமுந் தழைக்குஞ்சுடர்சொலிக்கும். ௨௧

## வேறு.

பண்ணவர்களுரைநாடுஞ் செயலுந்தோன்றும் பண்புடையநாடிசித்தியானுற்பின்னே, யெண்ணிருமாத்திரையளவின்வாசிதன்னையிடையினுலுடல்பூரித்திடவேறாரு, மண்ணறிருமந்திரமான்மந்திரந்தானுகிலுந்தன்னுளத்திருத்தியதற்குப்பின்னர்த், தண்ணுறுறும்பிங்கலையான்முப்பத்திரண்டுமாத்திரையிற் சாரந்துமெல்லப்போகச்செய்தே. ௨௨

சேரும்பிராணுயாமமெனவுமேலாய்ச் செப்புகின்றகும்பகமென்றிருவிதத்துட், பூரகரிரேசகத்திற்பொருந்தாநிற்கும் கும்பகமிவ்விரண்டுடனும்பொருந்தாதாகுஞ், சீரியரும்பகந்தனக்குப்பூரகந்தான்செப்பருமிரேசகமுஞ்சினக்கலாகும், பாரிடைநின்றெழுதலுடனுடல் கம்பித்தல்பயிறல் வெயர்வருமபலிப்பாற்பிரத்யாகாரம். ௨௩

பேரும்விடயத்தகஞ்செலாமற்பற்றும் பின்னுந்தாரணைமனவியாபாரத்திற், சாருதலுமகற்றியுநற் றியானத்தாரும் தருமாறுதாரந் தேயங்கடேர்த, னேருறுமாறுதாரமூலாதாரமுதலாகநிகழ்த்துவரம்மூலாதாரமாருமிலிங்கத்தின்கீழ்க்குதத்தின் மேலாயாகியமுக்கோண வடிவமைவதாகும். ௨௪

இத்தகையமூலா தாரத்துண்மேவியிருப்பது குண்டலினிசத்திபடங்கொளுகை, மொத்தியமுமண்டலமிட்டுறையுமாங்கணுறைதெய்வமாவதுகணேசனுகு, மெய்த்தசுவாதிட்டானநாலுகோணமேவியேவிலிங்கமூலத்தினண்ணு, மத்தகையநற்றலத்துக் கதிதெய்வந்தானரி மலருந்தியினுதித்தபிரமனுமே. ௨௫

உந்தியிடைமணிபூரகமுமைங்கோணத்தொளிருமதற்குரியதெய்வந்திருமாலாகு, மிந்துவட்டமதிற்பாதிமார்பகத்தினிலங்குமனுகதந்தெய்வமீசனுகுங், கந்தரத்தின் மண்டிலமாய் விசுத்திமேவுங் கடவுளதற்குரியதுநற்சிவான்மாவா, நந்தலில்லாக்கினைபுருவநடுவிலாறுகோணமுறநணுந்தெய்வம்பரமான்வே. ௨௬

திடமிகுஞ்சமாதியினிவ்வாறுதாரஞ்சிக் கெனவேகடந்ததற்குமே லாய்ச்சென்று, கடவுடிருநடனசபைபிரமானந்தங்காறும்போயத் தேய ந்தன்னின்மோதி, யடர்கதலிமுகையொப்பாய் முகங்கவிழ்ந்த வாயிரந் தோடலர்ந்தநறுமலரின்மீது, படர்சோதிவடிவாகவிளங்கு மொன்றைப் பத்தியுடனேவணங்கிப் பணிதல்செய்தே. உஎ

மாசிலாச்சாக்கரத்தின் மதியந்தன்னின் வயங்குமாகுஞ்சனவக்கி னிபீசத்தாற், பேசுறுமூலாக்கினியை யெழுப்பிநாடி பிறக்கும்வலையத் தினையும்பேதித்தப்பா, லாசுறுவகைமதியை யிளக்கியாங்க ணமிர்தமி டையற்றிடா துருக்குமாறு, தேசுறவேயியற்றியபின் னமிர்தவெள்ளந் தேக்குறவுண்டகக்களிப்புச் செய்தலாமே. உஅ

இவ்வகையவியமா தியங்கமெட்டுமிசைவுபெற வியற்றியப்பா லங் கியோகத், தவ்வகையங்கங்களிற் றோன்றொளிகள்யாவு மருக்கனெதி ருடுக்களவி றென்னமடக்க, மெய்வகையதன்னொளியே யிடங்கடோறு மேவுறுநல்லொளியாக விளங்குமாறு, செவ்விதிற்பாவித் திருத்தலாகு மென்றுஞ்சிறந்தவதன் பலனுமினிச்செப்பக் கேண்மோ. உகூ

## வேறு.

எத்துணைப் பிணியும்வந் தெய்த லில்லது
சித்திகள் யாவையுஞ் சேர்க்க வல்லது
முத்திரத் துலகினு முடுக லானது
பத்தியிற் பலதொழில் பயில வல்லது. ௩0

மூவரும் புரிதொழின் முடிக்க லானது
தேவர்தஞ் செயலெலாந் தெரிக்க லானது
தாவரும் பிறவியங் கடலுந் தாண்டுதற்
காவதென் றுரைப்பர்க ளதுவலா தரோ. ௩௧

## சாங்கிய முறை.

சாங்கிய முணர்ந்தவர் சாற்றுந் தன்மையு
மீங்குனக் குணர்வுற வியம்பக் கேட்டியாற்
பாங்குள பகுதிநல் விகுதிப் பண்பிரண்
டாங்குறை விதங்களை யறிதல் வேண்டுமால். ௩௨

முன்னியல் பகுதியின் முக்குணங் களுந்
துன்னுவ ததி னின்பதுன்ப மோகமு
மன்னுவ செகமதன் வகையிற் காரியத்
தன்னியல் காரண மின்றிச் சார்வுறு. ௩௩

பகுதியின் வடிவமே பகர்ச டங்களாம்
விகுதியே யசலமும் விளங்குஞ் சேதநம்
பகுதிபோகமு முத்தி பபந்து பாரினைத்
தகுதியிற் றருஞ் சுதந்தரம தாகியே. ௩௪

இனையன பகுதியி னியல்பின் மூலமும்
வினைதெரி யட்டகம் விகுதிமூன் றென்று
மனையது பரத்துட னன்ற சூக்குமந்
துனியுறு தூலமிம் மூன்றுஞ் சொல்வரால். ௩௫

வேறு.

மூலமிதுவாமென்ன முனைமொழியும் புரியட்டகங் கூறிற்
சீலமுயர் சத்தமே யாதியைந்துந் திகழுமனம்புந்தி
யாலமனைய வகங்காரமாகும விருதிநே காதிக்
கேலவியையும் பிரபஞ்சக்கூ றிதெனவிசைப் பார்கள். ௩௬

நிலைமையாகிவேறொன்றினின்றுதோன்றதெப்பொருட்குந்
தலைமையாகியுறும்பகுதியெனாறும்பகுதிநானாகா
துலைவிறன்மாத்திரைகளைந்தோடொத்தபுத்தியகங்காரந்
தொலைவில்பகுதியினைடபகுந்தவிகுதியாகச்சொல்வதுவே. ௩௭

தன்மாத்திரைகளைந்துமந்தக்கரணமிரண்டுபகுத்ததனின்
முன்மாத்திறந்திற்றோன்றிவருமுறைபால்விகுதியெனலாகும்
பின்மாவிகாரங்கம்மிடத்திற்பிறக்குஞ்செயலாற்பகுதியுட
னன்மாநிலத்திற்கற்றுணர்ந்தோர்விகுதியெனவுநாட்டினரால். ௩௮

பகருமகங்காரத்தின்வருமனத்தினேடிந்தியங்கள்பத்தும்
புகரிறன்மாத்திரைகளைந்தாம்பூதமைந்துமுண்டாகு
நிகரிலிவைகளிருகசமுநிகழ்த்தில்விகுதியல்லாமற்
றிகழும்பகுதியாகாவாஞ்செய்யபுருடன்வசத்தவே. ௩௯

அந்தப்புருடனென்றின்றுதொன்றுமையினலவனிடத்தில்
வந்துதோன்றலொன்றுமின்றன்மதிக்கிற்பகுதிவிகுதிமுத
னிந்தையகனின்மலனாகிநிற்கின்றவனேயேகனுமாய்ப்
பந்தமகலுமவனித்தனவனெனவும்பகர்வரால். ௪௰

ஆனபுருடனுடன்பகுதியனாதியாகுமப்பகுப்பாற்
றானுண்டாகுங்காரணமுந்தகுங்காரியமுங்கருத்தாவென்
றீனமின்மூன்றிற்றோன்றுமின்பதுன்பமுதலெல்லையுந்
தானன்றுணர்தற்கேதுவுடன்றக்கபுருடனுறைவனால். ௪௧

பகுதிதனினின்றதனிடையேபயிலுமூன்றுகுணங்களையு
நிகரில்புருடனுகாவனவணிகழுங்குணத்திற்பற்றிலதா
யகமுள்ளவன்றன்செயலனைத்துமறிவார்க்கிலைவெம்பிறவி
புகலுமவனையுணராதார்புவியில்யோனிதொறுஞ்செனிப்பர். சஉ

சாற்றும்பகுதிவிகுதியுடன்புருடன்றன்மையாவையுமே
யேற்றமாகப்பகுத்துணர்வோரெய்துவார்நற்கதியெனவுந்
தேற்றமுடனேபுகல்வரிதுவல்லாற்றர்க்கந்தேர்நதோர்சொன்
மாற்றம்பயின்றதத்துவமுமனைப்பாமகிழ்ந்துநீகேளாய். சங

தர்க்கமுறை.

வேறு.

திரவியங்குணநற்கன்மஞ்சோசாமானியமவிசேடம்
வருசமவாயம்வைசேடிகமெனவெழுங்குமேழிற்
றிரவியந்தன்னினொந்துபூதங்கள்காலந்திசைகு
மருவியவான்மாமிக்கமனமெனவொன்பதாமே சச

அனையதிற்பூதமைந்துக்கருட்குணமைம்பதாகும்
வினைநிகழ்காலத்தோடுதிக்கிற்குமவிளங்கும்பத்தே
துனியறுமான்மாவெட்டுக்குணங்களிற்றோன்றுமென்று
மனமுமெண்குணத்தினோர்ந்துவைகுவதாகுங்கண்டாய். சரு

ஆந்தவான் மாவிற்சீவான் மாபர மான்மாவென்று
முந்துறு மிரண்டிலிந்த வுலகியற் கியலுமிச்சைச்
சிந்தையிற் பொருந்திநிற்குஞ் சீவான்மா வெனவுநாளும்
பந்தமின் மோக்கவிச்சை யுறும்பர மான்மாவென்றும். சசு

வேறு.

சார்ந்தசமவா யமுதன்மூவகைக் காரணங்களினாற் சகத்தைமுற்று
மார்ந்தகுண மூன்றாலும்படைத்துக்காத் தழித்தேக மாகவெங்குஞ்
சேர்ந்தழிவி னித்தியமா யகண்டபரி பூரணமாய்ச் சிதைவிலன்பு [வே.
கூர்ந்தளவில் கருணையுடன் குவலயத்தைப் பரிப்பதுநற் பரமான்மா

நல்வினைக டீவினைக ளுனிலத்திற் புரிந்தவர்தஞ் செயலுக்கேற்பப்
பல்விதமா முடல்களெடுத் திகத்தினுநற் பரத்தினுமே வேறுவேறு
சொல்லரிய வினபமொடு துன்பமுமே துய்க்கின்ற பேதத்தாலே [ரால்
தொல்லியல்சீ வான்மாக்க ளெண்ணிலகோ டிகளெனவுஞ்சொல்லுவா

ஆகியபல் லுடல்களினு மணுவுருவாய் நித்தியமா யாங்காங்குற்ற
வாகுடைய மனதுமுதன் மற்றுமுள பலபகுதித் தொகைகளெல்லாந்

தாகமுடனிலக்கணவி சாரத்தா லறிந்துணருந் தன்மைதானே
யேகமாய்த் தானுருந் தத்துவமெய்ஞ் ஞானத்தி னியல்பாமென்றும்.

அன்னவித நல்லறிவாற் பொய்மையெலா மகல்வுறுமாங் கதுபோங்காலே, மன்னியவா சாதிபிலதோடம்போ மதுவொழிந்தான் மற்றுமுள்ளத், துன்னுதரு மாகருமப் பிரவிருத்தி தோடமெல்லா மோடுஞ்சென்மப், பின்னம்போ மவைகழிந்தாற் பேரிடர்கண் மூவேழும் பெயருமென்பர். ௫0

மீமாஞ்சை முறை.

அவ்வகையு லாதுபின்னு மீமாஞ்சை விதத்தினையு மருளக்கேளாய்
செவ்வையுறு கருமமொடு நித்தநைமித் தந்திகழுங் காமியம்பின்
னெவ்வமறு பிராயசித்த மெனவைந்து வினைகளினுற் சிலகோடி
யொவ்வியியற்றியவகையி னின்பதுன்ப மளவையறிந் துதவுமென்றும்.

நித்தநைமித்தியஞ் சீவனிவ்வுடலி லிருக்குமட்டுநெறியிற் செய்தாற், றுய்த்தபிராரத்தங்க டொலைந்திடும்பின் காமியத்தாற் சுவர்க்கமெய்தித், தத்துறலி லாதுசுக மனுபவிப்பர் விலக்கனைத்துந் தவிர்த்தான்மோகத், தொத்துறு பிராயசித்தஞ் சஞ்சாதிகளனைத்து மொழிக்குமென்றும். ௫௨

அனையசஞ்சி தாதிகளாம்பந்த பாசந்தனை யைங்கரு மத்தாலுந்
தனைநிகரில்கொடு நெருப்புப்புமஞ்சை யெரித்தென்னச் சாராமனீக்கி
வினையகலச் சந்ததமு மெஞ்சுறுச் சுவர்க்கமதின மேவிவாச
நனைமலர்க்கற்பகநீழ லிருக்குதன் முத்தியென மறைகணவிலுமென்றும்.

இத்தூலவினை யனைத்துங்கெட்டுச் சூக்குமவினையா யியைய மாயை
யத்தேகத் தனிற்கரத்தே யவரவர்க்கு மின்பதுன்ப மளிப்பதாகு
மெய்த்தால மிசையெருக்கள் கெட்டுநிலன் மேவியதின் விளைக்கலான
வித்தூற்றமிகப்பைங்கூழினை வளர்த்திவிளைவிக்கும்விதம்போலென்றே

# வேதாந்தமுறைப்படலம்.

சைவசித்தாந்தமுறை.

வேறு.

இன்னவாறுமீமாஞ்சையியம்புவ
துன்னுசைவசித்தாந்திகள்சொன்முறை
தன்னிலுஞ்சிலசாற்றுதுங்கேளினுப்
பின்னருஞ்சுந்தரானந்தர் பேசுவார். ௫௫

### வேறு.

நீங்காதத[illegible]த்தினவ்வியத்தங்குணமூன்றுநிகழுமஃதிற்
பாங்கி[illegible]சித்தமதிற்புத்தியதிலகங்காரம்பரித்துதோன்ற
வாங்காரசசைதன்யவதிகாரிபூதாதியனைத்துமாகுந்
தீங்கிலான்மாமனம்ஞானேந்திய்ம்வைகாரியிடைசெறிவதாமே. ருசு

சித்தமொடுபுத்தியகங்காரமனநான்குமுயர்செவிவாய்கண்மூக்
கொத்தவைந்தும்வாக்கொடுபாதமபாணிபாயுருவோடுபத்தமைந்துஞ்
சத்தம்பரிசமுருவமிரசங்கந்தமைந்துமண்காற்றனீர்விண்ணைந்
தித்தகையதத்துவங்களறுநான்குமசுத்தமெனவியம்புவாரால். ருஎ

ஆற்றின்வருநீர்போலவிடையறாதனுதியாய்ச்சடங்கடோறுந்
தோற்றுதற்குநிலைப்பதற்குங்காரணமாயுடல்கடோறுந்தொடர்ந்தான்
னேற்றமதிமயக்காகப்பலவிதமாயின்றுன்பமிசைத்துவைய [மாவி
மாற்றுநாளமமாயைவயினடங்குமிதுகன்மமலமாமெனபர். ருஅ

மந்திரங்களெழுகோடிபதங்களைன்குடன்மறையையுணர்வோர்சொற்ற
தந்திரங்களைந்துமுயர்தத்துவங்கடோன்றுமாற்றுறுந்தலமீரேழு
நந்தலிலாக்கலைகளைந்துமாபுவனமெல்லாமகத்திணுறுநகையினோரி
னந்தமிலாதாகிமற்றுமவற்றினுக்குமொன்றுக்கொன்றதிகமாமே.

அன்னவைகளொன்றினொன்றுவியாபித்தியுறும்பாந்தமெல்லாமகன்றுமேலாய்ச், சொரூபனதிரோதானசத்திதன்வயத்திற்சார்ந்திடவேதொன்றுணுமன்று, ணைவனடனங்கொண்டருளுஞ்சச்சிதானந்தமயமான நம்பன், றன்னிகரில்லாதவின்பமருளவும்பரமதனிற்சாருவரென்பர்.

### வேதாந்தமுறை.

இத்தகையயோகமுதல்யாவையுமேமறுத்ததனமேலிசைக்கவார்ந்த
வித்தகவேதாந்தமுறைவிசும்பிலருவாயுருவாய்விகற்பமின்றாய்ச
சத்தாகியகண்டபரிபூரணமாயந்திகழொளியாந்தற்பரமாயெங்கும்
வித்தாகிநின்மலமாய்நித்தமுமாய்விளங்குவதுபிரமமென்றும். சுக

மதியமொன்றுபலகடத்தினிரும்புனலுட்டனதுவிம்பமருவுமாபோல்
விதிமுறையிற்சகமுழுதுமேவுகின்றவுடல்கடோறும்விளங்கியாங்கட்
பதித்தொழுகும்பொறிகளினன்மதித்தறிதற்கரிதாகும்பண்பினோர்ந்து
சதியகலுங்காட்சிமுதற்பிரமாணங்களுமுணராத்தன்மைத்தாமே. சுஉ

மாலையொடுபழுதைவிடவரவெனவேபயங்கொளுமம்மயக்கமெல்லாங்
காலையவிர்கதிரெழலுங்கண்டபணிபொய்யாகிப்பழுதும்வாச

மாலைநிசமாவதுபோன்மாநிலத்தினவித்தைமெய்யாமயக்கந்தீர்ந்தான்
மேலைவருபிறவிமயக்ககன்றிடவிவ்வுலகுபொய்யாய்விளங்குமன்றும்.

அப்பிரமந்தனின்வானந்தோன்றுமதிற்காற்றோன்றுமக்காறன்னிற்
செப்பரியவழறோன்றுமாலவற்றுட்புனறோன்றுஞ்சிறப்பான்மிக்க
வப்புவினிற்செகந்தோன்றுமதிற்பயிராய்ப்பயிரினமுதந்தோன்று [ய்
மொப்பிலதிற்றுவக்காதிதாதனைந்துந்தோன்றுமெனவுரைப்பர்கண்டா

அத்தாதுக்களினைகுழுவினிகழுமன்னகோசமயமதனின்மல்கிச்
சித்தானபிராணமயந்தோன்றுமதினமனோமயந்தான்செனிக்குமஃதி
னைத்துயருமவிஞ்ஞானமயந்தோன்றுமாங்கவற்றினுயர்வான்மிக்க
பத்திமிகுமானந்தமயகோசந்தோன்றுமெனப்பகர்வல்லோர் சுரு

தன்னிடந்துத்தோன்றியவானவாயுமுதனைங்கினையுந்துதானே
மன்னியுளுமபுறத்துநிறைந்திருப்பதனைமானவுயர்பிரமந்தனபான்
முன்னுதித்தவைநகோசவுருவுடல்கடொறுமுறைவுறாமற் [மாறே.
றுன்னியுளுமபுறத்துமெங்குநிறைந்தியலுமெனவுணர்ந்தோர் சொல்லு

நீடொளிகொண்மதிகடங்கடொறுநின்றாற்போற்பிரமநிறைந்துற்
றாலுஞ், சாடிகுடமுடையவயந்தன்கெடுவதலதுவிமபந்தாழ்வுறாமற்,
பீடுடைத்தாய்விளங்குமன்னபெற்றியேசடநசித்தல்பெறுவதல்லாற், கூ-
டியிருந்தனவெனினுமபிரமமொன்றுங்குறைவிலதாய்விளங்குமென்றே

வேறு.

பற்பல்விதமாயொருகோவைபயிற்றுங்காலையாங்காங்கே
பற்பல்விதத்துமொருநூலேபயிலுமதுபோற்கோசவுருப்
பற்பல்விதமாகையிற்பரமும்பற்பலவிதம்போனிற்குநின்று
பற்பல்விதவைங்கோசதன்மமபற்றுமதிற்றன்பற்றுதால். சுஅ

செய்யுந்தொழிலாற்பலநாமஞ்சேர்ந்துபோகபோக்கியத்தி
னுய்யுநனவுகனவினுடனுறுநற்சுழுத்திதுரியமதி
னெயதுமிவற்றிற்குறுங்காரணமீரேழொடுநான்கெனுமிவைக
ளையமகலுங்காலையெல்லாமழியக்கதியினமர்வாரே. சுகூ

இன்னபலவாறிசைத்தவருமீதலாமல்வெவ்வேறு
பின்னும்பலவாறிசைப்பவரும்பிராணமயத்துக்காதார
மன்னமயமேயென்பரிதாலாங்காரியகாரணமனைத்து
மன்னமிலதேற்பிராணமயமகலுமென்பரான்றோரே. எய

ஆதலாலேயனதானத்ததிகமுலகினில்லையென
வோதுமுறைசுந்தரமூர்த்தியுளத்துட்பதித்துத்தேசிகர்தம்
பாதமலரிற்பணிந்துசித்திபலவுங்கூறவேண்டுமெனக்
காதலுடனேகேட்டியெனத்தவத்திற்சிறந்தோர்கழறினர். எக

## இருபத்துமூன்றுசித்துக்களின்விதம்.

### வேறு.

அணிமைமிகுமகிமையுடனகிமைகரிமாருங்கரிமை யீசத்துவம் வசித்துவம்பின், தணிவிலபிராத்தியும் பிரகாமியமுமட்டசித்தியிவை யாஞ்சாற்றுநூறுமிந்வம், பணிகொண்மனோசெபங்காமரூபந்தோடும்ப ரகாயப்பிரவேசமியல்சங்கற்பம், மிணையிலாச்சுவசுந்தவிருந்தியாக்னையெழின்மிகுந்தகிரீடானுதெரிசனமமே. எஉ

சீர்மிகுமப்பிரதிகதாகதியுந்தூரசிரவணமிப்பந்தூமியோகிகட்காமற்று, நேரிறிரிகாலலக்கினத்துவமபிசரிகழுமபரத்துவந்துவத்வசித்தி,பார்புகழும்பரர்செயமாந்நிருதிமேலும்பகாருடசகிசரியாதித்தம்பசித்தி, தேர்பரிசித்தாதியவிக்கினந்தையென்னுசசெப்புமிவை யிருபந்துமூன்றதாமே. எங

தக்கவிவைசெய்குணங்கள்பகரிலண்டந்தரணியெங்குஞ்சார்விக்குமணிமைசித்தி, மிக்கபுவிதன்னினமகாமூர்த்தியென்னவிளங்குறவேசெயுமகிமையென்னுஞ்சித்தி, தொக்கபகிரண்டமெல்லாமணுரூபததாற்றோன்றியறிதரசசெயுமாலகிமைசித்தி, இக்கனேத்தும்புகழவுயரானந்தத்திறசோத்தியெங்குமிருக்கவைக்குங்கரிமைசித்தி எச

அரியபுவிவிண்ணுறைவோர்வினைவையெல்லா மறிவிக்குமீசத்துவமாகுஞ்சித்தி,பொருள்பலவுஞ்சுவையுறுபதார்த்தத்தோடும் போதரவேயளிக்கும்வசித்துவமாஞ்சித்தி, தரணியுறைவோரமனமிந்தியங்களெல்லாந்தானுணர்த்தவல்லதுபிராார்த்தசித்தி, வருபவர்கள்புகன்மொழிகள்செயல்களன்னார்மனமறிவிக்கும்பிரகாமியமாஞ்சித்தி. எரு

இன்னனவாமட்டசித்திவிதங்கள்சொன்னோ மினியோகசித்திபத்துமியம்பக்கேணீ, துன்னுபசிதாகமுடலவெயர்த்திடாமற்றுலங்கவருள்வதுநூறுமகத்வசித்தி, பினனுமனஞ்சென்றவிட மெல்லாஞ் செல்லும்பெற்றியருளுவதுமனோசெபமாஞ்சித்தி, கனகத்தினினைத்தவுருவொடுத்துந்தன்மையருள்வதுகாமரூபசித்தி. எசா

பன்னுதமதுடலைவிட்டுப்பரகாயத்தும்பரவும்பரகாயபிரவேசசித்தி, யுன்னும்பல பொருளினையுந் தினமுமாக்க னுதவுமிகு சிறபபுடைச்சங்கற்பசித்தி, பின்னமிலாதுலகிலென்றுமிறந்திடாதபெற்றிதருஞ்சுவசந்தவிருத்திசித்தி, யன்னவர்கேட்பனவெவருமில்லையென்னுதன்புடனேதரச்செயுமாககினையாஞ்சித்தி. எஎ

விண்ணவர்கள் கலவிமுதலாயவெல்லாம்விளக்குங்கிரீடானுதெரிசனமாஞ்சித்தி, மண்ணவர்கடேவர்கண்மற்றெவர்க்குமேலாம்வயந்தருமப்பிரதிகதாகதியாஞ்சித்தி, யெண்ணிறந்தோர்புகன்மொழியுஞ்செவியினேற்பவிசைப்பதூரந்றாரசிரவணமாஞ்சித்தி, பண்ணமருமொழியாயீதலதுகுத்ரபஞ்சசித்திவிதத்தினையும்பகரக்கேண்மோ. எஅ

எதிர்காலநிகழ்கால பிறந்தகால மெனுந்திரிகாலத்தினுறுமியல்பியாவு, மதியாலேயுணர்ந்துவினைவுவர்க்குக்கூற வருந்திரிகாலக்கினதத்துமாஞ்சித்தி,யுகதிகிளர்ந்திடினும்வடவனலு மறு லுமுயருவெட்புச்சீதனத்துக்கொல்காதாகி, யிதமுடனேயவற்றினுளுமெலிவுறாமலிருத்துமபரத்துவந்துவத்வசித்தி. எகூ

எவர்க்கேனும்வெற்றிபெறக் கருதினவ்வாறிசைப்பதுவேபரர்கள் செயமாகுஞ்சித்தி, யவனிதனிற்பலர்களதிசயிப்பநீரிலக்கினியிற் றரிப்பதுதம்பனமாஞ்சித்தி, தவர்களைப்போலெவர்மனமுங்கனியப்பேசித்தன்வசஞ்செய்வதுபரிசித்தாதியாகு, மிவைகளெலாநற்பதவி முயலுவோர்கட்கிடையூறென்றறியுரைத்தவியல்புகண்டாய். அய

எத்துணையவினைகண்முயல்வோர்க்காறுலுமினியவுயிருதவிபெறுமுடல்கொண்டன்றோ, வத்துணையவுயிர்க்குதவியனமேயாலுலதற்குமேற்றவமியோகம்விரதமியாதே, யிந்தரையிறபினும்பிறனில் வேட்கைவீழாதியற்றுவதேநற்றவமாமென்னக்கூறு முத்தரடித்துணை வணங்கியதனைநன்றாய்மொழிகவெனநற்றவருமொழிவார்மன்னே. அக

வேதாந்தமுறைப்படல-முற்றிற்று.

——(*)(*)(*)(*)——

ஆ படலம் கஉ க்கு திருவிருத்தம் சுசஙு.

சிவமயம்.

# பிறனில்விழையாமைகூறியபடலம்.

நன்னலஞ்செறிசுந் தரநாரிகண்
தன்னிலவாழுந் தருதியுமோர்க்கொ
மின்னல்கூர்பிறரிற்சருபாமையே
யுன்னுநல்லறமெனவுரைப்பரால். க

சிறந்தமர்கொருவன்புணர்தேவியென்
றறிந்துமற்றவட்காமங்கொளப்பெறு
மிறந்தவர்க்கிணையன்றிப்பிறனவ
பிறந்திறந்துழலப்பெற்றியராவரே. உ

எனைத்துணைச்செல்வமெய்திவெமேபிற
மனைக்கண்வேட்கைவசத்துறவாரெனிற்
றினைத்துணைத்தெறுமாதேவரிலராமென
வனைத்துமோருமறிஞருரைப்பரால். ௩

அன்னமன்னவரின்னலுறும்படுவான்
மன்னுவார்கண்மருவிநடேரிடா
துன்னுந்தீவினையாமுமெய்துமென்
றுன்னுநல்லுணர்வோர்களிகழ்ப்பதே ௪

அட்டைபற்றுவதேபோலவரிவையா
நட்டலென்பதைநம்புனலுநாடியே
கிட்டிலாருயிர்போக்கரிகாச்சீரவா
பட்டழுந்துவரியைப்பாட்டினே. ௫

பின்னுமின்னபெருமைமீதிலி
வன்னமங்கையர்காதலினாற்றவர்
பன்னருந்துயர்பட்டவர்மாணடவ
ரின்னரென்னவிசைக்கவொண்ணுதரோ. ௬

தேவர்பூமனரம்பையர்செய்நடம்
மாவலோடுமமைவுறநோக்குங்கா
முவிலாவவன்றன்குருவின்பத
சேவையின்றித்தியங்கினனுமரோ. ௭

அளகைமன்சுதனானகூபர
னிளநன்னெடுமேந்திழையாருடன்
குளனிருங்கரையிற்குணமின்றிநின்
றளிவருந்தவனான்மரமாகினார். அ

மாதவன்றிருவுருவில்வாறமின்
காதலான்மெய்கலங்கிநற்பூருவென்
றோதும்வேந்தனகபாலவோடேந்தியே
பூதலத்திரப்பான்புகுந்தானரோ. கூ

காதிகாதலங்காவிடையெய்தியாங்
கோதருந்தவஞ்செய்யவுருப்பசி
மாதுநோவரக்கண்டுமதன்கணைக
கேதுவாய்த்தவந்தீடழிவுற்றனன். ௰

வேறு.

மின்னுங்கயிலைவரையெடுத்தவெய்யோன்கிளைஞருடன்மாண்டான்
பொன்னினுலகாளிந்திரனும்புகலுமெய்யனைத்துங்கணானான்
றன்னைநிகரில்லாநகுடன்சாப்பமாகிவனஞ்சார்ந்தான்
கன்னற்சொலிரேணுகைகயினாற்காந்தவீரியனுமாண்டான். கக

முன்னாளயனோர்சிரமிழந்தான்முரட்சுந்தோபசுந்தருமோர்
மின்னான்மடிந்தார்சம்பரனுமிரதியாலால்வீவுற்றான்
றன்னேரில்லாவெனறிபுனைசயந்தனுமோர்கண்ணிழந்தா
னென்னேபெண்ணாலிழிவுற்றோரிந்தவுலகிலிலக்குண்டோ. க௨

விளக்கினொளிமேற்காதலுற்றுவீழ்ந்ததாங்கழியுமவிட்டிலமுந்
துளக்கில்பிடியைநத்தியகற்குழியில்விழுந்துதுன்பமுறுந்
துளைக்கைக்கயமுந்தூண்டிலிறைதுய்த்துவருந்துமீனினம்போல்
வளைக்கைமடவார்செய்யுமயக்கவலைக்குட்படுவோர்வருந்துவார். க௩

மாதர்மயக்கின்வீழ்ந்தவர்க்குமதியுங்கதியுமவான்பொருளும்
போதமுதலவாயவெலாம்போமென்றறிவினுயர்ந்தோர்க
ளோதுநூலின்முறையாகவுலகிற்பவமேபெண்ணுருவாய்ப்
பேதிப்பார்நற்குணத்தையன்றாரதனாற்பெயரும்பேதையராம். க௪

கோட்டினுயர்பூச்சூட்டினுநற்குணமின்றாகிமாற்றவட்குக்
காட்டப்புனைந்ததெனமிகவுங்கவன்றுசிறுங்காரிகையார்
கோட்டமானகுணங்களொடுமடமைநீங்காக்கொள்கையினா
னூட்டினவரைமடவார்களெனவோர்நாமநவில்வாரே. க௫

அறனிற்கடையரானவர்க்குமதிகக்கடையர்யாவரெனிற்
பிறனிற்புகுவோரெனமேலோர்பேசுமுறையின்றிறத்தாலு
நெறியற்றுணர்வின்றாகியிந்நீரார்கடல்சூழ்நீணுலகின்
முறையிற்பிறழ்ந்தோர்க்கிழிவுடனேயுயிர்க்குமுடிவுமோருறுமால். கசு

அனையமடவார்தங்குழலையறலோமுகிலோவிருட்பிழம்போ
வெனநெஞ்சகத்தினையாமலிழியுங்கரியபுழுவடர்ந்து
தினமுஞ்சீவிமுடிந்தாலுஞ்சிக்குநாறுமிகுமலக்குப்
புனைவர்மலரையாடவர்தம்புந்திமயக்குமப்பொருட்டன்றே. கஎ

சீரில்குறுமயிருறுங்காதைத்திகழும்வள்ளைநிகரெனவு
நீரும்பூளையொழுகும்விழிநீலோற்பலமவேளிகரெனவு
மாருமழுக்குப்பல்லைமுல்லையரும்புமணிநித்திலமெனவு
நேரில்சழிகொண்மூக்கையெட்பூநிகராமெனவுநிகழ்த்துவரால். கஅ

நாறுமெச்சிலூறுமிதழைநவில்வாகடலார்பவளமென
மீறிக்கருங்கட்சிலந்தியெனவிம்முநகிலைப்பொற்கலசமென
மாறின்மதியநிகரென்னவாய்நீரொழுகிச்சுரிக்குமுகங்
கூறுமெலும்புநரம்புடைத்தோள்கொண்டலணைவுங்கழையென்பர். ககூ

நாற்றமிகுந்தமலசலமுநரம்புகுடர்சுக்கிலங்குருதி
தேற்றமெனுமெய்த்தசைபலவுஞ்செறிந்துதுளைகள்பலவற்றி
னூற்றற்கரியதுன்னாற்றமார்ந்துகசியுமதனைமேலோ
ரேற்றமிலதாந்தோற்போர்வையிதுவேமகளிரெனபதுவே. உய

மெய்யிலெழுதுற்கந்தமதைவெளியிற்றோன்றாவகைமறைக்கப்
பொய்கொணமடவார்மஞ்சணறும்பொடிகளுடலினமிகப்பூசி
யையந்தருநான்முதனைகுகுனனுமிலநாயவர்பயிறல்
செய்வதலதுபசிதாகந்தீர்க்குமெனவோதெரியுங்கால். உக

வாயைத்திறக்குமுன்னமெழுநாற்றமதனைமாற்றுதற்கு
மேயபற்கடினந்தோறும்விளக்கிநீராற்கொப்புளித்துத்
தூயதுவர்க்காய்வெற்றிலையுந்துகளிலவங்கமுதல்வாச
மாயவனைத்துங்கொள்வதுவேறரியகுதலைதீர்க்குமென்றே. உஉ

கோலப்புடவைபுனைந்துநறுங்கொங்கைகளின்மேற்கலைதிருத்திச்
சாலப்பணிகளவையவங்கட்கியையப்பலவுந்தானணிந்து
நீலக்குழலுமுடித்துவருநெறியாலவருக்கழகலது
வாலைப்பருவமடவார்க்கும்வாய்த்தவியல்பினழகிலையே. உங

வாலைவயதிற்காமுகரைமயக்கும்வேற்கண்மாதர்களுங்
காலமகன்றபின்னவரைக்கண்டோரெவருமிழிவுரைப்ப
நீலக்குழலுநரைக்குழலாய்நிமிருந்தனுவுந்தனுவாகக்
கோலந்தரையினூன்றியஃதேகண்ணாயுழலுங்கொள்கையராம். ௨௪

வேறு.

செந்திருவினன்பனெனிலுஞ்செருவிலாது
நிந்தையுறுமங்கையர்நெடுங்கடையினூடே
வந்துபொருடந்திலரெனின்வெறுமுநுமாதர்
வந்தவழியேசெலவழுத்துதல்செய்வாரால். ௨௫

நெய்தீபந்துள்ளளவுநீடொளிருமதுபோற்
கைசேர்பொருளுளவுமதுகாதலிக்கையாமேய
நெய்தீபத்தின்றியொளியின்றுமினைச்செல்வங்
கைதீரினவர்மனதுகைத்தகலுமோகம். ௨௬

சாதிகுணமுற்பிறமைதகைபிறிவுமேன்மை
யாதுமுணராதுபொருளிற்றுசைவசமாமேவா
ரேதுமிலசவந்தனையிருட்டனையமேனோர்திப்
போதுவார்கள்கூவிநசையானதுபொருவ ௨௭

ஆதலினவ்வரிவையரவர்தினமமறுகா
தேதமிலபத்திநெறிபெய்பவிவிதியைநி
தீதகலுயிர்க்குதவிசெய்வதனைமாது
மேதினிதனிற்பனருமவேறுபொருளின்றால். ௨௮

உலகிடைபிறந்துழியுடன்வருநரிலை
விலகியுயிர்போமபொழுதுயிருறுகருமிலை
யலகில்கிளைதாய்தந்தையானவிவையெல்லா
மிலகியிடையேவந்ததென்னவுணர்வாயே. ௨௯

இம்பரினமைத்தந்ததாயகனொளாணிலலார்
பம்புமனைவிபர்மைந்தர்கவிலமுழுவிலர்பின்
பம்புமவர்தம்மனைவடகரவெளிதாமோ
வெம்பிறவிமாயையவசமேவுவதுகண்டாய். ௩௰

வேறு.

ஆயவையன்றியுமவனிமீதுறுந்
தூயவர்க்கென்னினுந்துரிமைப்பது
தீயவையனைத்தினுமிகுந்ததீயது
காயசினத்தொடும்புகல்கடுஞ்சொல்லாவதே. ௩௧

இனியசொல்லிருக்கவின்னாதுகூறுதல்
கனியினைத்தவிர்த்ததிற்காயைத்தின்றபோற்
றனிபிறரியற்றினும்பொறுத்தலாய்தென
முனிவர்கண்மேலவர்மொழியும்வண்ணமே. ௯௨

அறந்தன்மமொடிடும்பைகூறறிவிலார்க்கென்றுஞ்
சிறைதவிராத்துக்கமேசெறியுமாதலா
லிதமறப்பற்பலரிகழ்ந்துகூறினும
பாவியர்க்குரியவாபொறுப்பர்பண்பினோர். ௯௩

பின்னருமோர்பதின்பெற்பிரமப்பல
மன்னவரிறத்தனாமையகத்திரி
லன்னதுதவனையுமகற்றிநீங்கலான்
மன்னரியவறஞ்செயன்மானமுமாவதே. ௯௪

மாவலிபொனைப்பவன்மாலுக்கன்புடன்
மூவடிமண்டரவுசாற்றாதியே
தாவரத்தடுத்தொருசுக்கிரன்றனா
னாவினைகெடுப்பதைமறுத்திடாரரோ. ௯௫

ஓறுத்தவரொருபொழுதுறாதியுன்னினும்
பொறுத்தவரழிவுறுபுகழினைமேவுவர்
சிறுந்தொழில்புரிந்திலர்சிரியோரதை
வெறுப்பரென்றுயார்வழிவிழப்பவாவதே. ௯௬

நல்வினையியற்றினுநலவயுறுவதாகப்
பல்விதஞ்சூழ்ச்சியும்பார்த்தியற்றுதல்
வல்லதாமலதுகன்மாடப்பாவினைப்
புல்லியபழியெனப்பொருந்துமென்பரால் ௯௭

பாரிடைப்பாகதியொருவர்பாலல
மேருவைநிகர்பனைவெளியதாமவெறி
யாருநன்மனைமனரிரப்பராவலாய்ச
சேரிரவலர்களுஞ்செகமண்ணுவரோ. ௯௮

இவ்வுடலுயிர்க்குறுதுணையின்றுமெனிற்
செவ்வியபொருளெங்ஙன்சேர்ந்திருப்பது
நவ்விநேர்விழியர்நன்மைந்தர்சுற்றமும்
பௌவநீருலகியற்பாசத்தாயவே. ௯௯

ஆயதாற்பவத்தொழிலகற்றியத்தொழிற்
றீயவர்சேர்க்கையுந்தவிர்ந்துதீதறு
தூயநற்குணத்தினர்தொடர்புபற்றியே
தாயெலாவுயிர்க்கெனுந்தகைமையாற்றுவாய். ௪௦

தெள்ளியதவம்பலசெயதுளார்களு
மொள்ளியதுறவினிலும்றுளார்களு
மெள்ளணவெனுமனமீந்திலாரெனில்
விள்ளருமபரத்துற்றுமபசியின்வெம்புவார். ௪௧

முன்னைநாட்சுவேதனென்றுரைக்குமொய்கழன்
மன்னவன்றவத்தினன்மலருளோன்பதி
மன்னியும்பிறர்க்கனம்வழங் குறாமையாற்
றன்னுடைச்சவத்தினைசசார்ந்துநுங்கினன். ௪௨

என்றினையாவையும்புகலிருந்தவ
நன்றிகொள்சுந்தரானனர்நற்றாள்களி
லொன்றியசிநனையினுவந்துபோற்றியே
வென்றியீரதைவிரித்துரைசெய்வீரெனு. ௪௩

சுந்தரர்பரிவுடன்சொற்றவாசகந்
சிந்தையினுவந்துடன்னு லுந்தேர்ந்துயர்
விந்தைசேர்ஞானநல்விளக்கெனத்திகழ்
சுந்தரானந்தருஞ்சொல்லுவாரரோ. ௪௪

பிறனினயவாமைகூறியபடல-முற்றிற்று.

ஆ படலம் - ௧௩ க்கு திருவிருத்தம் - ௯௮௭.

# சுவேதன்சரித்திரப்படலம்.

துகளறுந்தவச்சுந்தரமுன்னைநாட்
டகவின்மிக்கதயரதராமனுந்
தொகுமரக்கர்திரடொலைத்தேயக
மிகுமகிழ்ச்சியிற்றன்பதிமேவியே.

வங்கர்கொங்கர்மராடர்களாதியாஞ்
சிங்கமன்னதிறலுடைவேந்தெலாம்

பொங்கிருங்கடலென்னப்புடையுற
வங்கண்மாநிலமண்புடனுணுநாள். ௨

அகத்தியன்முதலாகியமுமமல
மகற்றுமாதவர்யாவருமாங்குற
வகத்திராவணற்செற்றவனன்னவர்க்
ககத்திலன்புறப்போற்றினருமரோ. ௩

வணங்கியீந்தமணிதிகழாதனத்
துணங்கலின்முனிவோருந்திராக்கநாக்
கிணங்குறுஞ்செயல்யாவுநியமிநன்
மணங்கணுறும்வனத்தவர்சென்றபின். ௪

தேவர்கட்கிடர்செயுமிலவணனைத்
தாவில்சத்துருக்கன்றனால்வீட்டிநற்
பூவின்மாரிபுலவர்பொழிந்திட
வாவலாயுலகாள்கின்றநாளினே. ௫

மன்னுமாமறையோன்றருமைந்தனைத்
துன்னுநாகங்கடித்தவன்றுஞ்சலும
பன்னிதன்னொடுப்பார்புகழ்வேதிய
னின்னருட்டனையனுடலேந்தியே. ௬

வந்திராகவன்வாழ்வுறுங்கோயிலின்
முந்துவாய்தற்கண்மொய்த்தவர்யாவருஞ்
சிந்தைநோவச்சிறைநசுதன்றன்னைவைத்
தந்தோவென்செய்வதென்றழுதாரரோ. ௭

ஒருமகன்றனைநம்பியுலகிடை
யிருவரும்முயலாமெனவெண்ணினேந்
திருவருஞ்சுதனேயென்னசெய்தனை
யிருநிலத்துனையென்றினிக்காண்பதே. ௮

உனையிழந்திவ்வுயிர்வைத்திருப்பதோ
தனையநின்னொடுஞ்சாருதும்யாங்களு
நினையழைத்தநெறியிலெனம்முயிர்
தனையழைத்தறகாதென்றுசொல்வனே. ௯

நற்றவம்பற்பனாளினுஞ்செய்துனைப்
பெற்றதித்துணைப்பெற்றியைக்காணவோ

குற்றமொன்றுங்குறித்ததுமில்லைநீ
யிற்றகாரணம்யாதெனவோதுவோம். கய

## வேறு.

பூதலத்திலிதற்குமுனந்தந்தையர்க்குமுன்றனயாபொன்றலின்று
லேதமுறவரசருக்குணிநியின்றுமாதலினுவிறந்தான்மைந்தன்
சீதைபதியாகியவிராமனுக்கேபழியாய்நாந்திரவோமெனுை
வோதுகின்றமொழிகேட்டோரோடியிராகவன்றனக்கிதுரைப்பதானர்.

கேட்டவுடன்றம்பியர்களுடனஜமசசுமுதலாயகிளையருரோடுங்
கோட்டைமுதல்வாயலிலேசேய்மறிரங்கியழுமறைநற்குளத்துனானே
நாட்டமுறநோக்கியவன்மனைவருந்துமுசெயலறிந்துநரினக்கண்ணன்
வாட்டமுறநிற்பளவினுரதமாமுனிமுதலோர்வந்தார்மன்னே. கஉ

வந்தமுனிவரர்மகிழவரன்முறைபூசித்தருளுமன்னர்மன்னன்
சிந்தையுறுதுயரறிந்துநாரதமாமுனியுவந்துசெப்புவாறு
விந்தநகர்பபுறத்தொருசூத்திரனைரபுக்கியலாததியற்றுகின்று
னந்தமுறையான்மறையோனமகனிறந்தகாரணமீயறிதிபின்னும். கங

சூத்திரர்க்குத்தருமசாத்திரமுறையிலிசைத்தாடிசூழ்வுறுமற்
காத்திரத்தைமிசவுலர்த்தித்தலைகீழாய்க்காலமேலாய்த்தான்வந்துற்ற
கோத்திரத்துகியையாதகொடியதவம்புரிவதினுல்கொடியோர்க்கோறல்
பார்த்திபருக்குரியதெனவுரைத்துமுனிவரர்பழுவத்தெய்தினரே. கச

கூறியநன்மொழிகேட்டுக்கொண்டல்வண்ணன்கவசலைவிண்டுகுளிர்ப்
புண்டாகி,மாறில்புகழ்த்தம்பியரையருகழைத்துச்சிலமாற்றம்வகுத்தல்
செய்வான்,மீறதுயரிடையழுந்துமவேதியனைமனைவியுடன்விலக்கிநீவிர்,
தேறுதல்செய்வித்திறந்தசிறுவனையுந்தயிலமதிற்சேர்மினென்றே. கரு

இந்தவிதமவர்க்குரைத்துவீடணனுண்டிந்தவிமானத்திலேறிச்
செந்துவர்வாயிநழ்துடிப்பச்செங்கமலாயனமுஞ்சேந்துகாட்டச்
சந்திரனிலதிகவொளிதயங்குகின்றகூர்வாடன்கரத்திற்பற்றி
யிந்திரைநாயகனகர்க்குக்குடதிசையிலதிவிரைவினெய்தினனே. கசு

குடதிசையிற்றேடியங்குகாணமல்வடதிசையிற்குருகிப்பார்த்துத் [து
திடமுடனேகீட்டிசையுந்தேடியங்குமிலையெனத்தென்றிசையிற் போந்
பெடையொடுநல்லனமகிழப்பிரசமுண்டுதேன்பாடும்பெற்றியாய [டான்
தடமருங்கோர்பாதவத்திற்றலைகீழாய்த்தவஞ்செய்வோன்றன்னைக் கண்

அம்மரத்திற்றலைகீழாய்வாவலெனத்தவம்புரியுமவனைநோக்கித்
தெம்மடங்கும்வடிவேலான்செம்பவளவாய்திறந்துசெப்புவானீ [ன்ன
விம்மிதமாய்த்தவம்புரிந்தாய் நின்மரமைப்பொய்மையின்றி விளம்புகெ
செம்மையிலாத்தவத்தோனுந்தன்னையுள்ளபரிசனைத்தும்செப்புவானல்

வாசமலர்த்தொடையல்புனைமன்னவயானசூத்திரர்தமமரபில்வந்தேன்
பேசுவரொன்பெயரினைச்சம்புகனெனவிந்தவம்புரியும்பெற்றிமிக்க
தேசுயர்விண்ணவருலகிற்சடதநுடனேசேரவென்றுசெப்பலோடும்
வீசினன்கைவாளினனவ்வவனுடலந்தலைவேறாய்வீழமன்னே. ௧௯

வானவர்பூமழைபொழியமறையவராசிகள்கூறமண்ணவரில்வாழ்வோர்க்
கானவருணத்தருமநிலையழித்தோனறனையழித்தோனருகிற்றேவர்
கோனிருடிகணத்தவருமுற்றிறந்தோமாவ்வொன்றுமாகிக்கூடான்வேறு
மேனலமாகியவரங்கேளெனவியர்துதாசரதிவிளம்புவானல். ௨0

வேறு.

இந்தவன்றன்னுன்மாண்டானெழின்மிருமறையோன்பால
னத்தகைசிறுவனுய்யவருநதிரெனவோடும
வித்தகத்தவத்தோனிநருவியானடைமறயோனின்ற
புத்திரனுயந்தானென்றுப்புகன்றனனப்புலவர்கோமான். ௨௧

நல்லதென்றிராமநம்பிரலுங்கொமுனிவர்தேவர்
வல்லவிந்திரன்றம்மோடவ்வளந்தெறிபொயகைநீங்கி
யெல்லையிறவத்தனுன்குறுமுனிருந்தகைப்யத்தி
யல்லறிரவனொடாங்கணகமகிழநதிருந்தகாலை. ௨௨

அம்முனிவரனுலாற்றம்பூசனையமரோற்றப்
பொம்மெனவெழுந்துதங்கள்டொன்னுலகடைந்தபின்னர்
வெம்மைதீர்முனிவன்சிறந்தவியந்தயன்றனையனின்ற
செம்மலையணிகவென்னுத்திகழ்மணிகேகாவையீர்தே. ௨௩

இன்னதுதன்னைவிண்ணோர்ககலதிருநத்தின்மேவு
மன்னவர்மறைவளோர்மற்றையோர்தரிக்கலாகா
துன்னருமரக்கரெல்லாமொழியவிலவளைந்தகோவே
நின்னியர்குரியவாகுமெனமுனிநிகழ்த்திநனல். ௨௪

பின்னருமுனிசொல்வானிப்பிறங்கொளிமணியின்கோவை
யிங்கிலத்துள்ளதன்றுலிமையவருலகினின்று
பன்னருமறைகளோங்கும்பங்கயனுலகிலுள்ள
தின்னதென்றுரைப்பக்கேட்டிராகவமுனிதனைச்சொல்வான். ௨௫

இவ்விதமலரின்மேலோனிருக்குநாடதனிலுற்ற
செவ்வியமணியின்கோவைபின்னிடைச்சேர்ந்ததன்மை
கௌவைதீர்மனத்தோயெற்குக்கழறுகவென்னலோடும்
பௌவமீகரத்துட்கொண்டமுனிவரன்பகரலுற்றான். ௨௬

இருசகசிரமாம்வெள்ளந்திராக்கதத்திரளையெல்லாம்
பொருசரமாரியாலேபொன்றுவித்துலகமியாவும்
பரிவுறசெங்கோலோச்சும்பார்த்திபதவான்செய்ய
விரிவுறுமிடங்களூடுவிளங்கியகாணிற்சென்றேன். ௨௭

செல்லவேவாரிடத்தின்மிக்கசிங்கங்கணமுதலவாய
பல்விலங்குகளுமின்றிப்பறவையின்குலங்களின்றிச்
சொல்லுறுமரிநரின்றித்துலங்கியவனத்திறுப்ப
னெல்லுறுமலர்களோடுமிலங்கியபொய்கைகண்டேன். ௨௮

அன்னநற்படத்தினன்றுயலப்பருமமளிமீதி
லன்னமும்பெடையுந்தூங்கவாழ்கடலெனவிசால
மன்னியவதனின்பாங்கராமசிதாமற்றெவருமில்லா
துன்னுறுபகரியகாட்சியுமோராசிரமங்கண்டேன். ௨௯

வேறு.

ஆயகாலையவிரகதிரொருயிறம
போயம்மேற்றிசைவாரிபிற்புக்கவே
தீயபாவஞ்செறிதெவ்வமவிருஞ்
மேயதாலுயரேநிரியெங்குமே ௩௦

ஆயகங்குற்பொழுதினையாங்குறும
தூயவாசிரமத்திடைத்துன்னினேன்
மேயபின்னாவிடியலின்வெய்யவன
றீயவல்லிருளாசித்துவிளங்கினான் ௩௧

விடியல்காணவிரிவுறுமபொய்கையி
னடுவணோர்சவநாணகணிகண்டத
னடைவுங்காண்கவென்றுங்குறுமபோதின்வா
யிடைநிகழ்ந்ததியம்புதுங்கேட்டியால். ௩௨

வேறு.

அரம்பையர்நடனமாடவமரர்களினிதுசூழ
வரம்பெறுமுனிவர்வாழ்த்தமாகதர்துவன்றியேத்தக்
கரம்பயில்வீணைவல்லோர்கலந்துபண்ணிசைபயிற்றப்
புரந்தரன்வருவதென்னப்பொன்னுயர்தேரில்வந்தான். ௩௩

விண்ணிடைநின் றுவந்தவேந்தனைவ்விரதம்விட்டு
மண்ணிடையிழிந்துசெய்யமலர்மிசையிலங்கும்பொய்கை
நண்ணியச்சவத்தைப்பிய்த்துநனிவயிறாரத்தின்று
தண்ணறும்புனலுட்கொண்டுதன்பசிதணிந்தோனாகி. ௩௪

தேரின்மீதேறவுன்னிச்சென்றிடுமளவினன்போய்க்
காரணம்யாதோவிந்தக்கயத்திடைசவத்தைத்தின்ன
வீரநீயாவனுற்றதியாதையும்விளம்புகென்னச்
சூரிற்சூரவன்றனுணர்ந்ததுசொல்லக்கேண்மோ. ௩௫

இந்நிலந்தன்னிலுற்றவியலுயிருள்ளவெல்லாந்
தன்னுயிரென்னவுன்னித்தராதலமுறைமையிற்காத்த
மன்னனவைதர்ப்பனென்னுமைந்தனென்பெயர்சுவேத
னன்னியரிருவராகுமவர்களின்மூத்தாள்சேட்டான. ௩௬

பின்னவனெனக்கேபாலனைபிறர்திடவொருதுயர்ந்தை
பொன்னுலகடைநாரணபிரானைபொருவறுநெறியினாளே
மன்னியயீளைந்நூறுவருடநாளுமகையாண்டு
நன்னலமாகப்பின்னுள்சுதனுக்கவ்வரசைசாலவி. ௩௭

இந்தநல்வனத்தினெய்தியெழின்மிருந்துறவுபூண்டு
பந்தபாசங்களைங்கப்பவவிளையொருவியோட
விந்தியமொடுக்கிமூவாயிரமெனுமவருடமோர்ந்தே
யந்தணனருளாலொன்றவனுலகமடைதானேனன். ௩௮

தாதைதன்னுலகினும்பதாகரும்பசியுமென்னை
மோதிமெய்வருத்தநொந்துமுளரிநான்மலரில்வந்தோன்
பாதமீப்பணிந்துவெய்யபசிப்பிணியெனையிவ்வாறு
நோதகவருத்துந்தன்மைநுவலுதிதெரியவென்றேன். ௩௯

மறையறிந்துலகந்தன்னின்மனனுயிரனைத்துமாக்கு
மிறையெனைநோக்கிமுன்னீயிருநிலவரைப்பிலன்னந்
துறவினரிறவலாளர்சுற்றமுற்றவர்க்குநலகா
நெறியினாற்பசிதாகங்கணினைமிகவருத்தற்கான. ௪௰

செய்தநற்றவத்தாலிந்தச்சீர்மிகும்பதத்தினீவந்
தெய்தினையெனினுமன்னமிரவலர்க்கீயாவாற்றா
லுய்தரவனைநீர்நிற்கிங்கொருவருமுதவல்செய்யார்
வெய்துறுபசியுநீங்காததற்குநாம்விளம்பக்கேண்மோ. ௪௧

சூக்குமதனுவோடிங்குதோன்றினைமுனிநீத்த
வாக்கையாஞ்சவத்தைத்தின்றுன்னரும்பசிதினமுந்தீர்ப்பாய்
நீக்கமில்சவமுங்குன்றுதிருக்குநீகுமபயோனி
பார்க்கவோர்தினமதிற்றின்னப்பசிப்பிணியகல்வாயென்றான். ௪௨

அற்றைநாண்முதலாயெந்தனரும்பசியகலுமவண்ண
மிற்றைநாளளவுமிங்குற்றிப்பிணந்தனைநான்றின்றே
னற்றவமுனிவோநின்னாலிவுசெய்பவநோயதீர்ந்தேன்
மற்றுளவினையுந்தீர்ந்தேனெனமகிழ்ச்சிபொங்கி. ௪௩

இந்தமாமணியின்கோவைதன்னையென்னிடத்தினல்கி
நந்தலிலிரதமேறிநான்முகனுலகிற்புக்கான்
சுந்தரமிகுமிராமவெம்பனமுனிசொல்லைக்கேட்டுச்
சிந்தையினமகிழ்ந்திராமன்றிகழ்மணியாரம்பூண்டே. ௪௪

வாரியையொருகையாலேவாரியுண்முனிவியெயந்தச்
சீருயர்வனத்தியாருஞ்சேர்வதற்கிலாதான
காரணமவினவுற்றானுற்றகவெவ்வலோடு
மாரணமுனைவனோதாவிராகவற்கருள்வனானான். ௪௫

வேறு.

மனுகுலத்தினில்வந்துபிறந்தவன்
றனுவலத்திற்றரணியையாண்டவன்
புனிதனன்னெறிப்பரணியிலில்லவன்
முனிவுறுந்தண்டனென்றொருமொய்ம்பனே. ௪௬

அன்னமன்னவன்றன்குருவாகிய
பன்னரும்புகழாளுயர்பார்க்கவன்
தன்னிருங்கமருஞ்வனத்தனமனந்
துன்னியேவனத்துற்றனனரோ. ௪௭

வண்டுலாவிமலர்ப்பிரசாதனை
யுண்டுபாடுமுயர்ச்சிகொள்சோலையிற்
றண்டன்வெள்ளியருளியதையலைக்
கண்டுகாமுகனாகிக்கலங்கியே. ௪௮

செய்யதாமரைமேற்றிருவோவிவ
டெய்வநாட்டுறைசேயிழையோவிவ
ளெய்திநையுமிடையுடைவாட்கணா
டையலியாவளெனத்தளர்வெய்தியே. ௪௯

பவளவாயிதழும்முத்துப்பற்களுங்
குவளைநீள்விழியும்மறற்கூந்தலு
நவையிலாநுதலுஞ்சிபுருவங்கள்
குவிதலாகிதிமிருக்குயங்களும் ௫0

மற்றுமுற்றுமம்மங்கைவனப்பெலா
முற்றுநோக்கியுயர்மதனம்பினால்
வெற்றிமன்னனன்மிகமெலிவெய்தியக்
குற்றமற்றுயர்கோதையைநண்ணியே. ௫௧

மதியும்வெட்குமதிமுகச்செல்வியுந்
சுதைநிகர்க்குநன்மொழிக்கோதையே
யிதமதாய்நினைப்பெறவரியாவர்தந்
குதலைநன்மொழிகூறுகவென்றனன். ௫௨

அரசனிவ்வுரைகூறவம்மங்கையும்
புரசையானையுமாய்புகன்றரு
வரிவைநற்சுரசைப்பெயராமென
வுரைசெயத்தண்டனுற்றுநெருங்கியே. ௫௩

கண்டுநேர்மொழியாய்மதன்காமன்விற்
கொண்டேயுங்கணையாற்குலைந்தேனுந்தன்
செண்டிணைத்தனஞ்சேர்த்தெனைக்காவெனத்
தண்டன்மெல்லியல்காண்டிசைத்தாழ்ந்தனன். ௫௪

புகலும்வார்த்தைதனைப்கேட்டலுந்தூயமெய்
மிகநடுங்கிவிளம்புமறிவிலோர
யகமதில்லெனநந்தன்மூரிந்துற்ற
செகமெலாமோர்கணத்திடைதீயுமே. ௫௫

இவ்விடத்திலிராதிக்கணத்தின்வே
றெவ்விடத்தெனினுஞ்செல்கவென்னலு
நொவ்விடைக்குயிலேமனநோவது
செவ்விதன்றெனசசேரநெருங்கினன். ௫௬

மீறிமேல்வரக்கண்டந்தமெல்லியல்
பாறினள்பின்றொடர்ந்தவன்பண்புடன்
கூறும்வார்த்தையின்றுயக்குழல்பற்றியீர்த்
தூறுமாசையொழித்தகன்றனரோ. ௫௭

### வேறு.

கொடியோனிவைசெய்தகலவந்தக்கோதையழுதுதனையீன்றோ
ணடிமேல்விழுந்துநடந்தவெல்லாமறையவுசநன்முகமுனிந்து
படிமேற்றீராப்பழியையிந்தப்படிசெய்தண்டன்கிளைநாடு
முடிவிற்பொருளும்பொடியாகமுடிகவெனவப்படிமுடிந்த. ௫௮

ஆதலாலத்தண்டனரசாண்டபுவியேதண்டகமென்
றோதுமடவியாயதுநல்லுசநன்மொழியாலவ்வனத்திற்
காதுஞ்சினக்கோளரிமுதலவிலங்குபறவைகாண்டரிது
சீதமலிநற்றவத்தோர்கள்சேர்ந்துநாளும்வாழ்வதுவே. ௫௯

நன்றித்தவஞ்செய்முனிவரெந்தநாளுமவணின்மேவுவதா
லென்றுமுகில்கள்காப்பருவமேலாச்சிறந்துவான்பிலிற்றும்
வென்றியுடையாயிதுமுனைநாள்விளைந்ததெனவாமுனிகூறத்
துன்றுகழலோனவற்றொழுதுதுலங்குமையோத்தியிற்சேர்ந்தான். ௬௰

ஐயவிவைகண்முன்னிகழ்ந்ததெனச்சொல்சுந்தரானந்தர்
செய்யகமலமலர்ப்பதத்திற்சிரத்தைப்பொருத்திசற்றறிவே
னுய்யுமாறுபலவிதமுமுரைக்கத்தெளிவுற்றேனினியான்
செய்யுமாறுசொல்லுமெனச்சிந்தைமகிழ்ந்தாரியர்சொல்வார். ௬௧

சுவேதன்சரித்திரப்படலமுற்றிற்று.

ஆக படலம் ௧௪-க்கு திருவிருத்தம் - ௭௪௮.

## விடைபெற்றுமீண்டபடலம்.

ஆதிநூன்முறையாற்றவம்மகம்யோகமனைத்தினுமுயர்ந்துளதறனே
யோதுமவ்வறமெண்ணுன்கினுமுயர்ந்ததோதனதானமாதலினுற்
பூதலமதனிலிளைத்துவந்தவர்க்குப்போதுறவோதனமருளி
மாதவர்மகிழவனக்கொடிபடைத்துவாழுதிபோதியென்றிசைத்தார். ௧

அன்புடன்சுந்தரானந்தரிவ்வாறறைந்திடவனைத்தையுங்கேட்டாங்
கின்பசாகரத்திலாழ்ந்தவரென்தகும்பிருநயங்களிபயுறவவர்தம்
மென்பதமலரின்முறையுடன்வணங்கிவிடைபெற்றுச்சதுர்வரையீசன்
றன்பதம்பணிந்தேயிருகரஞ்சிரத்திற்சாத்திநற்றுதிகள்சாற்றினரால். ௨

ஆதியுநடுவுமீறுமாயகிலபுவனங்களைத்தந்தாளுகி
நீதியிற்படைத்தல்காத்தலோடழித்தலெனுநெறிமூன்றிற்குமிறையாய்
மாதொருபாகமாகிநின்றருளும்வள்ளலேமறைகணேடரிய
சோதியேசதுரவரைமிசையோங்குசுந்தரமாலிங்கநாதா. ௩

காமனையெரித்தாங்கிரதிநொந்தரற்றக்கருணையினவட்கருள்புரிந்தாய்
சோமனைநதியின்மருங்குறந்தனதுதுய்யசெஞ்சடைமிசையணிந்தாய்
வாமமேகலையார்மயக்கினிலழுந்தாவகைநினதருடந்துகாவாய்
பூமனும்பொழிலார்சதுரமால்வரையிற்பொருந்தியமாலிங்கநாதா. ௪

வாசவன்றருவாசன்கொடுஞ்சாபமருத்தநந்தீர்ந்திடவருள்புரிந்தாய்
காசினிப்பொற்மேற்கொண்டுமுன்மூன்றுபுரங்களுநீறெழக்காய்ந்தாய்
தேசுயர்விசையன்றனக்குநற்பாசுபதக்கலைசிறப்புறவளித்தாய்
மாசிலாச்சதுரவரைமிசையமரும்வள்ளலேமாலிங்கநாதா ௫

தாருகாவனத்தர்தவமிச்செருக்கைத்தவிர்ப்பதற்குன்னியாறன்னை
நேரிழையுருவாயேவியாங்கவர்தந்நெறியினையசற்றிமற்றவர்தம்
காரிகையார்பானககனுபப்புகுந்துகற்பழிதரப்பினுங்காத்தாய்
சீர்சிறந்தோங்குஞ்சதுரமால்வரையிற்றிகழ்தருமாலிங்கநாதா. ௬

பூவுலகதனிற்பற்பலரினும்புன்புலைத்தொழில்புரிபவரிடத்து
மாவலாய்நேசித்தெட்டுனையெனினுமறிவிலாதிகழ்வினைபுரிந்த
பாவினானெனினுநின்றிருக்கருணைபாலித்துக்காப்பதுன்பார
மாவிநாயகனேசதுரமால்வரையிலமர்ந்தருண்மாலிங்கநாதா. ௭

வேனிலைநீரினசையினோடிவிரிதருகானிடையுழலு
மானெனவுலகவியலெனுமயக்கவாரியிலழுந்துறாதருள்வாய்
தேனினுமினியமொழியுடையுமையாந்தேவியோர்பாகமாய்விளங்க
வானவர்புகழுஞ்சதுரமால்வரையில்வைகியமாலிங்கநாதா. ௮

வேறு.

ஆனூர்தியொடுயர்கேதனமுடையாயதழுடையாய்
பானேர்மொழிசசியர்செய்மயல்பாறும்படிபாரும்
வானினிலங்கெடினுமலைவில்லாய்மலைவில்லாய
தேனார்பொழிற்சதுராசலத்தேவாமகதேவா. ௯

கற்றாரணிந்துரைநூற்கரைகண்டாய்கறைக்கண்டா
முற்றாரணித்தேர்மீப்புரமுனைவாயெந்தன்முனைவா
விற்றாரணிகோளாதனபதிமீதருட்டோழா
மற்றாரணிசதுராசலத்தேவாமகதேவா. ௰

அரிமுன்பெறவடலாழியையளித்தாய்துயரழித்தாய்
சரண்சேர்ந்தவர்க்கருளீந்திடச்சடையாய்திகழ்சடையாய்
பரிவானவெண்மதியோய்சிரமபணியுந்துவெண்மதியோய்
திரமேவியசதுராசலத்தேவாமகதேவா. கக

மையாடரவணியாய்திகழ்பரனின்சரணணியா
மையாவிவணடைந்தேனெனையாளாயகிர்பையாளா
மெய்யாரணிநீற்றாய்வியேவிடும்வேடனைநீற்றாய்
மையார்பொழிற்சதுராசலத்தேவாமகதேவா. கஉ

விடையார்கொடியானேவிரவலர்க்குங்கொடியானே
நெடியோனுடனயன்தேடுறுநீதாவருணீதா
திடமாயுமையிடமேவியநேகாவுவந்தேகா
மடலார்மலர்ச்சதுராசலத்தேவாமகதேவா. கங

பொன்னேதிகழொளியேபுகல்புவிவிண்ணகல்வெளியே
தன்னேரிலாவளியேமிருந்தழனின்னுதல்விழியே
யன்னேயுயரளியேயுமையாமாமலரளியே
மன்னேபுகழ்ச்சதுராசலத்தேவாமகதேவா. கச

நந்தாவொளிமதியேதிகழ்நதிக்கும்மொருபதியே
பந்தார்தனத்துமையன்புறுபதியேயருள்கதியே
யெந்தாயுனைத்துதியேசெயவெப்கீகலமதியே
சேந்தேன்மலிசதுராசலத்தேவாமகதேவா. கரு

பணியமபுலிக்கிசைந்தாடியபாதாகுழைக்காதா
பிணையொன்றுகைநாதாவரம்பெருக்கும்வரநீதா
விணையெங்கணும்போதாமெயினெழிலார்ந்தவிநோதா
திணியொன்றியசதுராசலத்தேவாமகதேவா. கசா

அணிகொன்றையின்முடியாயெலாமழிவெய்தினுமுடியாய்
கணைதங்கியவிழியார்மயல்களையவருள்விளைய
தணிவின்மறைப்பொருளேயுயர்சரணுயினெர்கருளே
மணிபொங்கொளிசதுராசலத்தேவாமகதேவா. கஎ

வாராய்வரந்தாராய்மனமகிழ்வாயெனைப்பாராய்
சீராயருள்கூராயுறுசெகமாயையுந்தீராய்
தேராருளஞ்சேராதவசேர்ந்தோர்க்கருள்வீரா
தீராவுயர்சதுராசலத்தேவாமகதேவா. கஅ

## வேறு.

மாநிலமீதிலுற்றுமாமாயையினெய்தினரு
மானுயர்கேதனனேநினதடிக்கன்புறினுங்கரை
யீனமுறும்பவங்களனைத்தும்விட்டேகுமென்றேமறைக
டானவில்கின்றதுவேசதுர்வரைத்தற்பரமாதேவா. ௧௯

அண்டங்களெண்ணிலவுநிறைவுற்றருவாயுருவாகித்
தெண்டிரைசூழ்புவியிலுயிர்க்கின்றியமையெல்லாமாகி
வெண்டலைமாலைபுனைந்திரண்டுவினைக்கயிற்றாட்டிவைக்குந்
தண்டலைவண்டிசைகொள்சதுர்வரைத்தற்பரமாதேவா. ௨௰

ஒப்பிலாமாமணியேயுயர்சோதிருபத்திருவேரொளியே
யெப்போதுநின்பதமேநிதிசெயுமேன்மையெனையாளாய்
கைப்போதகவுரிபோர்த்தயில்கொள்கலைசைநகரத்திலகச்
சர்ப்பாபரணமுளாய்சதுர்வரைச்சங்கரமாதேவா. ௨௧

அன்னைபிதாகுருவுநீயன்றிவேறொன்றுமின்றாம்
பொன்னிகர்மேனியனேயகத்தன்புபொங்கவெனையாளாய்
முன்னசுரேசர்திரளைத்துமுருகனுல்வீட்டியரு
டன்னிகரில்லாதசதுர்வரைச்சங்கரமாதேவா. ௨௨

வாசமலர்த்தழித்தொடைபுனைவள்ளலேதெள்ளமிர்தே
பாசமகற்றியெனைநினதருட்பார்வைபுரிந்தாளாய்
தேசுயர்வேணியனேநினதுதிருவடிக்கன்புசெய்தேன்
ஈசனென்றேயெனையாள்சதுர்வரைச்சங்கரமாதேவா. ௨௩

## வேறு.

பண்டுமாமறைநால்வர்க்கருளியபரமேசா
வண்டறைகுழன்மாதர்மயறவிர்த்தெனையாளா
யண்டர்கண்முனிவரயனரியறிவரிதாய
தண்டளிர்பொழின்மேவுஞ்சதுர்வரைமாதேவா. ௨௪

பூவையரொடுநிலனற்பொருளினுநசைமூன்றி
னுவலினுழலாதுன்னடிமலர்நீந்தாளா
பாவலர்புகழ்ந்தேத்தும்பற்பலவளத்தோடுந்
தாவில்சீர்தழைத்தோங்குஞ்சதுர்வரைமாதேவா. ௨௫

பெண்ணிடத்துறமேலோர்பெண்ணினைத்தலைமேலார்
தண்ணளிமிகுந்தோங்குந்தானுவேயெனையாளா

நண்ணிணையகழ்ந்தியுங்கண்ணப்பர்க்கருணல்குந்
தண்ணுறுஞ்சுனையாருஞ்சதுர்வரைமாதேவா. ௨௬

மூங்கிலினிடைதோன்றிமுன்னமவிண்ணிறைகாத்த
தீங்ககனின்பாதசேவைதந்தெனையாளா
யோங்கறஞ்சான்றன்னையுயர்பொருளெனவுன்னுந்
தாங்கருந்தவர்மேவுஞ்சதுர்வரைமாதேவா. ௨௭

தூதுசுந்தரர்க்காயோர்தோகைநன்னிடஞ்சென்றோய்
பாதகமுதற்றீயபற்றறவெனையாளா
மாதவார்தொழுமவைகியபொழிதோறுந்
தாதலர்மலர்தூவுஞ்சதுர்வரைமாதேவா. ௨௮

வேறு

எனவிவைபலவும்புகன்றுநெக்குருகியிருவிழிகளிலுநீர்சொரிய
மனதுடன்பொறிகளியைந்துபாடொழுலுநதிநிகொன்றையுந்திகழத்
தனதிடப்பாகத்துமையுடன்விடைமேற்சதுர்ப்புயந்துலங்குறத்தோன்
றி,நினதுநெஞ்சகத்திற்கருதியயாதுநிகழ்த்துவாயென்றனனிமலன். ௨௯

மால்விடைப்பாகன்புகன்மொழிகேளாமனமகிழ்சுந்தரமூர்த்தி
சால்புறும்பத்திப்பிணைருந்தொழுதுசங்கரசம்புமாதேவா
மேல்வரும்பிறவிப்பவாயிமமேதினிதனனில்வந்துறினும்
வேல்விழிமடவார்மயக்கநீத்தநன்மெய்விளக்கநல்லருள்புரியெனவே,

சொல்லியமொழிகள்கேட்டொருமுவந்துசுந்தரவனக்கொடிபடைத்து
நல்லியலபுடன்பலவூழிகாலமுநின்றுமமுஞ்சீர்த்திநல்லறனு [ர்
மெல்லொளிசெலுத்துபிடனெலாமபரவியிலங்குநின்மரபினிலுதித்தோ
செல்வமேலோங்கிவாழ்வரென்றுரைத்துமறைந்தனன்சிவபெருமானே.

வேறு.

வேதநாயகனுங்குற்றுவிரும்பியதிருவாகக்கேற்றுக்
காதன்மீதூறச்சிர்மைநகலிந்நரன்பதத்தையுன்னிக்
கோதிலாக்குணத்தோரந்தக்குனறினின்றிழிந்தோர்வேணி
மீதுறவிலகித்தோன்றமேதினிதன்னைச்சார்ந்தார். ௩௨

அம்மலையருகிலுள்ளவருந்தவமுநலோர்வந்த
செம்மலைவணங்கியேத்தித்திருமுகநோக்கியெங்கள்
விம்மலைத்தவிர்த்துக்காச்கும்வெள்விடையரனன்பார்ந்த
கைம்மலையனையாயென்னக்கழறினுருவகையிக்கார். ௩௩

அன்னவர்க்கினியவானவசனங்களைத்துங்கூறிப்
பின்னவர்தமையுமோவிப்பெருகியகருணையோடு
முன்னுயர்சதுரவோங்கற்கேகெனமொழிதல்செய்த
பொன்னவிர்கருப்பன்கோவிற்பூசகனிடத்திற்சார்ந்தார். ௯௪

கண்டகமகிழ்ச்சிபொங்கக்கனிவுடனெதிர்சென்றன்ற
தொண்டைவாயுமைபிணைபாகனார்மலர்ப்பதத்தின்சேவை
கொண்டனைநின்னைநேர்வார்குவலயத்தெவரேயென்றுந்
தண்டலில்கருணையோடுந்தழுவினனெனவடமாதோ. ௯௫

தழுவினேன்றன்னைத்தானுந்தழுவியுள்ளன்புகூர்ந்து
வழுவிலாக்கிரியினுற்றவாமெல்லாமெழுத்திப்பின்னர்ப்
பழுதிலாப்பூசகனன்பால்விடைபெற்றுமீண்டு
குழுவியவனஞ்சூன்பண்ணைக்கூவனபாரகரையுற்றார். ௯௬

அன்னகர்நண்ணினுள்ளோரனைவருமெதிர்சென்றேத்தி
மின்னவிர்பதந்தூநீரால்விளக்கினமராசரித்து
மன்னியவன்பினோடுவணங்கலுங்கருணைகூர்ந்து
துன்னியகிளைஞர்சூழத்துலங்கவாண்டனரப்பவேலை. ௯௭

இந்திரன்காதல்கூருமெழிலவாம்பலவுமெய்துஞ்
சந்தையூர்தன்னின்மேவித்தருமுறையுலகங்காக்கும்
விந்தைசேர்புயக்கூழப்பவேந்தன்றன்னிளைஞரோடும்
வெந்திறற்படைஞரோடுவிருப்புடன்வந்துகண்டான். ௯௮

மணிபொறைவிரைததவிஞ்சிவேணாருமேவரையூரி
லணிவருஞ்சீர்த்தியாகவரசர்களெவரும்போற்றத்
துணையறமன்னனாடாளுந்தும்பையர்சாமிபூமன்
பணையொலிமுழங்கச்சேனைப்பரவையான்வந்துகண்டான். ௯௯

பல்வளஞ்செறிந்திலங்கும்பாப்பையாபுரத்தின்மேவி
யெல்லையில்செல்வமுற்றோர்யாவரும்வந்துகண்டார்
நல்லறஞ்செழிக்குந்தெய்வநாயகபுரத்திலுள்ளோர்
சொல்லருமகிழ்விற்கண்டார்சுந்தரமூர்த்திதன்னை. ௱

இந்தநல்வசனங்கேளாவெழிற்றவம்புரிந்துமீண்ட
சுந்தரமூர்த்திசெய்யதுணைப்பதம்பணியவெண்ணிக்
கந்தமார்பொழில்கள்சூழுங்கற்றூழநகரினின்று
மைந்தருமற்றுளோரும்வரிசையின்வந்துகண்டார். ௱௧

பின்னும்பற்பலவூர்நின்றுபெருங்களிப்புடனேவந்த
மன்னருமற்றுளோருமலர்ப்பதம்போற்றிநிற்பத்
துன்னியவன்பினோடுஞ்சுந்தரமூர்த்திநோக்கி
யன்னவர்தமையெல்லாமிருக்கவென்றருளிச்செய்தே. ௪௨

துனியறவிருக்குங்காலைத்தும்பையைச்சாமிபூம
னணிமுகமலர்ந்ததெல்லோருங்கேட்பதாய்நவில்வான்மிக்க
கனிவுறுதயைத்திரளொன்றுயகை ர்சயிலந்தனனிற்
புனைநலத்துற்றுமீண்டவாறெலாம்புகலுமென்றான். ௪௩

அன்னதுமொழிகேட்டாவகரிருமகிழ்வினோடுந்
துன்னியகருணைமிங்கசசொல்லுவராமேனனிற்
றன்னரிகரில்லாதோர்குர்சரூரபால்வரையினையதித்
தொன்னலம்பெரிதுநிற்கத்துராணமுதநாழுதவாறம. ௪௪

பத்திமிகக்கவரான்ஞானமபடரவவ்வரயினருந்
சித்தர்கள்பரவவைருந்திருவையரவுருடைப்போற்றி
யித்தலத்தெய்தியன்னதானமாமியற்றுகெண்ணுச
சிந்தசன்றனனைக்காய்நமோவாறுதிருவருட்புரிந்தவெல்லாம். ௪௫

கூறலுமவெற்றிமிக்ககூபப்பாருமனோடு
மாறிலாசசீர்த்திமேனமேல்வருநங்குர்தும்பயமீப
னீறிலாசசெலவாறுமெப்துமனைனத்னின்றும்பேர்
வேறுவேறுள்ளோராயாருரிகமெிர்ந்திருந்தாமாதோ ௪௬

சுந்தரரருளாலாங்கட்டொகுத்தரெவாக்கும்பின்னும்
வந்தவாவருவோர்க்கெல்லாமவரிசைபிறிருக்கையாற்றி
யந்தமிலோனதிதின்சாலைகனடைவினுஞ்ச
சிந்தையிற்களிப்பானோக்கிசேர்ப்புடனிருந்தகாலை. ௪௭

விடைபெற்றுமீண்டபடலமுற்றிற்று.

---

ஆக படலம் - ௧௫-க்கு-திருவிருத்தம் - ௭௬௫.

உ

சிவமயம்.

# அன்னதானப் படலம்.

இனிதுறச்சுந்தரமூர்த்திதந்திருவாய்மலர்ந்தருள்செய்யேவலாலே, நனிபருப்புந்தண்டுலங்காய்வகைகணறுநெய்க்குடங்கள்பாற்குடங்க, பிணியகற்றுமோர்க்குடங்கடயிர்த்தாழிவெற்றிலைநற் றுவர்க்காய்மிக்க, பணிவரைகள்பலவவணிற்படர்ந்ததெனப்பல்பொருளும்பரிவிற்சேர்த்தார்

வேறு.

ஆயகாலையரிசிகழுந்தநீ
ரேயகாலைநிறைவுசெய்தேகியே
தூயசோலைகள்சூழ்வுறும்பண்ணையிற்
பாயுநட்டபயிர்கடழைக்கவே ௨

அட்டினன்மனையார்நெடுந்தூமமே
விட்டுக்கார்நிறந்தேநகுமியலது
வட்டநேமிவரைநின்றெழுந்துவிண்
டொட்டுலாவுறுஞ்சூன்முகில்போலுமே ௩

ஒள்ளிதாகியவோதனக்குப்பல்கள்
வெள்ளிமால்வரையென்னவிளங்குவ
தெள்ளிதானபருப்பிரசஞ்சிறந்
தெள்ளருங்கறியாவுமமைத்தனர் ௪

பாயசத்தொடுபாங்குளபச்சடி
யாயகூட்டுக்கறிகளமைத்தனர்
தூய மாங்காய்த் துவட்டலும் பூசணிக்
காயுங் கத்தரிக் காய்க்கறி செய்தனர். ௫

கன்னி யின்னறுங் காயைப் பொரித்தனர்
பின்னும் பற்பல் கறிகளும் பெட்புறக்
கன்ன லொன்றிற் கடிதமைத் தாரந்த
நன்னகர்க்கணறுமணம்வீசவே. ௬

முன்னை நாணள னென்னு முடியுடை
மன்னும் வீமன் மடைத்தொழில் செய்தது
மின்ன வன்ன மவைத்தவர்க் கீடல
வென்ன வுற்றவர் யாவருங் கூறவே. ௭

கண்டு சுந்தர மூர்த்தி களிவுற
வுண்டி கொள்பவர் யாவரு முண்கவெண்
றெண்டி சாமுகத் தெங்கணுங் கேட்பதாய்க்
கொண்ட னேர்முழ வங்கு றிருக்கென. அ

முரசின் பேரொலி கேட்டலு மொய்சடை
யரன்மெய் யன்ப ரநேகரும் வந்தனர்
புரியு மாதவப் புண்ணியர் வந்தன
ரிரவ லோர்கள் பலரும்வந் தெய்தினர். கூ

கண்ணி லார்களுங் காலிலா முடவரு
முண்ணி கழ்ந்தவு ணர்வறியார்களு
மண்ணின் மேற்றவழ்ந் தேவரு வோர்களு
மெண்ணி லோரங் கிரிதும வெய்தினர். க0

காது கேட்கி லருங்கையி லோர்களு
மாதுலர்த் தம்பம யாதுமில் லோர்களு
மோதும் வார்த்தையி லூமை யுருப்பிலர்
தீதின் மூப்பின ருமபலர் சேர்ந்தனர் கக

தனது நாயகன் வீந்தவா முன்றருந்
தனைய ரோடவண் சார்குவ ரார்ப்பினு
மனையி லாடவர் மைந்தரைக் கூவிக்கொண்
டினிதின் வைகுதற் கெண்ணியுற் றாரரோ. க௨

இந்த வாறுபல ருவ்வந் தெய்தவே
முந்து சுந்தர மூர்த்தியும பார்த்துநற்
சிந்தை யிற்களிப் பாற்றிரு நீறவண
வந்து ளோர்க ளெவர்க்கும் வழங்கியே. க௩

வந்த மெய்யடி யார்க்கு வரிசையான்
முந்த வாற்று முறைகள் புரிந்துபின்
னந்தமில்லா னன்பர்க்குப் போககந்
தந்திடும் மெனச் சாற்று மளவினே. க௪

வேறு.

அரனடி யவர்கட் காங்க ணாக்கிய வடிசி றன்னைக்
கரமிசைக் கூடை கூடை யாகவே கடிதி னேந்திப்
பரவுறு மடைகண்மீது படைத்துச் சர்க் கரையி னோடு
நிரை நிரையாக வாழைக் கனிகண் மாங்கனி நிறைத்தே. க௫

அப்பழம் வடைகண் மிட்டா யாறுசுவைக் கனிக ளோடுஞ்
செப்பரு பருப்பு நெய்யுந் சிற்சிலர் டைக்க லுற்று
ரொப்பிலான் பாறேன் மற்று முதவினர் சிலர்க ளன்பா
லப்பணி சடையோ னன்ப ரகமகிழ்ந் தருந்து மாறே. ௧௬

அனமருந் தினர்க்குப் பின்னு மனமளிப் பார்கள் சில்லோர்
பினும் புளிங் கறியினோடும் பொருகிய தயிரு மோரு
மினிதுற வளிப்பர் சில்லோ ரவரவர்க் கியையுமாறு
கனிவுறு பண்ட மெல்லாங் கனிவுற வளிப்பர் சில்லோர். ௧௭

இட்டவர் தமக்குப் பின்னு மனமிட விரைந்து செல்வோர்
திட்டெனக் கறிகளைக்கச் செல்பவர் தயிரோ டீவோர்
முட்டுவர் மூரரென்ற முடுகுவர் கைமாற் றாகத்
தட்டுவ ரனந்தை யுண்போர் தமமன முவக்கு மாறே. ௧௮

இன்னணம் படைத்துப் பின்னா ரினிடபா யசமு நல்கிக்
கன்னலின் சாறுமற்றுங் கனிவுட னருந்த வூட்டிப்
பன்னரு முபசாரங்கள் பலபல புரிந்த பின்னர்
நன்னல மாகவன்னோ ரருந்திநன் கமர்ந்த காலை ௧௯

## வேறு.

அரசர்மற்று மவணனை ந்தோர்க்கெலாம்
வரிசையாக வழங்கின ரோதனம்
பரிவுதீரப் பலருமுண் டொன்சுவை
விரவியுண்டவ ரொத்து விளங்கினர். ௨0

அன்னசாலை யநேகம் படையுடன்
கன்ன னேர்கொடைக் காயபூபதி
மன்ன வேமகிழ்வால்வந் தவர்க்கெலா
நன்னலந்தரு மோதன நல்கினர். ௨௧

முல்லை மாநகர்மேவி மனுமுறை
நல்லறத்தொடு நானிலங் காத்தருள்
சொல்லரும் புகழ்ச்சொக்கலிங் கேந்திர
னெல்லையில் படைசூழவந் தெய்தவே. ௨௨

மனதிற்சுந்தர மூர்த்தி மகிழ்வுட
னினிய போநகம் யாருமுண்பீரெனக்
கனிவு டன்வந்த காவலன்சேனையு
நனிமகிழ்ச்சியி னல்விருந் துணடனர். ௨௩

விருந்தருந்தி வியந்துறும் வேளையிற்
பொருந்து நல்வளப் போடி நாயக்கனூர்த்
திருந்துசீர்க்கி யுடைச்செக வேந்தர்கோன்
வருந்தலில்படை யோடும்வந் தெய்தினன் ௨௪

சிறந்தமாப்படை சூழச்சேத்தூரில்வா
முறந்தவாமனுமங்குவந்தெய்தலுந்
திறம்மிகுந்தசிவகிரியன்னயமா
பெறும்படைத்திரட்பெட்புடனெய்தினன். ௨௫

பார்த்துசுந்தரமூர்த்திபரிவுட
னீர்த்தவேணிநிமலனைநெஞ்சகந்
சேர்த்தியேதிருநீற்றினைத்தூவிய
மாத்திரத்தில்வளர்ந்தனவோதனம். ௨௬

வந்தவேந்தர்க்குமாப்படைவீரர்க்கும்
பந்திபந்தியிற்போனகம்பாங்குடன்
றந்தகாலையினும்மனந்தாழ்விலா
துந்திமேலுயர்ந் தோங்கியதாமரோ. ௨௭

நாட்டுள்ளோருநகரிலுள்ளோர்களு
மாட்டிற்பற்பலகருநைமாந்தரு
மீட்டுமீட்டும்விரும்பிவந்தோர்களும்
வாட்டந்தீரவமுதினைமாந்தினர் ௨௮

பின்னுமன்னநற்பெற்றியீறின்றன
மன்னும்வெள்ளிமலைநிகராகவே
துன்னுகின்றதுகண்டுதொன்னீதியார்
மன்னர்பின்னெவருமகிழ்வெய்தியே. ௨௯

இனையவாச்சரியமமெந்தநாளினுங்
கனைகடற்புவிமீதினுங்கண்டில
முனைநிகழ்ந்ததெனமொழிந்தாரிலை
யெனமகிழ்ந்திவையீசன்செயல்கொலோ. ௩௰

நவிலுங்காலையினாட்டுப்புறத்துளார்
குவிதலாயந்தக்கோநகரெய்தலு
மிவர்கட்கன்னமினிதளிமின்னென
நவையிலோதனமியாவர்க்குநல்கினர். ௩௧

தேவபோனகந்தேக்கவுண்டாரென
யாவருங்களிப்பெய்திநல்லன்புடன்
றாவரும்புகழ்ச்சுந்தரமூர்த்திதம்
மேவருங்கழல்போற்றிவிளம்புவார். ௧௨

## வேறு.

நன்றினிக்கோவிற்கென்று நவிலுநெற்பண்டியீர்த்துச்
சென்றுறுமெருதுசெம்பொற்றிரவியமுதலவாய
குன்றலில்பொருள்கட்கியாங்கள்கூறருங்காவலாக
வென்றும்வாழ்வுறுவோம்வேறொன்றெண்ணுவதில்லையென்றார். ௧௩

போனகமுண்டோர்க்கெல்லாம்புனைநறுங்கலவைச்சந்த
மேனலமாகத்தந்துமென்மலர்ச்சரங்களீந்தே
யானவெள்ளிலைப்படைக்காயன்புடனருளலோடிந்
தானலமாகவாங்கட்சகலருமினிதுபெற்றார். ௧௪

அருந்தவர்முதலோர்க்கெல்லாமாடையாபரணத்தோடும்
திருந்துபல்பொருளுமன்னோர்நினைவயிர்களிக்குமாறு
வருந்தலின்மனத்தினோடும்வழங்கினன்புவிக்குவந்து
கருந்தடமுகில்களொன்றுங்களிவுறப்பொழியுமாறே. ௧௫

இடைகடைமுதலென்றேதுமெழிலிமிகும்வள்ளலானோர்
படியிடையினையவாறுபகரநம்புரிந்தாரில்லை
துடியிடையுமையாள்பாகனன்புறுந்தொண்டரன்னக்
கொடைநிகரியற்றுவோரிக்குவலயத்தெவரேயென்னு. ௧௬

தன்னிகரிலாவென்றித்தும்பையசாமியன்பாற்
பொன்னவிரரிமுகத்துத்தண்டிகையுடன்பல்பொன்னும்
பன்னலவிளைவுமோங்கும்பூமிநற்பண்ணையெல்லா
மன்னவர்மன்னன்சீர்த்திவளரச்சுந்தரர்க்குத்தந்தான். ௧௭

வம்பவிழ்மாலைவேயுமார்பினன்பினுங்கூமேந்திர
நம்பரனருள்பெற்றோங்குநல்லசுந்தரமூர்த்திக்குச்
செம்பொனுற்குடைசுருட்டிசேர்ந்துறுபொருள்களியாவு
மும்பரும்வியப்பதாகவுதவினனென்பமாதோ ௧௮

மண்டலம்புகழ்சாப்பிட்டேமருவுங்காமயமகீபன்
விண்டலம்விளககுமீன்களெனமிளிர்முத்துமாலை
தண்டலிலணிகண்மற்றுஞ்சாற்றுதற்கரியபொன்னுங்
கொண்டனோர்கரத்துவள்ளல்கொடுத்தனனென்பமாதோ. ௧௯

மருவலர்தம்மைவென்றுமநுமுறைசெங்கோலோச்சிப்
பரிசனத்துடனேமுல்லைபதியமர்வேந்தன்பார்த்து
சரிகைசேர்ந்திலங்கும்பட்டுவெத்திரஞ்சகலமான
வரிசைசுந்தரமூர்த்திக்குமகிழ்ந்தினிதளிப்பதானன். ௬0

மற்றுளவேந்தரியாருமவரவர்மனத்திலன்பா
லுற்றபல்பொருள்களெல்லாமுதவினர்செல்வமோங்குங்
குற்றமின்மனைநல்வாழ்க்கைகொண்டவர்மனத்திலன்பு
பற்றசுந்தரமூர்த்திக்குப்பலபல்காணிக்கையீந்தார். ௬க

இனையனசிகழுங்காலையெழின்மிகும்பனையூர்வாழ்
தனைநிகரில்லாச்சீர்த்திதழைக்குந்துப்பையசாமி
கனைகழலரசர்மற்றோரியாவருங்கனிந்துகேட்ப
மனதினிற்கருணைபொங்கிமகிழ்ந்திவையுரைப்பதானன். ௬உ

இவ்வறமெந்தநான்றும்விளரிதுறவரவதாகச
செவ்வியவருடந்தோறும்வருந்திரைப்பொருளிற்காற்பங்
கெவ்வமின்முகநாளுமீதுமென்றுரைக்கமற்றோ
ரவ்வகையாகயாமுமளித்துமென்றுரைப்பதானார். ௬௩

மற்றுளோரெவருந்தங்கண்மனத்திடையுவகைகூர்ந்து
பற்றுடன்யாங்களாற்றும்பயிர்த்தொழில்விளைவுதன்னிற்
குற்றமிலறத்திற்கைந்திலொருபங்குகொடுப்போமென்று
வெற்றிசேர்வணிகர்மற்றோரம்முறைவிளம்பினரே. ௬௪

ஆயவைபுகன்றெல்லோருமகத்திடைமகிழ்ச்சிபொங்க
மாயைதீர்சுந்தரேசர்மலர்ப்பதம்பணிந்துபோற்றித்
தூயமாதவர்களீசன்றொண்டர்கடுகடரன்பர்
மேயமெய்யடியரோடும்விருப்புடனுறைவதானார். ௬௫

அன்னதானப்படல முற்றிற்று.

ஆ படலம்-கசு-க்கு திருவிருத்தம்-அ௬௰.

உ

சிவமயம்.

# பரிகலப்பிரசாதமகிமைப்படலம்.

—(*)(*)(*)(*)—

காருவந்துபல்லுயிர்க்குநல்குமாறுகருணைகொள்சுந்தரமூர்த்திகனிந்தவன்பரா, னீருலவுகடலாடையுலகுளோர்க்கு நைவுறவோதனமருளி மகிழுங்காலைச், சீருயர்கட்டிக்குளத்திராமலிங்க தேசிகராங்கெய்துதலுஞ்சிறப்பான்மிக்க,தாருலவுமேவர்தம்முதலெவருமேத்தித்தொழுதோராசனத்திற்சார்வித்தாரே. க

அந்தவாதனத்தின்மிசையிருந்து செய்யவருந்தவர்சுந்தரமூர்த்திவதனநோக்கிச், சிந்தைமகிழ்வாற்சதுரவரையினெய்தித்திரும்பியவாறனைத்தையுநீசெப்புகென்னச், சுந்தரமூர்த்தியுமவரைவணங்கியந்தத்தொலவரையினிகழ்ந்தனமற்றனையுஞ்சொல்லப், பந்தமறுமுனிவர்மிகு மகிழ்ச்சியெய்திப்பாவேந்தர்முதலெவர்க்கும்பகர்வதானார். உ

இன்னணஞ்சுந்தரமூர்த்தியணிதிருவடியடைந்துமனத்தானத்தினன்மைபெற்றீர், நன்னலமுற்றிரும்பவங்களைத்துப்பு தீர்ந்தீர்நானிலத்திலுமக்கிணையார்நவிலுங்காலை, யன்னதினுமதிகபலனுய்த்ததேய்ந்ததானடியர்பரிகலத்தின்மிச்சிலொரு, முன்னுறுகுமரியகுட்டமுடலெண்குற்றமுற்றவருமருந்திலகன்றயாவதாபால. ௩

ஆயபலபாதகமுமகலுமென்னுவரனுமைக்குக்கூறியதையறைதுநீவிர், தூயமனத்துடனிருந்துகேண்மின மேனாட்டிலங்கியுயர்காந்திருவர்க்கேந்தலான, தேய்விலபுகழுகுவென்பான்மகிழ்வாலெந்ததேயத்தினதிசெயமுந்தெரிவானுன்னி, யோயவிலகதிப்புட்பகவிமானத்தேறியுயர்ந்தவொருவரையின்மிசையுற்றகாலை. ௪

வேறு.

அம்மாமலைமீதிலமர்ந்தருள்வோன்
செம்மான்கரத்தேந்தியதேவர்தொழு
மெம்மான்மகிழ்பூசையியற்றுதல்செய்
மெய்ம்மாதவனவ்விடைமேவுதலும். ரு

அவண்மேவியகந்திருவாக்கரசன்
றவன்மேனியெழில்கண்டுதன்மனதி
லிவன்போல்பவரெவ்வுலகத்துமிலர்
சிவனேயிவனென்றுதன்சிந்தைகொளா. சா

அன்போடவருந்தவன்றளின்மிசை
துன்போடப்பணிந்துதுதித்துவினோ
ரென்போடரவம்புனையீசனைமிக்
கின்போடிதயத்திலிருத்தியநீ. எ

மின்னார்திருமேனிகொளெம்பெருமான்
றன்னாருண்மேவுதவத்துளவா
வென்னாவிவணுற்றதெனக்கிசையா
யென்னாமகிழ்வெய்தியவன்புகலவான். அ

இவண்மேவியதன்மையியம்புதுங்கேள்
பவநாசனெனுமறைநூல்பகருஞ்
சிவனிவ்வரைமேற்றிருலிங்கமதாய்
நவையின்றியெந்நாளுமிருப்பதுவே. ௯

முன்னாட்புரமூன்றெரிசெய்தபிரான்
றன்னாற்புரிதன்மைகள்யாவையுமே
யென்னாற்புகறற்கெளிதன்றெனினுந்
தொன்னாணிகழ்வுற்றமைசொல்லுதுங்கேள். ௰

மேனாளவன்செய்வினையின்வலியாற்
கூனாயுடற்குட்டமிகுந்துளதா
யூனாறியபுண்ணொடுகண்ணிலதாய்த்
தானாயுழல்வானித்தரணியிலே. ௧௧

விரதன்னெனுநாமங்கொள்வேதியனோ
கரமின்றிக்கலிக்கோரிருக்கையதா
யொருநூறுகிழ்வுகொளளும்முடையான்
றிருவில்லவனிவ்வரைசேர்ந்தனனே. ௧௨

இவனெய்தியிருப்பதுணர்ந்திலனோ
நவைநீங்கியகின்னரனின்னகமவாழ்
சிவனன்புறத்தீஞ்சுவையோதனமாங்
கவனைவேதனம்புரிந்தானபினே. ௧௩

வேறு.

நந்தமீசனறனக்குநன்காற்றிய
வந்தநற்பிரசாதமருந்தியே
சிந்தையன்பிற்பரிகலசேடத்தை
யிந்தநலவரைமீதெறிந்தேகினன். ௧௪

அந்தக்கன்னித்தளிரவனெய்திய
வந்தணாளன்றனக்கயல்வீழ்தலு
மூந்தும்வெம்பசியாலுளம்வாடிமெய்
நொந்துளான்செவியாலுற்றுநோக்கியே. ௧௫

ஒருகையாலவனுற்றுத்தடவிநற்
பரிகலத்தைப்பரிந்துகொண்டானமுகம்
தரியநன்மணங்கண்டுசுவைத்தின
வருநறுஞ்சுவைபார்த்துடன்மாந்தினான். ௧௬

அன்னகன்னித்தளிரினைப்பியத்தங்ஙனே
றின்னவேசெய்ததீவினையோடவன்
மன்னும்வெம்பசிதீரதுமகிழ்ந்தன
னின்னலசுவைதயுண்டவரெனனவே. ௧௭

பொருந்துமுன்பிணியாவும்புறஞ்செல
வருந்துமப்புறைதிறைமாறவே
திருந்துகண்ணொளிமிகவெனத்தோன்றவாங்
கிருந்தனனல்லிளமையுமெய்தியே ௧௮

இன்னவாயவெழிலுருவெய்துதற்
கென்னமாதவமயாம்புரிந்தோமென
வுன்னியேயிவனுற்றுயர்கோவிலின
மன்னியீசனமலரடிபோற்றியே ௧௯

மலைவிலோன்றன்மலரடிக்கன்பனுண
ணிலைகொலாநமக்கிவ்வுருவுய்த்ததென்
றலகிலாமகிழ்வெய்தியகனறுநீ
ளிலைகொளோர்மரத்தினமருங்கெய்தினன். ௨௦

பின்னுமன்னபெருந்தவனுச்சியிற்
பன்னருங்கதிர்ப்பாநுவநெய்தலுங்
கன்னலின்சொலிபாகன்கனிவுற
வன்னனைவேதித்தாங்கவனுண்டரோ. ௨௧

பரிகலத்தினைப்பக்கத்துவீசலு
மரியவேதியனங்குற்றுநோக்கியே
விரைவினெய்திவிரும்பியருந்திநற்
பொருவிலாவுயர்பொன்வடிவாகினான். ௨௨

## வேறு.

கன்னல்விற்கொண்டதனெனக்கவின்கொள்வேதியன்றனைக்
கின்னரன்பரிந்துநோக்கிக்கேடிலாத்தவத்துளோய
யென்னகாரியத்தினிங்ஙனெய்தினானெனாமனத்
துன்னியன்னவன்மருங்கினுற்றுநின்றபோதின்வாய். ௨௩

வந்துநின்றகின்னரன்மலர்ப்பதத்தின்முட்டியுறச்
சிந்தையன்புகொண்டுபோற்றிநின்றதேசுளான்றனைப்
பந்தமற்றவிவனுமன்புபற்றநோக்கியையநீ
ரெந்தநாடிங்குற்றதன்மையாதுகூறுமென்னவே. ௨௪

ஐயவெற்கோர்நாடுமென்றியாகமெங்குங்குட்டமா
யுய்யவேதும்வழியிலேனவேறொன்றுநோக்கவிழியிலேன்
செய்யுமாறுமுணர்கிலேன்முன்செய்தசெய்யவினையினாற்
பையவேகியுந்தவழ்ந்தும்படர்வரைக்கணெய்தினேன். ௨௫

இந்தமால்வரைக்கணுற்றவீசன்பூசைசெய்தநீர்
முந்தவீசும்பரிகலத்தின்மூழுமெந்தனபவமெலாஞ்
சிந்தியிந்தவாறுமேனிதிகழவெய்தினேனெனா
வந்தவார்த்தைகேட்டகமமகிழ்ந்துபின்னரறைகுவான். ௨௬

ஓங்குசைவர்பரிகலம்பெற்றோர்க்குவிண்ணோருறையுளுந்
தீங்ககற்றிமேவுமென்றுசெப்புநாலுவேதமும்
பாங்குடன்றநெஞ்சிலன்புபற்றவன்னோர்ப்பணிகுவோர்
நீங்கரும்பதத்திலுற்றுநீடுவாழ்வரென்பரால். ௨௭

## வேறு.

ஆதலாலீசனன்றொண்டர்பெருமையாரறிந்துசொல்வார்
வேதங்கள்விதித்தற்கில்லைவிண்டுவுமுணரற்பாற்றோ
சீதமாமதியஞ்சூடுஞ்சிவனறிவானேவன்றோ
வோதுதற்கெளியவன்றாலறிந்தவாறுரைப்பக்கேளும். ௨௮

ஆணவநீத்தவன்பர்சன்னிதியடையப்பெற்றோர்
பூணரும்பவங்கடீர்ந்துபுண்ணியராகவாழ்ந்து
வேணசித்திகளும்பெற்றுவிண்ணவரெதிர்சென்றேத்தக்
காணருங்கதியிற்சேர்வர்பின்னுநாங்கழறக்கேண்மோ. ௨௯

தொண்டர்தமுருவேயீசன்றுகளறுவடிவமாகும்
விண்டவெவ்வினையோர்மற்றோர்மெய்யினைக்கையாற்றீண்டிற்

றண்டலில்பவமுஞ்சென்மசாகரந்தனையுநீந்தி
யண்டர்கடமக்குமேலாயமர்வரென்றுரைக்கும்வேதம். ௩0

அண்ணலார்மகிமைதன்னோடன்பர்கள்பெருமையெல்லாம்
பண்ணுயர்வேதநான்கும்பகர்வதற்கரியவாகு
நண்ணருங்கல்விதேர்ந்தநாவிரண்டாயிரத்துந்
திண்ணஞ்சேரனந்தனாலுஞ்செப்புதற்கியலாதன்றே. ௩௧

எங்கணும்புகழ்பெற்றோங்குமீசன்மெய்யடியரானோர்
பங்கமின்மேவிதன்னைப்பரிக்கவேண்டாமன்றோ
செங்கைகள்வீறியாண்டுஞ்செல்லுறுங்காலையாக்கை
தங்குகால்படப்பெற்றோர்கள்பவமெலாந்தவிருமன்றே. ௩௨

வேறு.

இன்னனவாகமுன்னிகழ்ந்தவின்கதை
யுன்னருந்தவத்தீர்நாமுரைத்தும்வேடர்கண்
மன்னியமரபினன்புரிந்தமாபவந்
தன்னையிவ்வாறெனச்சாற்றலாவதோ. ௩௩

அனையவனொருபகலடவியெய்தித்தன்
முனைவருமுயிரெலாமொய்ம்பினால்வதைத்
தினியகூவிளநிழலெய்தலுற்றனன்
றினகரனுச்சியிற்சேருங்காலையே. ௩௪

கூவிளநிழலிடையிருந்தவேடர்கோ
னாவலாயிவ்விடையரியதண்புனன்
மேவவோர்தடம்வெகுவிரைவினிற்றுமென்
றேவலாளருக்குரைத்தேகினனரோ. ௩௫

மன்னவன்கூறியமாற்றங்கேட்டவண்
டன்னிகரில்லதோர்தடமுண்டாக்கினர்
பின்னருஞ்சிலதுநாட்கழித்தபின்றையோர்
நன்னலத்தவத்துளானவணிமண்ணினான். ௩௬

வெய்யலிற்சென்றுளம்வருந்திவேர்வெழு
மெய்யினனாரும்புனல்விரும்பித்துய்த்துப்பின்
மையகன்றொளிர்வில்வமரத்தினீழலிற்
றுய்யவன்மகிழ்வொடுதுலங்கும்போதினே. ௩௭

வேடர்கட்கரசனும்வேட்டையாடியக்
காடெலாமலைந்துதண்ணீரின்காதலா

லோடிவந்தத்தடத்துதகமுண்டதன்
மாடுறுவில்வமாநிழற்குவந்தனன். ௬௫

அத்தவத்துயர்ந்தவனருகினெய்தலு
மெய்த்தவன்மேற்படுகாற்றில்வேடர்கோன்
மித்தையாமுடலிடைக்கழுவவெம்பவ
மத்திகள்போலவெந்தயலின்வீழ்ந்தவே. ௬௬

கண்டனன்வேடர்கட்கிறைவன்கண்களாற்
றண்டலிலிவன்பெருந்தவனென்றுன்னியே
தொண்டனுனக்கெனத்தொழுதகாலையி
லண்டருமகிழ்தவனறைகின்றனரோ. ௬௭

முனனாநீபுண்ணிய முயன்றதன்மையா
லின்னகூவிளநிழலெய்தப்பெற்றனை
யுனனுமிவ்விலையினீரோர்துளிப்பெறின்
மன்னியபாவங்களகோடிமாயுமே. ௬௮

இனையவிலைவந்துறுமிலைகணமூன்றுமே
வினையகவீசுரன்விழிகண்மூன்றெனவு
மனையதுவேயரனுருவமமென்றுந்
தனைநிகரிறிதிலாமறைகள்சாற்றுமால் ௬௯

இம்மரத்தொருவருக்கனனமீந்திடில்
வெம்மைதீரரவெகுகோடிபோக்கனுந்
செம்மையினுதவியபலனைசிறப்புறு
மெய்ம்மறைமுறையியற்றெனவிளம்பியேகினன். ௭௦

தவனுரைமுறைப்படிதனதுசிந்தையி
லவமகனறிடவனதானமாற்றியே
நவையகல்சுற்றமுநன்குசூழ்வரச
சிவன்மலர்ப்பதத்திடைசேர்ந்துளானரோ. ௭௧

## வேறு.

நான்மறையுணருவோர்தநற்குலத்துதித்தோன்கேட்ப
மேனலமானகின்னராதிபனவிரித்தவெல்லாந்
தானுயர்சைவனாருகனக்குரைத்தானென்றீசன்
றேன்மொழியுமைக்குமேனாள்செப்பியவுண்மைகண்டீர். ௭௨

என்றிவையனைத்துங்கூறியிராமலிங்கையரேக
நன்றெனவுவந்தெல்லோருநனிமகிழ்ந்திருக்குங்காலை

யொன்றியநோயாசெய்யவுருப்பிழந்தவர்களெல்லாஞ்
சென்றுமேலவர்கணீத்தபரிகலஞ்சிறப்பினேற்றார். ௬௬

ஏற்றவையருந்தித்தம்பாலிருங்குறையனைத்துநீங்கி
மேற்றிகழ்வடிவத்தோடுவிளங்கியசெயலைநோக்கி
நாற்றிசையிருந்துற்றோருநம்பரனடியார்பாதம்
போற்றிசெயதிவர்கண்மேன்மைபுகலுதற்கரிதாமென்றே. ௬௭

சுந்தரமூர்த்திசெய்யதுணைமலர்ப்பதங்கள்போற்றி
வந்தவரெவருந்தங்கண்மாநகர்க்கேகப்பின்னர்ச்
சிந்தையின்மகிழ்வுபொங்கத்தினந்தினமவருமேவோர்க்கெல்லா
நந்தலிலன்னதானநன்குறவியற்றினரால். ௬௮

இனையனநிகழுநாளிலிலங்குஞ்சுந்தரரன்பார்ந்து
மனையறம்வளர்க்குமாற்றான்மாநிலத்துறைவோர்க்கெல்லாந்
துனியகல்கருணைநல்கத்தொல்புவிவலமதாகப்
புனைநலத்துடனேவந்தசெயலினைப்புகலலுற்றாம். ௬௯

பரிகலபிரசாதமகிமைப்படல-முற்றிற்று.

—(*)(*)(*)(*)—

ஆக படலம் ௭க்கு திருவிருத்தம் - ௮௮௯.

## புவிவலஞ்செய்தபடலம்.

அத்திருநகரின்கீழ்பாலழகியகோவிலாற்றிப்
புத்திரருடனுமிக்கபுகழ்பெறுங்கிளைஞர்பின்னு
மித்திரராகியுள்ளோர்மேவுறமேவுவோர்க்கு
நித்தியமன்னதானநிகழ்வுறவருளிச்செய்தே. ௧

கேசரிமுகத்தையுற்றகிளரொளிமானமூர்ந்து
மாசில்சாமரைசுருட்டியாதியவரிசைசூழப்
பேசரும்பல்லியங்கள்பிரளயங்கூடுநாளில்
வீசுறுதிரையாராழியொலியெனமுழக்கம்விம்ம. ௨

பரிசனஞ்சூழ்ந்துசெல்லப்பாவையர்பல்லாண்டோதப்
பரிவினொற்பொதிகடாங்கற்கியைந்தபண்டிகள்பின்போதத்
திருவுறைமார்பனுங்கட்டிகழுங்கோவிந்தநல்லூர்க்
கருமையினெய்துந்தன்மையறிந்தகமகிழ்வுபொங்க ௩

சகலசெல்வமுமுற்றோங்குந்தாண்டவராயபூமன்
மகவுடனெதிர்சென்றேத்தித்தாளிணைபணிந்துசெய்ய
முகமன்செய்தழைத்தின்மேவிமொய்மலரமளிமீதின்
மகிழ்வுடனிருத்திப்பின்னர்வழங்கினன்விருந்துமன்றே. ௪

சுந்தரமூர்த்திபக்கற்றுன்னினரெவருமாங்க
ணந்தரநாட்டிலுள்ளவமிர்துண்டுகளித்தார்மானச்
சிந்தையின்மகிழ்ச்சிகூரந்திகழனமருத்திப்பின்னர்ச்
சந்தொடுமலர்தாம்பூலஞ்சகலர்க்குமகிழ்வினல்கி. ௫

ஒருபத்துக்கோட்டைநெல்லும்பொருந்திரண்டும்பொன்னுந்
தருநிகர்கரத்துவள்ளறாண்டவராயனல்கப்
பரிவுடனேற்றுமற்றோர்காணிக்கைபலவுங்கொண்டு
திருமலிநகரினுள்ளோர்யாவர்க்குந்திருநீறீந்தே. ௬

சுந்தரமூர்த்தியேகந்துங்கியநெறியின்வாழ்வோர்
சிந்தையினுவந்துமிக்கசிறப்புடனெதிர்சென்றேத்தித்
தந்தமக்கியையுமானகாணிக்கைதகவினல்க
நந்தலிறவத்தின்மிக்கோர்நனிமகிழ்வுடனேகொண்டு. ௭

கண்டவரெவரும்போற்றிக்களிவிட்டெறக்கக்கனகணல்கக்
கொண்டகமகிழ்வின்மீனுமிகைவளர்கூடமெய்தி
யண்டர்கண்மகிழுஞ்சொக்கலிங்கரங்கயற்கண்ணம்மை
தண்டலில்பதங்கள்போற்றித்தருங்கொடைப்பொழிலிற்சார்ந்தே. ௮

ஓதனமமைத்துவந்தோர்யாவர்க்குமுதவலோடு
மாதவத்தினர்மற்றுள்ளோரெவர்களுமினிதின்மாந்திக்
காதன்மீதூறவன்புகனிந்தவணிருக்குங்காலை
சோதனைதெரியக்கானன்றொல்படைத்திரளோடுற்றே. ௯

சுந்தரமூர்த்திதன்னைநோக்கியேசொல்வானிங்கு
வந்தவர்தங்கட்கெல்லாமனமகிழ்ந்தன்னதானந்
தந்தருளுதிரென்றன்பார்சார்ந்தனம்யாங்களுண்ணப்
பந்திவைத்தினிதினன்னம்படையுமென்றுரைக்குங்காலை. ௰

சிவபரஞ்சுடரைநெஞ்சிற்றுதித்துநற்றிருநீறள்ளி
நவையகலோதனத்தினல்கிவந்தவர்கட்கெல்லா
மிவைநிகரென்றுங்காண்டற்கரிதெனவினிதினல்க
வவர்களெல்லோருந்தேவவமிர்துண்டுகளித்தாரொத்தார். ௧௧

இனையபோகங்கண்மாந்தியின்பமெய்தியவெல்லோர்க்கும்
புனைநறுமாலைசந்தம்பொருவிறுமபூணல்க
வனையகான்சாய்புநோக்கியகத்தினின்மகிழ்ந்துபோற்றி
வினையறுதவத்தோர்க்காண்டுவேண்டுவவருளினனால். கஉ

மற்றுளோரெவருந்தங்கண்மனங்களிகூரியைந்தவாறே
நெற்பொதியொடுபல்பொன்னுநிரைநிரைபருதலோடும்
வெற்றிகொள்சுந்தரேசர்விருப்புடனனைத்துமேற்று
நற்றவரறிஞர்சூழாலயத்துமேவிருக்குங்காலை. கங

வேறு.

வங்கர்சிங்களர்குருகர்சீனர்மராடர்முச்சலரொட்டியர்
கொங்கர்கோசலர்குடகர்குந்தளர்கூர்ச்சரர்கேகயர்கேரளர்
ரங்கராந்திரர்துளுவர்சோனகர்யவனர்கன்னடர்மாளவர்
சிங்கமன்னவர்யாவருந்திறைதந்திறைஞ்சியசெம்பியன். கச

பரிகரிப்படைபொறியெனப்புகல்சதுவிதப்படைபலவுமா
னரன்விருப்புடனுவந்ததிருப்பதியுடனருட்புவிகாவலன
மருவலர்க்கரியேறனையாமநனெனத்திகழ்வடிவுமான
பரிவுறப்பலகலைகள்கற்றுயர்பருணிதற்குயர்நாயகன். கரு

கிடுகிடென்றுலகதிர்வுறும்படிமாமணிப்பொறிகடவுவோன்
திடுதிடென்னவுகார்ந்தவாரிமுழக்கின்மேற்றிகழ்முரசினான்
றடுதடென்றுகுரங்களோதைதயங்குவெம்பரிகடவுவோன்
முடிபுனைந்துயர்வாரிசூழ்புவிமுழுதுமாண்மணிமன்னவன். கசு

புனைநலங்கொளிராமநாதபுரத்தின்மேவுபுரந்தரன்
றனைநிகர்த்ததிடங்கொள்சேதுபதிக்குமற்றிவைசாற்றலு
மனையசுந்தரமூர்த்திதன்னையழைத்திவண்வருவீரென
வினையநற்றிருமனுவுடன்சிலதூதர்தம்மையுமேவவே. கஎ

வேறு.

வந்துதூதர்வணங்கிநற்சுந்தரர்
சிந்தையுட்களிப்பெய்தத்திருமனுத்
தந்தபோதவையார்ந்துத்தயையுடன்
முந்துளோர்க்குமுகமன்கள்கூறியே. கஅ

மதுரைமாநகர்மேவியமாந்தர்கள்
சதுருடன்வந்துதாடொழவாழ்த்தி

பதியையேரவிப்படர்நெறியுற்றுளோர்
கதுமெனத்தொடர்ந்தேகழல்போற்றலும். ௧௯

சிந்தையிற்கனிவாற்றிருநீற்றினைத்
தந்துமிக்கதயையுடன்வாழ்த்தியே
வந்துமன்னகரத்தினமருக்குற
முந்துதூதரிவைமொழிந்தாரரோ. ௨௰

சேதுபூபதிகேட்டுத்திகழ்கய
மீதினுற்றுமிகும்படைசூழ்வர
மோதுமபலவியம்யாவுமுழங்காற்
காதலோடெதிர்சென்றுகண்டானரோ. ௨௧

கண்டுபோற்றிக்கரிவுறுமன்பினுற்
கொண்டுதன்னுயர்கோமனையெய்தியே
யண்டருமகிழானத்தேற்றுவித்
துண்டிமற்றவுவந்தருள்செய்தரோ. ௨௨

அரிமுகத்தவிசையணிகளும
பரிகளுமதிநிறைபிரமபொன்னுநல்
விரிமணிசுடர்வெண்முத்துமாலையும
பரிவுடனபலபாணடிலுநல்கவே ௨௩

இனிதுவாதனையேற்றுயசுந்தரர்
கனிவின்வாழ்த்திக்கடிநகர்மாந்தர்க
ளனைவருமவந்தடித்துவாழ்த்தவு
மனமகிழ்ந்தவாச்காரியுங்கியே. ௨௪

முன்னுறுவகிளையானவர்மொய்மபுடன்
மன்னிவாழும்வளநகரெங்கணுந்
துன்னுமற்குனிசுந்தரரன்பினு
னனலப்படைசூழ்வரநாடியே. ௨௫

முரசுகாகளமெங்குமுழங்கொலி
விரவக்கேட்டவர்மெய்புளகெய்தாற
பரிவிற்சுந்தரர்பாதங்கள்போற்றிசெய
தருளுடன்விடைபெற்றகன்றாரரோ. ௨௬

ஆயகாலையிலாற்றங்கரைப்பதி
மேயபெத்தணபூபதிமெய்யுரை

கூயினனெனத்தூதுவர் கூறலுந்
தேய்வில்சீர்த்தியுளோரங்குசெல்லவே. ௨௭

வே று.

சுந்தரமூர்த்திவந்தாரெனுமுரைசொல்லக்கேட்டுச
சிந்தையின்மகிழ்சசிகூர்ந்துசென்றெதிர்கண்டுபோற்றி
யிந்திராலயத்துக்கொப்பாயிலங்குங்கோமனையினுய்த்து
வந்தவர்தங்கட்கெல்லாமகிழ்வுடனவிருந்துசெய்து. ௨௮

வேண்டியபொருள்களெல்லாம்விருப்புடன்கொடுக்கவேற்றுக்
காண்டகுமேனிவள்ளல்களிப்புடனிருக்குங்காலை
யீண்டியபுகழான்மிக்கவிளாசைமாநகரையாளுந்
தூண்டருவிளக்கயன்றலேவியதூதர்வந்தார். ௨௯

தூதர்வந்துரைத்தமாற்றஞ்சுந்தரமூர்த்திகேட்டு
மீதுறுகாதலோடுமேவினர்ககாசிகூறித்
தாதருதுருக்கும்வெற்றித்தாரபூனைந்தருமொட்டேர்த்ர
ஞதரவாகவைகும்பதிக்கருகமருங்காலே ௩௰

வேந்தர்கள்புகழுமவேர்தன்பரிசுடைவீரர்சூழ
வார்ந்தபல்லியங்களோங்கவன்புடனெதிர்சென்றேந்தி
யேந்தலேயிஞ்சிசூழுமெழினமனைநண்ணுவித்தாங்கட்
சேர்ந்தவர்தங்கட்கெல்லாஞ்சிறப்புடனசனமீந்தே. ௩௧

நித்திலவடமும்பின்னுநிகழ்த்தரும்பொருள்கள்யாவுஞ்
சித்தமிக்குவந்துநல்கத்திருவுளமகிழ்வினேற்றுப்
பத்தியிற்பணிந்தோர்கட்கெல்லாம்பரிவுடனுசிகூறி
யத்திருநகரைநீங்கியருளொடுசெல்லுங்காலே. ௩௨

சிவஞானபுரத்துமாங்கட்சேர்கிராமங்கடோறுந்
தவநெறிச்சுந்தரேசர்தனியுறம்வளர்க்கநல்குந்
தவசங்களனைத்துமவ்வூர்தனிற்களஞ்சியங்கள்சேர்த்துப்
புவியிடைப்புகழ்சேர்வீரபாண்டியபுரத்திலுற்றார். ௩௩

அன்னகர்தன்னிலுள்ளோர்க்கருளுடன்வெண்ணணீறீந்து
தன்னிகரில்லாதோங்குஞ்சந்திரகிரியுமற்றும்
பன்னகர்களிற்சேர்ந்துற்றோர்பலர்க்குநல்லருணீறீந்து
நன்னலக்கிளைஞர்மேவுநகர்தொறும்பரிவிற்சென்றே. ௩௪

அகிலாண்டபுரத்துமாங்கண்டுத்துளநகர்கடோறும்
புகழ்மிகுவள்ளலெய்தப்போற்றிமகிழ்ந்தவர்களெல்லா
மகமகிழ்வுடனேநல்குங்காணிக்கைபருளினேற்றுத்
தகவுடனவர்கட்கெல்லாந்தருமுறைவெண்ணீந்தே. ௩௫

பாஞ்சாலநகரில்வீரபாண்டியனெதிர்சென்றேத்தத்
தாஞ்சால்பினெய்திமிக்கதையுடன்வெணணீந்து
தேஞ்சாலியுகுக்குந்தாலஞ்செறிவளநாட்டையாளு
மாஞ்சாலியுவந்துநல்குங்காணிக்கைமகிழ்வினேற்றே. ௩௬

சீலமார்நெறியினுற்றோர்சென்றடிபணியவாழ்த்திக்
கோலமாநகரினபக்கற்குளிர்தருபொழிலின்மேவ
ஞாலமீதுயர்ந்தசீர்த்திநாட்டுங்கெசசலப்பபூமன்
சாலும்பல்லியங்களோங்கத்தளத்துடன்வந்துகண்டே. ௩௭

கண்டகமகிழ்ந்துபோற்றிக்கனிவுடன்கோவின்மேவித்
தொண்டரும்மற்றெவர்க்குமிக்கசுவைதிகரமுதுநல்கிக்
கொண்டனேர்கரத்தனுங்கோர்நகரமுங்கொடுத்துப்பின்ன
ரெண்டருபொருள்கள்யாவுமீந்தனனென்பமாதோ. ௩௮

மனமிகுமகிழ்வினேற்றமன்னனுமேற்றுளோர்க்கு
நனியுவந்தாசிகூறிநன்னலக்கிளைஞர்நாளும்
புனைநலமாகமேவுநகரங்கடோறும்போந்தாங்
கனைவருமகிழ்ந்துநல்குங்காணிக்கையன்பினேற்றே. ௩௯

செந்நெனன்னகரிற்பாங்கர்சோநலுங்கொடையாமமிக்க
மன்னர்மன்னவனெருட்டப்பபூபதிவந்துபோற்றி
நன்னலமிகுந்தகோவினண்ணிப்பின்வந்தோர்க்கெல்லா
மன்னமுமீந்துவேண்டும்பொருள்களுமனபாலீந்தான். ௪௰

சுந்தரர்மகிழ்வினேற்றத்தொன்னகர்தனனிலுள்ளோர்
வந்தடிபணியவாழ்த்திவளஞ்செறியவ்வூர்நீங்கிக்
கொந்தலர்சோலைநாறுங்குயிலொடுமயில்கள்கூவ
விந்திரனகரமென்னுமெழின்மெட்டுக்குண்டினபாங்கர். ௪௧

பங்கரினுயர்வான்மிக்கபனிமலர்ச்சோலைதன்னிற்
றீங்கறவத்தோருற்றசேனையொடிருக்குங்காலை
யோங்கியநிதியம்பெற்றவுயரளகேசன்மானத்
தாங்கியசெல்வமுற்றோர்சகலருமிசைந்தொன்றாகி ௪௨

கொடிகுடைவரிசையாவுங்கொண்டெதிர்சென்றுபோற்றித்
திடமிகுநகரினுய்த்துச்சேர்ந்தவர்க்குணவுநல்கி
மடலவிழ்தாரினார்க்குமகிழ்பல்காணிக்கையீந்தாங்
கிடங்கள்பலவுநல்கியினிதுறவிருந்தபோழ்தின். ௬௩

சுந்தரர்மனதுவந்துதுகளறுதிருநீறள்ளி
வந்தவரெவர்க்குநல்கிமகிழ்ந்துபல்வசனங்கூறி
யந்தநன்னகரைநீங்கியருட்கயிலாயநாதர்
சிந்தையினுவந்துவைகுஞ்சிறந்தபால்வனத்தினெய்தி. ௬௪

அருண்மிகுங்கைலைநாதனையன்னோடானந்தவல்லி
மருமலர்ப்பதங்கள்போற்றிமகிழ்ந்துதோத்திரங்கள்செய்து
பரிவுடனிருக்குங்காலையப்பதிதனனில்வாழ்வோ
ரருமையிற்சென்றுபோற்றியன்புடனழைத்துவந்தே. ௬௫

வந்தவர்தங்கட்கெல்லாமவரிஷசயின்விருந்துசெய்து
சுந்தரமூர்த்திக்காண்டுதுகளில்காணிக்கையீந்தார்
சிந்தையின்மகிழ்வாலேற்றத்திருநகருறைவோர்க்கெல்லா
மந்திரமுறையினவெண்ணீறருளுடன்வழங்கிப்பின்னர். ௬௬

அவ்வளநகரின்பாங்கரணிகிளர்நகர்கடோறுஞ்
செவ்விதினுற்றுங்குற்றோர்சிறப்பவர்க்கவேண்டி
யொவ்வியீதவசமயாவுமுவந்துநன்காகவாங்காங்
கெவ்வமில்களஞ்சியங்களிசைத்தநிறைசெய்தே. ௬௭

நால்வருணத்துளோருநவிலரும்பொருள்களீந்து
சாலவும்வணங்கியேத்தத்தகவுயாசுந்தரேசா
கோலமுன்னெயிற்றிற்கொண்டகுவலயம்வலஞ்செய்தின்ப
மேலதாயுவந்துகூவனகரிடைமேவுங்காலை. ௬௮

அந்நகர்தன்னிலுள்ளோரனைவருமெதிர்சென்றேத்த
நென்னிறைபண்டிமிக்கநிரைநிரையாகமேவப்
பொன்னொடுமணிகள்யாவும்பொருவறுசாலைசேர்த்து
நன்னலத்துடனேயந்தநகரிடையிருந்தார்மாதோ. ௬௯

புவிவலஞ்செய்தபடல-முற்றிற்று.

ஆ படலம் ௧௮-க்கு திருவிருத்தம் ௯௱௮.

உ

சிவமயம்.

# மோக்கப்படலம்.

சீர்மிகுசுந்தரேசர்திகழ்மடபதிசெய்தாங்கட்
பேர்மிகுமறையோருண்ணப்பிறங்குசத்திரமுண்டாக்கி
யேர்மிகும்பண்ணையாவுமினிதுறவமைத்துவெற்றித்
தார்மிகுமார்பர்நெஞ்சிற்றனியறமற்றலையென்றுன்னி. ௧

பற்பலசமயமென்னப்பகரிருளகற்றுமபானு
தற்பரமானவீசனெனமறைசாற்றுமென்னப்
பற்பலர்க்கையந்தீரப்பகர்ந்தானிலத்திற்சைவ
நற்சமயத்தையென்றுநன்குறவிருத்திசெய்தே. ௨

சேர்ந்தபல்லுயிர்க்குநாளுந்திகழ்முதல்காந்தனையக்
கூர்தனதானமனைபாற்கொடுத்தினிதாற்றுநாளி
லார்ந்தசுந்தரர்மேனுனிமருவியகுமரசாமி
தேர்ந்துபன்னூலுநெஞ்சிற்செருக்கடைந்திருப்பதோர்ந்தே. ௩

மைந்தனையழைத்துநீயிம்மனைக்கொள்வதுதகாதா
னிந்தையீதகற்றுயென்னநெறிமறுத்துரைத்தலோடுந்
தந்தையுமுனிந்துநோக்கத்தனையனுவியும்விண்சேரச்
சிந்தையுட்கலங்கியன்னோன்றனைச்சமாதியிற்சேர்த்தாரால். ௪

சுந்தரரருளான்மற்றோர்சுதனெனும்பாப்பையாவுந்
தந்தனனிராமலிங்கசாமியுந்தகையாற்பின்னு
மைந்தர்கள்சிலரையன்பின்மகிழ்ந்தினிதிருக்குங்காலை
முந்தயனவிதியாற்பாப்பையாவுயர்மோடசமுற்றான். ௫

அன்னவனறனக்குவேண்டுஞ்சடங்குகண்முறையினாற்றி
யின்னியற்றனயனசேயர்க்கியைந்தசாத்திரங்களியாவு
மின்னியமந்திரங்கண்மற்றவுமகிழ்விற்சொல்லி
யன்னநற்றுணமென்றுமருளுடனியற்றுநாளில். ௬

இந்நிலத்துயர்ந்தோர்க்காருமெழிற்சமாதியினல்லோகந்
தன்னிற்றுமிருத்தற்குமனித்தகுமுறையரங்கிசைத்து
மன்னியசுதன்சேய்தன்னைமகிழ்வுடன்றழுவியார்க்கு
நன்னலவசனந்தோடுமாசிகணவிறல்செய்தே. ௭

## வேறு.

ஆனகலியுகநாலாயிரத்துத்தொள்ளாயிரத்திணேழாகியவட்செயந ல்லாண்டிற், பானுதநுவினின்மேவுஞ்சேயின்வாரம்பகர்கேட்டையன் றுதயகாலந்தனனில், வானவருமுனிவர்களுமலரின்மாரிவழங்கவிந்தமா நிலத்தோரெவருமபோற்றக, சாமாதிகுபல்லியங்களிசைப்பமிக்ககவின பெறச்சென்றவ்வரங்கிற்களிப்பால்வைகி. ௮

இவ்வரங்கிற்செய்யசமாதிபிறைவையிருப் பதைமேடாயமண்டலம் பின்றிறத்தல்வேண்டிற்று, செவ்வையாவதற்குமுனாதிறத்தல்கூடாதெ ன்றுபினுஞ்செப்புவனாவனைத்துங்கூறிப், கொளவையாகள மனத்தர்புல னைடிக்கிசெயயகமலமையாமீதுாடக்காட்டிச்சோதி, யெவ்வயறுபநத் திலிருவினையுநீத்தாங்கியமரியா ரமகைக்கெய்தலுற்றான் ௯

அனையகண்டிராமலிங்கசாமிப்பிள்ளையையவறநானமுறையிற்சடங்க ளைத்துமாற்றி, புனையருள்செய்திநனபதுமண்டலமாப்பூசைமுடிந்தநதற் பின்றிருக்கோவிறிறாததுபாரக்கப், புனேர்கரிலாவிலிங்கவுருவமுமாநங்கு லத்திற்குன்றேன்றக்கண்டுபோற்றிப், கலியுடனேநிரிகாலபூசையென் றுங்களிப்புறச்செய்தனரிமிகுத்தகருணையானே. ௧௰

## வேறு,

இன்புறுந்தேவிமரிதுறைப்பகோவிலை
மின்போலெங்குமிளிரப்புதுக்கியே
முன்பிரசிரத்தமண்டபமுமமைத்
தன்பின்மாமண்டபமுமமைத்தரோ. ௧௧

கூறுதற்கரியதாயகோலங்கொள்
ளாறுகானமண்டபமமைத்துப்பின்
வேறுவேறுவியன்மண்டபங்களுந்
தேறுஞ்சிங்கையுளாரொராக்கியே ௧௨

முன்னவர்க்கியைகோவிலின்முன்னரிற்
பன்னலந்தருவாசியப்பண்ணொலி
நன்னலத்தொடுநாளுமுழங்குதம்
மின்னலற்றவரீட்டுதல்செய்தரோ. ௧௩

அனையசுந்தரமூர்த்தியாலாதியி
னனிமகிழ்ந்தவனுட்டுமனக்கொடி
யினிதினேங்கவிருநிலத்தெங்கணும்
புனிதமிக்கபுகழ்சிறந்தோங்கவே ௧௪

அன்னதானமவனியுளோர்க்கெலா
மின்னறீரவினிமையினல்கிமெய்
துன்னுநெஞ்சந்துறவுபொருந்தியே
மன்னர்யாரும்வணங்கிடவாழுநாள். ௧௫

வேறு.

தமதிளைமலர்த்தாணெஞ்சிற்புரிந்தருடம்பியான
குமரசாமியின்வலத்தார்கூடரும்பொருள்கணேடித்
தமரர்கள்வாழுந்தெய்வாலயகபுரத்திற்சார்ந்தாங்
கிமயநேருயர்சிமிக்கவெழிலன்மனையிசைத்துப்பின்னும் ௧௬

பண்ணைகள்பலவுஞ்சேர்த்துப்பாண்டில்களொருவோடாக்க
ளெண்ணிலாதனவாங்கிப்பவிரயத்துத்தங்கிளைஞருள்ளார்
நண்ணுறப்புரிந்துபின்னுநாடொறுமுறத்தையோம்பி
மண்ணுலகனைத்துஞ்சீர்த்திவளர்வுறவைகுறுநாளில் ௧௭

செகமதிற்றிருவிராமலிங்கதேசிகர்பினன்பா
லகமதிலுவந்துசீர்சேரருணையிலன்னதானப்
புகழ்பெறுமடமொன்றாக்கிப்பொருவறவனமெஞ்ஞான்று
நிகழ்வதாயியற்றிமிக்கநெறியுறவாழுநாளில் ௧௮

வேறு.

தரணிதன்னிலைவலஞ்செய்துநக்குவர்
பரவுகின்றபலநகரங்களின்
மருவியாங்கவரன்பின்வழங்கிய
பொருவில்காணிக்கைப்பொன்மகிழ்ந்தேற்றரோ ௧௯

மன்னர்மற்றோர்மகிழ்வின்வழங்கிய
வுன்னரும்பொருளேற்றுண்மகிழ்ச்சியா
லன்னதானமெஞ்ஞான்றினுமன்பினீங்
துன்றுஞ்சேதுவிலுற்றுநீராடியே. ௨௰

தேவர்தேவன்றன்சேவடிபோற்றிமீண்
டாவலாகவருணகிரைசேதுவின
காவலென்னுறைகார்தவழிஞ்சிசூழ்
தாவின்மாநகர்சார்ந்தபொழுதினே ௨௧

அந்நகர்க்கிறைபண்புடனேசேனையோ
டின்னறீரவெதிர்சென்றுகாண்டலுந்
துன்றுமன்பிற்றுலங்குஞ்சனத்துடன்
மின்னவிர்க்கொளரண்மனைமேவியே. ௨௨

அரசிருந்தருமாசனபீடமுற
வரிசையிற்பலகோடியர்சந்தவன்
விரைமலர்ச்சரண்போற்றவிளங்கிய
திருவுளத்தினு மகிழ்ச்சிசிறந்தரோ. உ௩

மாலூரக்கனிக்குண்டிகைபின்வருந்
சாலுமாநகரெவர்க்குந்தகுமுறை
சீலமானதிருவெண்ணீறிவதை
ஞாலமன்கண்டிநரெருமகிழ்ந்தரோ. உ௪

வேறு.

ஆனையவாகியபூதியின்குடிக்கைகமையயாசுவைத்துறமேநாக்கி
நனிநிறைந்துறுஞ்செயலினையுணர்ந்திறைநம்பரன்செயலென்னுப்
புனைமலர்ப்பதம்போற்றிவந்தவர்க்கெலாம்போககமினிசிந்து
கனிவிற்பற்பலபொருள்களுங்கொடுத்திடக்கருத்தினின்மகிழ்ந்தேற்றே

சேதுகாவலன்றனக்குவந்தாசியுஞ்செய்துகுண்டிகைமீதிற்
பூதலத்தினிற்கண்டவரெவர்களும்போற்றுநல்செயவாழ்த்திக்
காதலோடுதம்பதியினிலெய்திடிக்காசினியவர்க்கெல்லாம்
போதுறும்படிமுனர்புரியறத்திலுமும்மடிபுரிந்தாரால். உ௬

கார்க்குவந்திசைகாட்டியசரதத்தினர்கனிப்புடனொருநாளிற்
சீர்த்ததம்பியோரருளிபசுபர்களிற்றிறழ்வுறுகலைதேர்ந்த
கூர்த்தநன்மதியுடைப்பழனிக்குமாரசாமியைக்குணத்தன்பாற்
பார்த்துமந்திரமுறைகண்மற்றுள்ளவும்படிவுறவுறச்செய்தே. உ௭

கலிநாலாயிரத்துத்தொள்ளாயிரத்தின்மேற்கழனறமபத்தெட்டாகும்
பொலிவுறுநளவருடந்தைமதியொளபான்புடமெய்திசேய்நாளி
லிலகுந்தேவருமுனிவரும்புகழ்நதிடயாவரும்பணிந்தேத்த
வலகிலாச்சுகமருள்சமாதியினிடையடங்கினாருண்மிக்கோர். உ௮

ஆனையவாறுணர்ந்தேபழனிக்குமாரசாமியன்புடனுங்கவ
முனைமுறைப்படிச்சடங்குகள்யாவையுமுடித்துப்பினனுயர்கோவிற்
வினையகற்றினோர்தமக்கமைத்தென்றுநால்விளம்புபூசனையாற்றி
யினியவேவாதனைதானமுஞ்ஞான்றினுமினிதுறமகிழ்ந்திட்டே. உ௯

பன்னருந்திறற்படையுடையசுராதம்பதியையவீட்டியவேலோனா
றன்னுநற்றிருச்செந்திலம்பதியிடைத்தூயநன்மடஞ்செய்தாங்
கன்னதானமெஞ்ஞான்றினுநிகழ்வுறவருள்புரிந்தன்பாக
விந்நிலத்தினிற்புகழ்பரந்துலவநல்லின்பமதுடன்வைகி. ௩௰

முன்னுளோர்புரிமுறையினினகரங்கண்முழுவதுமினிதெய்தி
மன்னர்மற்றுளோர்யாவரும்மகிழ்வுடன்வழங்கியபொருளாலுந்
துன்னும்பண்ணைநன்னிலங்களின்விளைவிற்றுலங்கியபொருளாலு
மன்னதானமேமுதலவெண்ணான்கறமருளியாங்கமர்நாளில். ௩௧

மனதுவந்துநற்றுவாதசாந்தந்நல்மருவிநான்முறையாகக்
கனிவிற்சொக்கலிங்கத்துடனேகபறகண்ணனிபொற்பதம்போற்றி
யினிதினோரிடத்திருந்தவனுமறவரெவர்க்குமோதனநல்கிப்
புனிதவாசகங்கேட்டுவந்தவாகெல்லாமபோனகமினிதீந்தார் ௩௨

இனையதன்மையையுணர்கலெக்கட்டருமெழிற்றுளைத்தனக்கார
ரனைவரும்பரவந்நகர்மார்தர்கள்யாவருமவணெய்த
வினையின்மாதவர்திருமுகநோக்கிநீர்விருந்திவணெல்லோர்க்கு
நனியருந்துதற்கருளுதிரெனவுயர்கருத்தர்கணவிக்காலை. ௩௩

ஆதிசுந்தரர்தமைநினைந்துயாவெணணீறன்னம் திண்மிசைதூவிக்
காதலாயவணவந்தவர்தமக்கெலாங்களிப்புறவனநல்கி
மீதவோதனந்தனையுணப்பலரினும்வேண்டுமென்றிடவீது
நாதனார்செயலெனத்துணைத்தனத்தினர்நனிமனமகிழ்வெய்தி. ௩௪

ஆயபற்பலபணிதிகளாடைகளம்பொனுமிகநல்கி
மேயமேல்வரகல்வுறவவ்விடைமேவினோர்க்கருணல்கித்
தூயதம்படைசூழ்வுறப்பல்லியந்துவைவட்டவந்நகர்நீங்கி
மாயைநீத்தவர்கூடவாமாநகரிலட்டமகிழ்வினவைகினர்மாதோ. ௩௫

வைகியவ்வயின்வருபவர்தமக்கெலாமகிழ்வினோதனநல்கித்
துய்யசீர்த்தியெய்நாட்டினுமபரவநற்சுகமுடனவைழ்நாளின்
மெய்கொள்சுப்பையசாமியையழைத்துநால்விதிமுறைகளுங்கூறி
வெய்யமாயையினபற்றறவீசனைவிரும்பித்தம்மகஞ்சேர்த்தே. ௩௬

வேறு.

சொல்லுங்கலிநாலாயிரத்துத்தொள்ளாயிரத்தேழ்பத்தாண்டிற்
செல்லுமபிரசொற்பதிவருடந்திகழாவணிமூவேழ்திகதி
வல்லசெவ்வாய்க்கிழமையன்றுவரங்கொள்பழனிக்குமார்சாமி
யல்லலகல்சமாதியினிலடைந்தாரரனருட்கணியாயே. ௩௭

தந்தையடையச்சுப்பையநற்சாமிமுறைகடவிராமற்
சிந்தைகளிட்பாற்சடங்கனைத்துஞ்செய்துமுடித்துமுன்முறைபோ
லிந்தநிலத்தினெவ்வயினுமெய்தியடைந்தோர்க்கருளீந்து
முந்தபுரிந்தோர்தம்மினுமும்மடங்கோதனதானம்புரிந்து. ௩௮

தேவர்க்கிறைவன் பயந்தசெழுங்கொடியைமணந்துதேவரெலா
மாவலுடனேபோற்றிசெயவாறுனனத்தோன்மகிழ்ந்தமருந்
காவில்பரங்குன்றத்திலன்னதானமடமொன்றுண்டாக்கி
மேவுமவர்கட்கெப்போதும்விரும்பியனகல்கிடவுய்த்தே. ௩௯

ஆதியுயர்சுந்தரமூர்த்திக்கன்பாற்பூசைதினநடத்தி
நீதியுடனேமற்றவர்க்குநெறியிற்பூசைமுறையாற்றிக்
காதலுடனெண்ணுன்கறமுங்கனிவாறபுரிந்துகளிபெய்தி
போதுசுதாரமௌனகுருசாமிக்கனைத்துமுறைசெய்தே. ௪௰

## வேறு.

சீர்சிறந்தகலிநாலாயிரத்தின்மேலாய்ச்செடபுந்தொள்ளாயிரத்தெண்பத்தெட்டதாக,வார்சருவசித்துவருடத்திற்பாலுவருட்டுலாந்,தனிலிருபத்திரண்டாந்தேதி, சேர்செவ்வாய்க்கிழமையிற் சுப்பையசாமிசெகமாயைதீர்ந்தரன்செம்பதத்தையுன்னித், தீர்வுறுநற்சுகமருள்சமாதிதன்னிற் சேர்ந்தனராற்றேவாமலர்மாரிபெய்ய. ௪௧

## வேறு

அத்தரடங்கமவுனகுருசாமியருளாலாமுறையே
சித்தமகிழ்வாலியற்றியென்றுந்திகழ்பூவரசர்போற்றிசெய
முத்தராஞ்சுந்தரமூர்த்திமுருகார்மலர்த்தாணெஞ்சில்வைத்து
நத்திவருவோர்தமக்கெல்லாநனகினுணவாங்கமுதீந்தே. ௪௨

முன்னோர்புரிந்தமுறைவழியேமுநீராடையுலகனைத்துந்
தந்நேரில்லார்சென்றெவருந்தருமபல்பொருளுமேற்றுநகர்க்
கெந்நேரத்திலணணிலர்களாய்தினுலுமினிதுறநல்
லன்னமொடைமுதற்பலவுமருளினுடனுங்கருள்செய்தே. ௪௩

அன்பாலறத்தையோம்பித்திருவண்ணுமலையிலருளாரு
மின்பாலமரவமர்ந்தருணீளவேணியரனசன்னிதிப்பாங்க
ரின்பாலடைந்தோர்க்கிருக்கையுமாயிடர்செய்பசிநோய்மாற்றுவதற்
கின்மாலமுதுமருளமனத்தருளான்மடமொன்றியற்றியே. ௪௪

அறியாமையினுற்றமைமதிக்காதவரைநெறியாலடர்த்துமனு
முறையாலரசுபுரியரசர்முழுதுநட்புமேலோங்கிப்
பிறியாதுறையக்கலைமாதுபிறங்குஞ்சென்னிகுளநகரி
லுறைசுந்தரசாமியையாங்கட்குபசாரத்தோடழைத்துவந்தே. ௪௫

அனையதிருச்சுந்தரசாமியருள்செய்முறையின்யாவர்களு
மினியதொழில்களியற்றுமெனவெழிற்சுந்தரரும்வியப்பெய்தி

முனையுள்ளவர்கள்புரியறத்துக்கதிகமென்றுபகுக்குமன்
னதானங்கண்முதலவெண்ணான்கறமுமியற்றியமர்நாளும். ௪௬

மன்னுங்கலியேழின்றிலயயாயிரமென்றுநாந்தனவருடந்
துன்னுங்கதிரோன்கோலிருபான்மூன்றுந்திகதிகூர்நாளிற்
பொன்னைநிகர்க்குமௌனகுருசாமிபுவிமாயையைநீத்து
மினாரரன்றுடனோடிமிகுஞ்சமாதிமேவினரால் ௪௭

அடங்குமவுனகுருசாமிக்கன்டால்வாலசுந்தரராற்
சடங்குபலவுஞ்செய்வித்துத்தகுநன்முறையுஞ்சாற்றிமிகு
திடங்கொண்மனச்சுந்தரசாமிசென்னிகுளத்திற்சேர்ந்துதம
திடங்கொண்மடத்தினதானமென்றும்புரிந்தாங்கினிதுற்றார். ௪௮

மோக்கப்படல - முற்றிற்று.

---

ஆ படலம் ௰௧க்கு - திருவிருத்தம் - ௯௮௬.

வாலசுந்தரர்

## புண்ணியபரிபாலனப்படலம்.

அகமகிழ்ந்தாளுமத்தன்சமாதியிலடைந்தோடுஞ்
செகமெலாம்புகழும்வாலசுந்தராதியக்கங்கண்டு
மிகுபுகழ்படைத்ததங்கணமரபுளோர்விருப்பிற்கூடி
முகமன்களபலவுங்கூறிமுகமலரொளிரச்செய்தே.

யாவருங்கூடியோசித்தெழிலுறைவளர்த்தர்கேற்ற
தாவருங்குணத்தான்மிக்கோரெவரெனச்சாற்றுங்காலைச்
சேவுயர்துவசனன்பன்சென்னமரெட்டிபட்டி
மேவருணாசலப்பேர்வளன்மிக்கானென்றார்சில்லோர்.

சகலருமிசைந்தேயன்னோன்றன்னையாங்கழைத்துநீயே
யிகழ்வறுங்குமாரசாமியெழிற்றுரைசாமியன்பிற்
றிகழுஞ்சுப்பையசாமியுடன்சிறப்புறுமித்தன்மஞ்
செகமெலாம்புகழுற்றேநடத்துதல்சீர்த்ததென்ன.

அனையவரிசைந்துவாலசுந்தரருளினாலே
முனையுளோர்புரியறத்தின்மும்மடியதிகமாகப்

புனைநகர்தோறுஞ்சென்றங்கட்பொருந்துறுபொருள்களாலும்
தனைநிகரில்லாவன்னதானநாடொறுஞ்செய்வாரால் ௪

மன்பதைபுரக்குமாற்றால்வாலசுந்தரருமிக்க
வன்புடனுயர்பல்லக்கினமர்ந்துபல்லியங்களோங்கத்
தன்கிளைச்சுற்றமுற்றோர்சகலருஞ்சூழ்ந்துசெல்ல
மின்கிளரொளியிற்பற்பல்விருதுகளுடனெழுந்தே. ௫

மனுநெறிமுறையினிந்தவையகந்தனையாளுங்
கனைகழலரசர்மற்றோரியாவருங்கண்டுபோற்றப்
பனிவளர்மதியமென்னப்பண்புயர்நகர்கடோறும்
புனிதமதாகச்சென்றுபுனைவெண்ணீறுமினிதினல்கி. ௬

அணியுடனுங்காங்குற்றோரளித்தநற்பொருள்களெல்லா
மிணையிலாமகிழ்வினோற்றுங்கிசைந்தபண்டிகண்மீதேற்றி
மணிமிகக்கணகணென்னவொலிப்பமாக்கங்கடோறுந்
தணிவிலாக்களஞ்சியங்கணிறைவுறச்சாருமென்றும். ௭

வடக்குவேங்கடங்குணக்கின்வாரிதென்பொதிகைபின்னுங்
குடக்குயர்கடலுமென்னக்கூறியபரப்பினெங்குந்
திடத்துடன்பிலுநதஞ்சீர்த்திசெலுமிடந்தோறுநின்றே
யடக்கருமபொருட்காணிக்கைபாகவாங்குறுவதாமால். ௮

வாலசுந்தரருஞ்சிந்தைமகிழ்வினுடனைத்துமேவிச்
சீலஞ்சேர்குடிகட்கென்றுஞ்சிறப்புறவாசிகூறிக்
கோலமார்நகரினுற்றுக்கொண்டனேர்முழவதிர்த்து
மேலவர்முறையினாற்றும்விதிப்படியறங்களசெய்தே. ௯

ஆதிசுந்தரமூர்த்திக்குள்ளன்பின்முக்காலபூசை
நீதியினியற்றிமுன்னோரியற்றியநெறியினாலே
காதலாயச்சதுரவோங்கட்கினிதுடன்கடகத்திங்கட்
போதுவோர்தமக்குவேண்டும்பொருள்களுமினிதினீந்தே. ௧௰

மீண்டவர்வரும்போதன்புமீதுறவிருக்கச்செய்து
தாண்டவம்புரியுமீசன்றன்னடியவர்மற்றோர்க்கும்
வேண்டியவாறினெண்ணெய்த்தானங்கள்விருப்பிற்செய்து
காண்டகமேலோர்சிந்தைகருதியவுணவுமீந்தே. ௧௧

சுந்தரமூர்த்திசெய்யதுணைமலர்ப்பதங்களன்பாற்
சிந்தையிற்கருதிநாளுஞ்செல்வமேன்மேலுமோங்க

வந்தவரெவர்க்குஞ்சிந்தைமகிழ்வுறவசனால்கி
யிந்தமாநிலத்திலென்றுமிசையுறவாழ்வதாமால். ௧௨

பல்வளஞ்செழிக்குமெட்டிக்குண்டெனும்பதியிலென்றுஞ்
செல்வமென்மேலுமோங்கச்சிறக்குஞ்சுப்பையபூம
னல்வளமனையினுற்றநாவலர்தமைக்காத்தாற்போற்
செல்பவர்வறுமைதீரத்தினமனமுதவுவாரே. ௧௩

மங்கைபங்கமர்வோன்மேனாளருளியவரத்தினாலே
தங்களின்மரபின்வந்தோர்தமக்கெலாம்புகழுண்டாகத்
திங்கண்மும்மாரிபெய்யச்செகமெலாஞ்செழிப்புற்றோங்கத்
துங்கமிக்கன்னதானநாடொறுந்துலங்குமாதோ. ௧௪

மாதவர்முதலாயிந்தமாநிலத்துயர்ந்தோர்க்கெல்லாம்
போதுறவன்னநல்கும்புண்ணியசரிதந்தன்னை
நீதிசேர்முனிவராலுநிகழ்த்துதற்கரிதாமஃதை
யோதினேனெனதுபுன்மையுயர்ந்தவர்தெரிக்குமாறே. ௧௫

சுருதிகள்வாழியீசன்றுணைமலரடிகள்வாழி
யரியயனமரர்வாழியருண்மிகுமுனிவர்வாழி
பொருவிலாச்சுந்தரேசன்பொற்பதம்வாழியன்னோர்
மரபுளோரெவரும்வாழிவழங்கனதானம்வாழி. ௧௬

செந்நெலின்பணைகள்சூழ்ந்திலங்குவளைகரம்வாழி
மன்னவர்வாழியிந்தமாநிலமுழுதும்வாழி
யின்னலில்மானநூலையினிதுறப்பகர்வோர்கேட்போர்
நன்னலமிகுந்தேயெந்நாளினும்வாழ்கமாதோ. ௧௭

வாலசுந்தரர்புண்ணியபரிபாலனப்படல-முற்றிற்று.

ஆ படலம் ௨௰ - க்கு திருவிருத்தம் - ௬௯௩.

ஸ்ரீ மத் - கூவலப்புரம்

அன்னதானமகத்துவபுராண முற்றிற்று.

சுந்தரமூர்த்திசுவாமிகளது

திருவடிகள் வாழ்க.

---

மகாமகோபாத்யாய, டாக்டர்
உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்